கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



"எனக்கு யுவன்தான் குரு!"

KALKI • 07.12.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்





ஐஸ்வர்யங்களின் அதிதேவதை!



• சென்னையா... மதுரையா..?

-கனிமொழி ரகசியம்

• விவசாயத்தில் விளையும் மின்சாரம்!



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்


தென்னிந்தியாவின்
அதிகபட்ச கலெக்ஷன்கள்!
Diamond & Antique Festival
Nov 23rd to Dec 14th
Highest Collections of
Diamond, Antique, Real & Polki Stone Items
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
கோவை புதிய கிளை மற்றும்
ஈரோடு, திருச்சி கிளையில் மட்டும்.
Shop online at www.sktm.in

உடையழகு... நடையழகு

''வாரணம் ஆயிரம் படத்தில் வரும் 'முன்தினம் பார்த்தேன்' பாடலில் நான் போட்ட ட்ரெஸ் எல்லாம் மறக்கவே முடியாத அனுபவம். 60-70களில் பாப்புலரான டைட் உடைகள் மற்றும் உயரக் கொண்டைகள்... எங்க அம்மாவோட காலேஜ் ஃபோட்டோஸ் பார்த்திருக்கேன். அப்படித்தான் ட்ரெஸ் பண்ணியிருப்பாங்க'' என்கிறார் ஜெயா டீ.வி நியூஸ் ரீடர் அபிராமி.

செய்தி வாசித்த நேரம் போக அம்மணி விசிட் அடிக்கும் துறைகள் மாடலிங், சினிமாக்களில் குட்டியூண்டு ஃப்ரண்ட்லி ரோல்.

''மாடலிங் எனக்கு ரொம்பப் பிடிக்கும். சுமார் ஒன்றரை வருடம் இந்த ஃபீல்டில் இருக்கேன்'' என்று சொல்லும் அபிராமி பி.டெக், எம்.எஸ். பட்டதாரி. (ஹீரோயினின் தோழி என்றுமே புத்திசாலி.) இவர் எம்.எஸ். முடித்தது யு.எஸ்.ஸில்.

அமெரிக்காவில் அபிராமியின் ஃபேஷன் அனுபவம் எப்படி?

''அங்கே காலேஜ் கேர்ள்ஸ் இஷ்டத்துக்கு ஹாலிவுட் ஸ்டார்ஸைப் பார்த்து inspire ஆகி ட்ரெஸ் பண்ணுவாங்க. Dress code எல்லாம் கிடையாது. ரொம்ப ரொம்ப ஆபாசமாக இருந்தால் மட்டும் காலேஜில் இருந்து திருப்பி அனுப்பிவிடுவார்கள். அதையும் தவிர அங்கே வெயில் வர்ற நாட்கள் ரொம்பக் குறைவு. ஸ்கின் தெரிய, சூரிய வெளிச்சம் உடல்ல அதிகம் படணும்னு ட்ரெஸ் பண்ணுவாங்க. (ஹைஹ!) மத்தபடி வருடம் பூரா குளிர் காரணமா 3-4 layer உள்ள உடைகள்தான் போடணும். நகம்கூடத் தெரியாது. அந்த அளவு covered. இங்கிருந்து போகும் இந்தியப் பெண்களும் சல்வார் கமீஸ், ஜீன்ஸுக்கு மாறுகிறார்கள். அங்கிருந்தபோது நவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தின்னா பட்டுப் புடைவை கட்டிட்டு கோயிலுக்குப் போவேன்.

வெளிநாட்டுப் பெண்கள் ஓடி வந்து கேட்பார்கள். 'இது என்ன ட்ரெஸ்? எப்படிக் கட்டணும்? ஹவ் நைஸ்? லவ்லி கலர்' என நீளமாகச் சொல்லிக்கொண்டே போவார்கள். 'எனக்கும் உங்க ஊர்ல இருந்து வாங்கிட்டு வாங்க' என்பார்கள்.

நம்முடைய பட்டில் இருக்கும் vibrant colours அவங்களைக் கட்டிப்

* அபிராமி



சேலை கட்டுவது

இந்த இதழ் அச்சேறும் நேரத்தில், மும்பையில் நடந்த வரலாறு காணாத் தீவிரவாத தாக்குதல் பற்றிய செய்தி வெளியாகியுள்ளது. அதனை வன்மையாகக் கண்டனம் செய்வதுடன் இந்திய இறையாண்மைக்கு விடப்பட்ட இச்சவாலை 'நாம் அனைவரும் இந்தியர்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வோடு எதிர்கொள்வோம். மும்பை மக்களுக்கு நமது ஆதரவையும் தெரிவித்துக் கொள்வோம். நாட்டுக்காக உயிர்நீத்த காவல்துறை அதிகாரிகளின் குடும்பத்துக்கு வீர வணக்கம் செலுத்துவோம்.

- ஆசிரியர், கல்கி

கல்கி

பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பாரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர் : **கதிர்பாரதி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

...ப்படி?

போடறது. ஏன்னா அவங்க உடையெல்லாம் pale, light colours தான்.'' நீளமாகத் தன் அமெரிக்க அனுபவங்களைக் கூறுகிறார்.

மாடலிங்?


''மாடலிங் ரொம்ப ஜாலி. ஏகப்பட்ட ஃப்ரண்ட்ஸ் கிடைப்பாங்க. ட்ரஸ் பார்த்துக், கவனமாப் போடணும். பிடிக்கலேன்னா நோ சொல்லிடணும். காம்ப்ரமைஸ் பண்ணினாத்தான் மாடல் என்பதில் எனக்குத் துளிக்கூட உடன்பாடு கிடையாது. நம்மை யாரும் எதுக்கும் வற்புறுத்த முடியாது. மிடில் ஏஜ், வயசான லேடீஸ்கூட மாடலிங் வர்றாங்க. காசுக்குக் காசு. Famousக்கு famous."

அபிராமி ஷாப்பிங் பண்ணுவது எங்கே?

"Fab India, கல்பத்ருமா, அப்பர் க்ரஸ்ட், பேஷன் ஃபோக்ஸ், Cottage Industries அப்படின்னு போய் வாங்கித் தள்ளுவேன்.''

- லதா சேகர்

தமது வீட்டுக்குப் பின்னே உள்ள அடுக்குமாடி வளாகத்தில், தமக்கென ஒரு தனி அலுவலகத்தை அமைத்துக்கொண்டு செயல்படுகிறார் கனிமொழி. காற்றும் மழையும் சென்னையைக் கலக்கிக்கொண்டிருந்த ஒரு நண்பகலில் கனிமொழியைச் சந்தித்தோம்...



சென்னையா... மதுரையா..?

மின்வெட்டு, விலைவாசி, இலங்கைப் பிரச்னை, எதிர்க்கட்சி தாக்குதல்கள், குடும்பப் பூசல்... என்று பல பிரச்னைகளை, இந்த வயதிலும் சமாளிக்கும் முதல்வருக்கு எந்த வகையில் உதவியாக இருக்கிறீர்கள்?

''கழகத்தைப் பொறுத்தவரை எந்தப் பிரச்னையானாலும் கலந்து பேசி, முடிவெடுக்கக்கூடியவர் முதல்வர் கலைஞர். கட்சியில் என் பங்கு என்ன என்பதை ஆராயும் அளவுக்கு நான் இன்னும் வளர்ந்துவிடவில்லை என்பதுதான் உண்மை. கட்சியிலுள்ள எம்.பிக்களில் நானும் ஒருவர்.''

அதிகார மையத்துக்கு அருகில் இருப்பதால் இந்தக் கேள்வி எழுவது நியாயம்தானே?

''தலைவர், உண்மையான ஜனநாயகவாதி. முடிவெடுக்கும்போது அடிமட்ட தொண்டர்கள் கருத்தைக்கூடக் கேட்பார். அந்தவகையில் என்னிடமும் கேட்கலாம். அதை, பொது அறிவிப்பு செய்ய வேண்டிய அவசியமில்லை. இதைப் பற்றியெல்லாம் நீங்கள் சொல்வதைப் போல, அதிகார மையத்துக்கு நெருக்கத்தில் இருக்கிறபடியால் மௌனமே சிறந்த நடைமுறையாக இருக்கமுடியும் என்பது என் கருத்து.''

இலங்கைப் பிரச்னையில், திருமாவளவன் நடத்திய உண்ணாவிரதத்தில் நீங்கள் கலந்துகொண்டது காங்கிரஸைச் சங்கடப்படுத்திவிட்டதாகச் சொல்கிறார்களே?

''ஓர் இனம் திட்டமிட்டு அழிக்கப்படும்போது கையைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. அதுவும் தமிழர்களின் நலனையே தமது பிரதான மூச்சாகக்கொண்ட தி.மு.க.வால் நிச்சயம் முடியாது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவாக அழுத்தமான குரல்கொடுக்க, எந்த மேடையையும் நாங்கள் பயன்படுத்திக்கொள்வோம். காங்

கிரஸ், இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நிலையை ஒன்றும் எடுக்கவில்லையே? இந்த நெருக்கடியான கட்டத்தில் புலிகள் விஷயத்தை நுழைத்துத் திசைதிருப்பக் கூடாது. அனைத்துக் கட்சி கூட்டமென்றால், காங்கிரஸும் திருமாவளவனும் ஒன்றாகத்தானே கலந்துகொள்கிறார்கள்.''

இப்போதைய சூழலில் தி.மு.க. சந்திக்கும் பெரிய சவால்?

''எங்களை நோக்கி வீசப்படும் அவதூறான பொய்ப் பிரசாரங்கள். உதாரணமாக ஒரு ரூபாய் அரிசி. மக்கள் வாங்க மாட்டார்கள்; வாங்கினால் விற்றுவிடுவார்கள்; கடத்தல்தான் அதிகரிக்கும் என்று எத்தனை பேச்சுகள், அறிக்கைகள். ஏழை எளிய மக்கள் ஒரு ரூபாய் அரிசியை வாங்கி ஏன் விற்க வேண்டும்? வெளியில் அதிக விலைகொடுத்து அவர்களால் வாங்க முடியுமா?''

அரிசி கடத்தல் செய்தி தினமும்



வருகிறதே?

''இருக்கலாம்; அதைத் தடுப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. ஏழை எளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு திட்டத்



தைக் கொண்டுவந்தால் அதைப் பற்றி அவதூறு பிரசாரம் செய்கிறார்கள்.''

அப்படியென்றால் அழகிரி... தயாநிதி... மோதலும் பொய்ப் பிரசாரம் தானா?

''என்ன பிரச்னை சொல்லுங்கள்... அழகிரி அண்ணன் எந்தப் பதவிகளிலும் இல்லாமல் கட்சிப் பணியாற்றி வருகிறார். கட்சி நலன்களுக்கு எதிராக தயாநிதி செயல்பட்டதாக, கட்சி மேலிடம் கருதியதால் அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். நாளை கட்சிக்கு விரோதமாக நான் நடந்தால் எனக்கும் அந்த நிலைதான். குடும்பத்துப் பிள்ளையாக இருந்தாலும், தலைவர் நடவடிக்கை எடுத்தது ஆரோக்கியமான அரசியல் இல்லையா? இந்த விஷயத்தில் தலைவர் வெளிப்படையாகவே பல செய்திகளை மக்கள் பார்வைக்கு வைத்திருக்கிறார். ஜெயலலிதா உட்பட யார் எந்தக் குற்றச்சாட்டுகளைச் சொன்னாலும், அதற்குத் தக்க பதிலை தலைவர் கொடுக்கிறார். அவரின் பதிலுக்குப் பதில் சொல்லாமல் இருப்பதிலிருந்து கழகத்தை நோக்கி வைக்கப்படும் பொய்ப் பிரசாரம் பளிச்செனத் தெரிகிறது.''



" குடும்பத்துப் பிள்ளையாக இருந்தாலும் கலைஞர் நடவடிக்கை எடுத்தது ஆரோக்கியமான அரசியல் இல்லையா? "

நீங்கள் சென்னை பக்கமா... மதுரை பக்கமா...?

''அறிவாலயம் பக்கம்தான்.''

தேவாரம், திருவாசகத்தைப் படிக்கக் கூடாது என்று பேசினீர்களாமே?

''இதுவும் மற்றொரு பொய்ப் பிரசாரம். எந்த இடத்திலும் அப்படிப் பேசவில்லை. இதுகுறித்து ஏற்கெனவே மறுத்தும் இருக்கிறேன். தமிழர்கள், தேவாரம், திவ்ய பிரபந்தம் போன்றவற்றைப் படிக்கக் கூடாதென எப்படிச் சொல்ல முடியும்? சங்க காலத்துக்குப் பின் பக்தி இலக்கியங்கள்தான் தமிழைக் காப்பாற்றின. 'கடவுள் மறுப்பு' என்று இருந்தாலும் தமிழ் மீதுள்ள காதலால், மொழி அழகு கொஞ்சும் இந்தப் பக்தி இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்பதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது. இந்துவாக இருந்தாலும் தமிழார்வம் காரணமாக சீறாப்புராணம் படிப்பதில் தவறில்லையே!''

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் அமைச்சர் ராஜா ராஜினாமா செய்து விசாரணையைச் சந்திக்க வேண்டுமென ஜெயலலிதா சொல்கிறாரே?

''டான்சி நில விவகாரம் உட்பட பல விவகாரங்களில், ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அவர் என்ன பதவி விலகி விசாரணையைச் சந்தித்தாரா? நீதிமன்றம் சொன்னபிறகுதானே பதவி விலகினார். ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஏற்கெனவே உள்ள நடைமுறைப்படி, பிரதமர் அலுவலகத்துக்குத் தெரிந்துதான் உரிமங்கள் வழங்கப்பட்டன. இதைப் பற்றி விளக்கமாக ராஜாவே பல அறிக்கைகள் விட்டிருக்கிறார். கலைஞரும் விளக்கமாகவே பதில் சொல்லியிருக்கிறார். இதுவும் கழகத்தை நோக்கிய மற்றொரு பொய்ப் பிரசாரம் தான்.''

- ப்ரியன்

பத்து வருடங்களுக்கு முன்பு மும்பையிலிருந்து கிளம்பிய மாதவன் போல அசலாக ஒரு தமிழர் மும்பையிலிருந்து தமிழ் சினிமாவுக்குள் நுழைந்திருக்கிறார்; கணேஷ் வெங்கட்ராமன். 'அபியும் நானும்' படத்தில் இவர்தான் த்ரிஷாவின் ஜோடி.




''ஆனால் விளம்பரங்களில் உங்களைக் காணவில்லையே?'' என்றால் புன்னகை செய்கிறார். ''அது படத்தோட மார்க்கெட்டிங் உத்தி. கதையோட பெரிய திருப்புமுனையா என் கதாபாத்திரம் இருக்கு. இதுவரைக்கும் தமிழ் சினிமாவுல எந்தக் கதாநாய கனும் இப்படி ஒரு கதாபாத்திரத்துல அறிமுகமாகியிருக்க முடி யுமானு தெரியலை. படம் வெளிவந்த பிறகு விளம்பரங்கள்ல

நடிக்க வந்த


என்னைப் பார்க்கலாம். அதுவரைக்கும் நானும் என் கதாபாத்திரமும் ரகசியமாவே இருப்போம்'' என்கிறார்.

''நான் மும்பையில இருந்தாலும் ஒரு தமிழ்ப்படம்கூட விடமாட்டேன். அப் படிப் பார்த்து ரொம்ப ரசிச்ச படம்தான் 'மொழி'. த்ரிஷாவோட எத்தனையோ படங்களை தியேட்டர்ல பார்த்திருக் கேன். ஆனா இன்னைக்கு நான் ராதா மோகன் இயக்கத்துல த்ரிஷாவோட ஜோடியா நடிப்பேன்னு யார் எதிர் பார்த்திருக்க முடியும்? உழைப்பும் விடாமுயற்சியும் இருந்தா எதுவும் சாத்தியம்னு தோணுது'' என்று தன் னைத்தானே பாராட்டிக் கொள் கிறார் கணேஷ்.

மும்பையில் ராதாமோகனும் பிரகாஷ்ராஜும் த்ரிஷாவின் ஜோடியாக நடிக்கும் கதாபாத்



திரத்தைத் தேடி அலைந்தபோது, தேர்வானவர் கணேஷ் வெங்கட்ராமன். ''நான் நிறைய விளம்பரங்கள்ல மாடலா நடிச்சிருக்கேன். ஓர் ஆங்கிலப் படத்திலும் கதாநாயகனா நடிச்சிருக்கேன். 'அபியும் நானும்' ஆடிஷனுக்காகப் போனபோது அங்கே மும்பை திரை உலகமும் டி.வி. உலகமும் கும்பலா இருந்தது. எல்லோருக்கும் ராதாமோகன் படத்துல த்ரிஷாவுக்கு ஜோடியா நடிக்கணும்னு ஆவல். இரண்டாவது முறையா போனபோது அந்தக் கதாபாத்திரத்தோட தன்மையை நல்லா உள்வாங்கிட்டு அதுக்கு ஏத்த மாதிரி



மிஸ்டர் இந்தியா!

உடையுடுத்திட்டுப் போனேன். என்னோட ஹோம்வொர்க் ராதாமோகனைக் கவர்ந்திருக்கும்னு நினைக்கிறேன். உடனே தேர்வாகிட்டேன்'' என்கிறார். '''அபியும் நானும்' ஷூட்டிங்குல பிரகாஷ்ராஜ் நிறைய அறிவுரைகள் சொன்னார். அவருடைய அனுபவத்துல அவர் பார்க்காதது இல்லை. அத்தனையும் என்கிட்ட பகிர்ந்து நிறைய புத்திமதிகள் சொல்லி எனக்கு ஒரு வழிகாட்டியா இருக்கார்'' என்கிறார்.

''நான் 'மிஸ்டர் இந்தியா' பட்டம் வாங்கினவன். த்ரிஷா 'மிஸ் சென்னை'. ரெண்டு பேருக்கும் மாடலிங் பின்னணி இருந்ததால உடனே ஒன்றிப்போக முடிந்தது. அவங்க உண்மையிலேயே நல்ல பொண்ணு. நல்லா மரியாதை கொடுப்பாங்க. சினிமாவுல நிறைய சாதிச்சாலும் அது அவங்க குணத்துல தெரியாது. ஒரு புதுமுக ஹீரோவா என்னை நினைக்கலை. தான் ஒரு பெரிய நடிகைங்கிற மாதிரி என்கிட்ட நடந்துக்கலை'' என்று, த்ரிஷா பற்றிக் கேட்டபோது கூறினார் கணேஷ்.

''பிடித்த நடிகர் யார்?'' என்றால் ''கமல்ஹாசன்'' என்கிறார். ''இனி அவர் சாதிக்க எதுவும் இல்லைங்கிற மாதிரி எல்லாவிதமான கதாபாத்திரமும் பண்ணிட்டார். என்னை மாதிரி புதுமுகங்களுக்கு அவர்தான் ரோல் மாடல். தமிழ் சினிமா மேல மும்பை நிறைய மரியாதை வைச்சிருக்கு. தமிழ்ப் படங்கள்ல சென்டிமென்ட் அளவா பயன்படுத்தறது அவங்களைக் கவர்ந்திருக்கு. இதனால்தான் இன்னைக்கு நிறைய தமிழ்ப்படங்கள் இந்தியில ரீமேக் ஆகிட்டிருக்கு'' என்கிறார்.

- செந்தில்

விவசாயத்தில் விளையும் மின்சாரம்!



* மகேந்திரன்

''விவசாயத்துக்குப் பாயும் தண்ணீரி லிருந்து மின்உற்பத்தி சாத்தியம்'' என்கிறார் எஸ்.மகேந்திரன். எப்படி?

''என்னோட பாட்டன் தாத்தன் காலத்து லேர்ந்து நாங்க பரம்பரை விவசாயக் குடும்பம். எங்களோட வெள்ளாமைக்கு பனிரெண்டரை ஹெச்.பி. மோட்டார் தண்ணி தருது. இரும்புக் குழாய் மேல உக்காந்து, தண்ணி கொட்றதையே ரொம்ப நேரமா பார்த்திட்டிருந்தேன். எம் மூளை யில அப்ப உதிச்சது Re-generation Electrical Power Plant. அதை உருவாக்கிட்டு கடந்த மூணு வருஷமா நான் மனு அனுப் பாத மேலிடம் ஏதும் இல்லை. இன்னமும் அதுக்கு விடிவு பிறக்கலை!'' விரக்தியுடன் பேசுகிறார்.

விழுப்புரம் மாவட்டம், வளவனூர் அருகே புதுப்பாளையம் கிராமம். டிப்ளமோ படிப்பில் எலெக்ட்ரிகல் தேர்ச்சி. அஞ்சல் வழிக் கல்வியில் பி.எஸ்ஸி. எலெக்ட்ரிகல் சயின்ஸ். இப்போது எம்.எஸ்ஸி. எலெக்ட்ரிகல் சயின்ஸ் படித் துக்கொண்டிருக்கும் இவர், இளம் வயதில் போலியோவினால் பாதிக்கப்பட்டவர்.

''ஸ்கூல்ல படிக்கும்போதே புதுசு புதுசா கண்டுபிடிக்கறதுல எனக்கு ஆர்வம் அதி கம். அப்பவே அறிவியல் கண்காட்சிகள்ல நெறைய பரிசு வாங்கியிருக்கேன். பாலி



டெக்னிக்ல தனியா எலெக்ட்ரிகல் (DEEE) படிச்சப்ப, அந்த ஆர்வம் அதிகமாயிடுச்சு. மோட்டார் பம்ப் செட் போட்டதும் எங்க அப்பா வரப்பு கட்டப் போய்டுவாரு. பீய்ச்சியடிச்சுக் கொட்ற தண்ணியவே நான் பார்த்திட்டு இருப்பேன். அப்பத்தான் எனக்கு இதுலேர்ந்து திரும்பவும் மின் உற்பத்தி பண்ணினா என்னன்னு மின்ன லடிச்சது.

நான் படிச்ச படிப்பு ரொம்ப ஒத்தா

சையா இருந்திச்சு. வீட்ல செலவுக்குத் தர்ற பணம், பார்ட் டைமா நான் ஏதாவது வேலைக்குப் போய்ட்டு வர்ற சம்பளம். இதை வெச்சு ஒவ்வொரு பொருளா பட்டறையில செஞ்சு வாங்கினேன். இரும்பு பைப்ப பெரிய வட்டமா செஞ்சு வந்தப்ப,



கிராமத்துல வண்டி ஓட்டப் போறியான்னு நக்கல் பண்ணினாங்க. கோபப்பட்டா வேலைக்கு ஆகாது'' என்கிறார் அவர்.

குறிப்பிட்ட கருவியில் கிண்ணம் போன்ற அமைப்புகள் உள்ளன. விவசாய பம்ப் செட் மோட்டார் மூலமாக வெளியேறும் தண்ணீர், அதன் விசையுடன் கிண்ணங்களின் மீது விழுகிறது. அப்போது, அந்த அமைப்பு சுழல்கிறது. இந்த இயக்க ஆற்றலானது, மின் ஆற்றலாக மாறும் வகையில் இக்கருவி அமைக்கப்பட்டுள்ளது.

''இதன் வாயிலாக விவசாயத்துக்கென செலவாகும் இலவச மின்சாரத்திலிருந்து, நாற்பது சதவிகித மின்சக்தி மீண்டும் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன'' என்கிறார்.

''விவசாயிகளுக்கு அளிக்கப்படும் இலவச மின்சாரத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சக்தியை அந்தந்தப் பகுதிகளுக்கே பயன்படுத்தலாம். இதுபோன்ற Re-generation Electrical Power Plant கருவிகளை ஒவ்வொரு விவசாய பம்ப் செட் மோட்டார்களுக்கும் பொருத்த வேண்டும். அப்போது மொத்த மின் பற்றாக்குறையை எளிதில் போக்கலாம். இதை அரசே ஏற்றுச் செய்ய முன்வர வேண்டும்.

இதற்கு அரசின் தடையின்மைச் சான்றிதழ் வேண்டி 2005ல் குடியரசுத் தலைவருக்கு மனு அனுப்பியிருந்தேன். அந்த மனு தமிழக அரசின் பார்வைக்குத் திருப்பி விடப்பட்டிருந்தது. 25.07.2006ல் 'தங்களது மனுவினைப் பரிசீலனை செய்ததில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதிய கண்டுபிடிப்புக்காக தடையின்மைச் சான்றிதழ் (NOC) வழங்கும் முறை ஏதும் இல்லை'' என்று பதில் வந்தது.

மனம் தளராது மீண்டும் அதே மனுவினை தமிழக முதல்வர், மின்சாரத் துறை அமைச்சர், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருக்கு 16.10.2006ல் சாதாரணத் தபாலில் அனுப்பி வைத்தேன். ஒரு மாதமாகியும் பதில் வரவில்லை. அதனால் அதே மனுவினை 15.11.2008 அன்று அனைவருக்கும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்துள்ளேன். தமிழக அரசின் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். மின் பற்றாக்குறையைப் போக்கிட நான் எடுத்திருக்கும் முயற்சிகள் பலிக்குமா? அல்லது கனவாகிப் போய்விடுமா?'' எனக் கேட்கிறார் எஸ். மகேந்திரன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

வட்டமேஜை

'அரசின் இட ஒதுக்கீடும், சலுகைகளும் மட்டுமே மாணவர்களிடம் ஜாதி - மத பேதங்களை அழித்துவிடாது. நமது கல்வி அமைப்புதான், அதைப் புகட்ட வேண்டும்' என்ற தலையங்கம் பளீர் சுளீர்.

- என்.சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

தேசத்துக்காகப் பாடுபட்ட வாஞ்சிநாதனை, சுயநலமே உருவான பிரபாகரனுடன் ஒப்பிட்ட கமலுக்கு, தராசாரின் பதில் சூப்பர்ப்!

- அரவக்குறிச்சிப்பட்டி எம்.அசோக்ராஜா, திருச்சி

ஜாலி ஸ்டோர்ஸ் மனத்தை பாரத்திலிருந்து இறக்கி லேசாக்கியது.

- எஸ். மீனா, ஸ்ரீரங்கம்

அரளிப்பூ சாகுபடியில் வருஷத்துக்கு ஒரு லட்ச ரூபா சம்பாதிக்கலாமா? யோசிக்க வைத்துவிட்டார் தேவகி பாலச்சந்திரன்.

- ஆர்.பி. சுந்தரி, பூனாம்பாளையம்

'கரன்ட் கட்' சமயத்தில்கூட 'ஷாக்' அடிக்கும் உண்மைகளைத் தெளிவாகச் சொன்ன லட்சுமி நாராயணன், வழக்கறிஞர் ராஜா கருத்துகள் நிதர்சன உண்மை!

- எஸ். அமிர்தா சௌந்தர், சென்னை-26

கல்லூரிச்சாலை செம கலகல! மாணவிகளின் ஒவ்வொரு அனுபவத்தையும் படித்தபோது 'குபீர்' சிரிப்புதான்.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

'ஹாஸ்பிடல் எத்திக்ஸ்' கட்டுரை எல்லோர் மனத்திலும் உள்ளதைத் தெளிவாக எடுத்துக் கூறியது...!

- உமா சுந்தர், ஸ்ரீரங்கம்

'மக்கள் கேட்காததையும் செய்வது தி.மு.க. அரசுதான்' என்ற ஸ்டாலினின் பெருமிதத்துக்கு தராசு அளித்தது தக்க பதிலடி.

- வே.ந.கதிர்வேல், வேலூர் - 6

சட்டக் கல்லூரி விவகாரம் படித்



நேரா



தேன். பண்பை வளர்க்கும் பாடங்களைப் (Moral Science) பள்ளியிலிருந்தே அகற்றி விட்டார்களே. அப்படி இருக்க, மாணவர்களிடம் பண்பை எப்படி எதிர்பார்க்க முடியும்?

- கிரிஜா ராகவன், கோவை - 36

பிரேமலதா, 'சீரியல் பார்ப்பது கிடையாது' என்று சொல்லியிருப்பது சந்தோஷமாக இருக்கிறது.

- என். பாலகிருஷ்ணன், மதுரை

'மலை'யோடு மோதும் மலர்விழியின் துணிச்சல் வியக்க வைக்கிறது. நியாயம் அவர் பக்கம் இருப்பதால், அவருடைய போராட்டம் நிச்சயம் ஜெயிக்கும்.

- என். பாலகிருஷ்ணன், மதுரை

சுபாஷ் சந்திரபோஸ் - எமிலி, காதல் கடிதங்கள் ஆழமானவை.

- கே.வி.ராமன், சென்னை - 73

காலங்கள் மாறினாலும் மாமியார் - மருமகள் கலாசாரம் மாறாததை எழில் வரதனின் 'வைரத்துக்கு ருசி கிடையாது' கச்சிதமாகக் கூறியிருந்தது!

- க. சுந்தர், நெய்வேலி


சீரியல்!

'வில்லனாக நடித்தார் ஹீரோவாக வாழ்ந்தார்'. நம்பியார்க்கு மிகவும் பொருந்தும்.

- எஸ்.ராமசாமி, குட்டை தவிர்பாளையம்



கல்கி



2008 டிசம்பர் 7
ஸர்வதாரி கார்த்திகை 22
மலர் : 67
இதழ் : 19

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

மாலேகான் : விரிவடையும் விஷ வட்டம்!


"அத்வானியும் அபினவ் பாரத் அமைப்பும் இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அபாயங்கள்" என்று தாக்கிப் பேசியிருக்கிறார் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மொய்லி.

ஒரு தேசியத் தலைவரை ஒரு பயங்கரவாத அமைப்புக்கு இணையாக வைத்துக் குற்றம் சாட்டுவது சரியல்ல என்று நாம் துணுக்குறுகிறோம். ஆனால், பா.ஜ.க. தலைமை, அடிப்படைவாத சக்திகளுடன் வெளிப் படையான இணக்கம் கொண்டிருப்பதன் மூலம் மொய்லியின் கூற்றுக்கு நியாயம் கற்பித்து வருகிறது.

மாலேகான் குண்டு வெடிப்பு தொடர்பான கைதுகள் நடந்த உடனேயே, "குற்றம் நிரூபணமானால் தண்டனை பெற வேண்டும்" என்று கூறிய பா.ஜ.க. தலைமை, அடுத்த நாளே சங்க் பரிவாரின் நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு ஆட்சேபணை குரல் எழுப்பியிருக்கிறது. விசாரணை முடிவதற்குக் கூட காத்திராமல் ஆட்சேபிப்பது சிறந்த தலைமைக்கான அடையாளம் அல்ல.

முஸ்லிம் பயங்கரவாதம் நிகழ்கிறபோது அதனைக் கண்டித்தால், இஸ்லாமியத் தரப்பில் ஆட்சேபணை எழுகிறது. அந்த ஆட்சேபணையைக் கண்டித்துப் பேசும் பா.ஜ.க. தலைவர்கள்தான் ஹிந்து பயங்கரவாதம் என்கிற சொற்பிரயோகத்தை ஆட்சேபிக்கிறார்கள்.

பயங்கரவாதம் என்பது, எந்த ஒரு மதக் கோட்பாட்டினாலும் விளைந்துவிடவில்லை. மனிதர்கள் தங்கள் மன வக்கிரங்களுக்கும் ஆதிக்க உணர்வுகளுக்கும் பதவி ஆசைக்கும்தான் பாதுகாப்புக் கேடயமாக





மதத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவ, சீக்கிய, பௌத்த என்று சர்வ மதங்களையும் இதற்குப் பயன்படுத்தி வருகிறார்கள்.

அன்றாட வாழ்க்கையில், வேற்று மதத்தவரோடு இணக்கமாக வாழ்ந்துவரும் சராசரி மக்கள் இத்தகைய பயங்கரவாதப் பூகம்பங்களால் உணர்ச்சிவசப்படுவதுடன் பாதுகாப்புணர்வையும் இழக்கிறார்கள். இந்தச் சூழல், பயங்கரவாதிகளின் ரகசிய வளர்ச்சியை விரைவுபடுத்த உதவுகிறது. விஷ வட்டம் விரிவடைகிறது.

நாட்டுப் பற்றும் தொலைநோக்கும் உடைய தலைவர்கள், மக்களிடையே நிலவும் உணர்வுபூர்வமான வேற்றுமைகளைக் கடந்து, ஒரே இந்தியா, ஒரே மக்கள் என்று அவர்களைச் சிந்திக்கச் செய்வார்கள்; ஒருங்கிணைப்பார்கள். பாதுகாப்புணர்வு ஊட்டி ஓர் உயர் இலக்கு நோக்கி அவர்களை உத்வேகப்படுத்துவார்கள். ஒரு மகாத்மாவால் அது முடிந்தது; ஒரு சத்ய சாயி பாபாவால் அதைச் செய்ய முடிகிறது; சமீபத்தில் ஒபாமா அதை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

இவ்வளவு எழுச்சியூட்டும் ஒரு பாதை காத்திருக்க, இந்திய அரசியல் தலைவர்கள், பிரிவினை அரசியல் என்கிற வஞ்சகப் பாதையைத் தேர்வு செய்வது கொடுமை. இந்தக் கொடுமையினால்தான் பயங்கரவாதம் ராணுவம் வரை ஊடுருவ முடிந்திருக்கிறது. ராணுவம் ஹிந்து பயங்கரவாதிகளின் மறைவிடம் ஆகிவிட்டது என்பது போல் மீடியா மிகைப்படுத்துவதும் கண்டனத்துக்குரியது. ஹிந்து பயங்கரவாதத்துக்கு அதில் இடம் இருக்குமானால், முஸ்லிம் பயங்கரவாதமும் அங்கே மறைந்து வளர முடியும்; தேசத் துரோகமும் சதியும் உருவாக முடியும்.

இனியேனும் நம் தலைவர்கள் மதத்தின் பெயரால் அரசியல் செய்வதை நிறுத்தட்டும். பயங்கரவாதத்தை ஒழிக்கவும் பயங்கரவாதிகளை மனம் மாற்றி தேசிய நீரோட்டத்தில் கலக்கச் செய்யவும் ஒரு தேசிய செயல்திட்டம் வகுத்து, கட்சி வேற்றுமைகளை மறந்து செயல்படட்டும். ஏ.டி.எஸ்.ஸும் உளவுத் துறையும் சாதனை புரிவதைக் காட்டிலும் இது முக்கியம்.

டோண்ட் ஒர்ரி பி ஹேப்பி!

''ஐந்து சகோதரர்களைப் பற்றிய கதை அதனால்தான் ஐந்தாம் படை என்று பெயர் சூட்டியிருக்கிறோம்'' என்கிறார் இப்படத்தின் இயக்குநர் பத்ரி. 'வீராப்பு' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர். '''ஐந்தாம் படை' என்றால் 'காட்டிக் கொடுப்பவன்' என்ற அர்த்தம் அல்லவா?'' என்றால், ''அதுபோன்ற ஒரு கேரக்டர் படத்தில் இருக்கிறது. எனவே படத்துக்கும் தலைப்புக்கும் நூற்றுக்கு நூறு பொருந்தும். இந்தப் படத்தின் கதை விவாதத்துக்காக, மாமல்லபுரம் சென்றிருந்தபோது ம.தி.மு.க. தலைவர்களில் ஒருவரான மல்லை -சத்யாவைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் விஷயத்தைச் சொன்னபோது, 'ஐந்தாம்படை என்ற சொல் உருவானதே மாமல்லபுரத்தில்தான். இரண்டாம் புலிகேசி மன்னனை வெற்றி கொள்வதற்காக ஐந்து புத்த பிட்சுகளை ஒற்றர்களாக, மாமல்லபுரத்திலிருந்து நரசிம்ம பல்லவர், சாளுக்கிய தேசத்துக்கு அனுப்பி வைத்தார். அதிலிருந்துதான் 'ஐந்தாம்படை' என்ற சொல் உருவானது. கதை விவாதத்துக்குப் பொருத்தமான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்' என்றார். இது யதார்த்தமாக நிகழ்ந்தது'' என்றவரிடம், '''ஐந்தாம் படை'யின் ரகசியத்தைச் சொல்லுங்கள்'' என்றால், ''என்னுடைய இயக்கத்தில் இயக்குநர் சுந்தர்.சி. இரண்டாம் முறையாகக் கதாநாயகனாக நடிக்கிறார். வில்லன் குடும்பத்துப் பெண்ணாக சிம்ரனும், ஹீரோ குடும்பத்துப் பெண்ணாக தேவயானியும் நடிக்கின்றனர். தியேட்டர் உரிமையாளராக நடிக்கும் சுந்தர்.சி.யின் தூரத்து உறவினராக நடிகர் விவேக் 'தாந்தோணி' கேரக்டரில் அறிமுகமாகிறார். விவேக்கின் காமெடியில், 'டோண்ட் ஒர்ரி பி ஹேப்பி' என்று அவர் பேசும் வசனங்களில் தியேட்டர் அதிரப் போவது உறுதி. அக்ரஹாரத்துப் பெண்ணாக ஹீரோயின் அதிதி அறிமுகமாகிறார்'' என்றவரிடம், ''அதென்ன எல்லா படத்திலும் ஹீரோயின்கள் அக்ரஹாரத்துப் பெண்ணாகவே இருக்கிறார்கள்?'' என்றால், ''நான் அக்ரஹாரத்துல பிறந்து வளர்ந்த பையன். அங்கதான் என்னைப் பாதித்த மனிதர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். என்னை வசீகரித்த ஓர் அக்காவைதான் ஹீரோயின் கேரக்டராக மாற்றி இருக்கிறேன். மற்றபடி, அக்ரஹாரத்துப் பெண் என்பது திட்டமிட்ட நிகழ்வல்ல'' என்கிறார் இயக்குநர் பத்ரி.

– கண்மணி



* ஐந்தாம்படை படத்தில்...

புதிய வானம்

சர்ப்ரைஸ் மினி தொடர் 4

கீதா ராணி

''போதும், போதும்!'' என்று கீதா கையால் தட்டை மூடிக்கொள்ள, அவள் விரல்களுக்கும் தட்டின் விளிம்புக்கு மிடையே இருந்த இடைவெளியில் லாகவமாக காரட் துண்டுகளைப் பரிமாறி னாள் ருக்மிணி.

''ஒவ்வொருமுறையும் போதும்னு சொன்னதுக்கு அப்புறம் ஒரு கரண்டியாச் சும் போடறீங்களே!'' சிணுங்கினாள் கீதா.

''சாப்பிடு! அப்படிப் போட்டாத்தான் உடம்புல ஒட்டும்.''

''அப்படின்னா ராஜு ஒரு யானைக் குட்டி சைஸுக்கில்லே இருக்கணும்! இப்படி ஒட்டகச்சிவிங்கி மாதிரி ஏன் இருக்கான்?''

சிரிப்பா உறுமலா என்று அனுமா னிக்கமுடியாத ஒரு சப்தம் வெளிப் பட்டது ராஜுவிடமிருந்து.

''ஏன்னா அவன் சாப்பிடறதெல்லாம் பறவையைத் தேடி அலையறதுலயே கரைஞ்சு போயிடுது. போதாக்குறைக்கு இப்போ போலீஸ் ஸ்டேஷன், டி.ஐ.ஜி ஆபீஸுக்கு வேற நடையா நடந்தாகறது!'' என்றபடியே ராஜுவின் தட்டில் சாதத்தை அள்ளிவைத்தாள் ருக்மிணி.

தியாஸஃபிகல் சொஸைட்டியில் ஆரம்பித்த ஒட்டம் டி.ஐ.ஜி. அலுவலகம் வரை நீண்டது!

மேற்குப் பக்கம், ஆற்றங்கரையில் கொலையுண்ட மனிதனை, ஒரு வாரம் சென்று, மீண்டும் கிழக்குப் பக்கத்தில் பார்க்க நேர்ந்தால், என்னவென்று எண்ணு வது! கீதாவையும் இழுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்த ராஜு, சொஸைட்டி கேட்டைத் தாண்டி சாலையை அடையும்வரை நிற்க வில்லை.

''என்ன ஆச்சு?'' என்று விசாரிக்க வந்த வாயிற்காவலர்களிடமிருந்து தப்பி, ஆட்டோவைக் கைகாட்டி நிறுத்தினான். வீடு நோக்கிச் செல்கையில் கீதாவிடம் சொன்னான். ''அதே புதர் மீசை; அதே காத்திரமான உடம்பு, குட்டை கழுத்து... எப்படி? பத்து நாள் முந்தி கத்திக்குத்து வாங்கி, ஆத்துக்குள்ள மல்லாக்க விழுந்த வன் சாகலையா?... ஐயோ! கீதா என்ன பயங்கரம்...! அவன் நம்மைக் குறி வைச்சுப் பின் தொடர்ந்து வர்றானா...? எதுக்கு...?''

''ஷ்!'' என்று அவனை அடக்கியவள், ஆட்டோவை ஓரங்கட்டச் செய்தாள். கைப் பையிலிருந்து தண்ணீர் எடுத்துத் தந்து, ராஜுவைக் குடிக்க வைத்தாள்.

''அமைதியா இரு'' தன் செல் ஃபோனை எடுத்துப் பேசினாள்.

''ஹலோ சத்யேந்தர். கீதா ஹியர்... டி.ஐ.ஜி. கிரைம்ஸ் நம்பர் வேணும். பிஸினஸ் கார்ட் அனுப்பிடு.''

இரண்டு நிமிடங்களில் வந்து விழுந்த எண்ணை, ஃபோனில் பதிவு செய்து கொண்டு அழைத்தாள்.

ஞாயிறு ஆனபோதிலும் தன சேகர் அலுவலகத்தில் இருந்தார். கஸ்டம்ஸ் கமிஷனரிடமிருந்து தகவல் வந்திருந்தது - முந்தைய நாள் ஹார்பரில் ஒரு சரக்குப் பெட்டியை மறித்துப் பிடித் திருந்ததாக. அத்தனையும் சந்தனக் கட்டைகள். ஏற்று மதித் தடையை மீறி, கப்பலேற இருந்தவற் றைக் கடைசி நிமிஷத்தில் கைப்பற்றி யிருந்தனர்.

''நாங்க பரிசோதனை பண்ணி சீல் வைச்ச கன்டெய்னர்தான் ஸார். ஆனா அதை உடைச்சுட்டு சரக்கு மாத்தப்பட் டிருக்கு. போலி சீல் வைச்சுத் திரும்ப மூடி, ரொம்ப புரஃபஷனலா பண்ணிருக் காங்க. கன்டெய்னரை ஏத்திக்கிட்டு வந்த லாரியைப் புடிச்சுட்டோம்...''

''டிரைவரை விசாரிக்கணும்'' என்றார் தனசேகர் உடனேயே.

''அப்ஸ்காண்டிங்! டிரைவர் க்ளீனர் இரண்டு பேரும் ஓடிட்டாங்க.''

மேலும் சில விவ



ரங்களைக் கேட்டுக்கொண்டு, இன்ஸ்பெக்டர் விஜயகுமாரை அழைத்தார் தனசேகர். விவரங்களைச் சொல்லிவிட்டு, ''திருவொற்றியூர்ல அபான்டன் பண்ணியிருக்காங்க லாரியை... போய் நம்பர், சாஸி டீடெய்ல்ஸ் குறிச்சுக்கிட்டு, ஃபொரன்ஸிக் ஸ்டடீஸ் எடுத்துடுங்க...''

''யெஸ் ஸர்'' என்று விஜயகுமார் துண்டித்ததும், ஃபோனில் மிஸ்ட் கால் பதிவாகியிருப்பதைப் பார்த்தார். முன் அறிமுகமில்லாத ஏர்டெல் எண். ஒரு கணம் யோசித்துவிட்டு அழைத்தார். ஏழுமுறை அடித்தது. தொடர்பைத் துண்டிக்க முற்பட்ட கணத்தில் ''ஹலோ டி.ஐ.ஜி தனசேகர் ஸார்...?'' என்றது ஓர் இளம்பெண் குரல் மறுமுனையில்.

''யெஸ்.''

''என் பெயர் கீதா. நான் ஒய்.ஏ.எஸ்.ஏ. டிஸ்ட்ரிக்ட் செகரடரி... உங்களைப் பத்து நிமிஷம் சந்திக்கணும்.''

''என்னமா விழாவா? தலைமைதாங்கறதுக்கெல்லாம் நான் போகறதில்லை. ப்ளீஸ் எக்ஸ்க்யூஸ் மீ.''

''இல்ல ஸார். இது ஜே.3 ஸ்டேஷன்ல பதிவாகியிருக்கற ஒரு மர்டர் கேஸ் சம்பந்தமா... தி விட்னஸ் இஸ் ஹியர் வித் மீ.''

'போச்சு! ஞாயிற்றுக் கிழமை காலி' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டவர், ''சரி வாங்க'' என்றார் ஃபோனுக்குள்.

கீதாவும் ராஜுவும் வீட்டுக்குத் திரும்பி எஃப்.ஐ.ஆர். பிரதிகளை எடுத்துக்கொண்டு, டி.ஐ.ஜி. கிரைம்ஸ் அலுவலகத்தை அடைந்தபோது, மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. டி.ஐ.ஜி. தனசேகரன் லேப்டாப்பில் எதையோ வெறித்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். அவர்களைக் கண்டதும் அதை மூடிவிட்டுத் திரும்பினார்.

''ஐ அம் கீதா அண்ட் ஹி இஸ் மை குட் ஃப்ரெண்ட் அண்ட் காலேஜ் மேட் ராஜு.'' காவல் நிலையத்தில் ராஜு பதிவு செய்த புகாரின் பிரதியையும், பெற்றுக் கொண்ட எஃப்.ஐ.ஆரின் பிரதியையும் நீட்டினாள் அவரிடம்.

அவற்றை ஊன்றிப் படித்தவர். ''இப்போ இங்கே எதுக்கு வந்திருக்கீங்க?''

''இந்தப் புகார்ல, குத்திக் கொலை செய்யப்பட்டதா எழுதியிருக்கிற மனுஷரை இன்னிக்குப் பார்த்தோம்.''

''ம்...ஹூம்... எங்கே பார்த்தீங்க?''

''தியாஸஃபிகல் சொஸைடில, ஏழு மணி இருக்கும். ஆத்தங்கரை ஓரமா நடந்துக்கிட்டிருந்தோம்...''

''வெய்ட்!'' என்றவரின் முகம் இறுக்க



''ஏட்டு எதுக்கு ரத்த தானம் பண்றார்?''

''கபாலிக்கு இன்னிக்குப் பிறந்தநாளாம்!''

- குமார்



மானது. லேப்டாப்பைத் திறந்து சில தகவல்களைத் தேடிப் படித்தார். மீண்டும் அவர்கள் பக்கம் திரும்பி, ''சொல்லுங்க'' என்றார்.

''ரொம்ப ஸாரி ஸார்! அந்த ஆளு கொலை செய்யப்பட்டுட்டார்ன்ற அனுமானத்துல அப்படி கம்ப்ளெய்ன்ட் கொடுத்துட்டோம்...''

''அவர் பார்த்ததை எழுதிக் கொடுத்திருக்கார். கொலையா இல்லையான்னு கண்டு பிடிக்கறது எங்க வேலை. நேரே ஜெ 3 ஸ்டேஷனுக்கே போயிருக்கலாம் நீங்க...''

ரிதா, அவரைக் கூர்மையாகப் பார்த்தாள். ''கஷ்டம் ஸார். அவங்க திரும்பவும் கேலி செய்வாங்க; எங்களை நம்பாமலும் போகக் கூடும். ஒரு மனுஷன் பறவைகளைத் தேடிப் போய்ப் பார்ப்பாங்கறதையே அவங்களாலே ஏத்துக்க முடியலை. இப்போ திரும்பவும் அதுக்காகப் போனோம்னு சொல்லி, நடந்ததையெல்லாம் சொன்னா எங்களையே லாக் அப்ல தள்ளினாலும் தள்ளுவாங்க!''

''சம்பவம் நடந்து இரண்டு நாள் பேசாம இருந்துட்டு திடீர்னு மூணாவது நாள் கம்ப்ளெய்ன்ட் கொடுத்தீங்களே... அதுக்கே தனியா விசாரணை நடத்தலாம், தெரிஞ்சுக்கோங்க'' அவர் குரல் சற்றுக் கடுமையாக, ராஜு குறுக்கிட்டான்.

''ஸார், அது என்னோட தப்பு. வீட்டுல அப்பா - அம்மாகிட்டே சொன்னப்போ ரொம்ப பயந்துட்டாங்க. வாயே திறக்காதே மறந்துடுன்னுட்டாங்க... ஸாரி ஸார்... அப்புறம் ரிதாவாலதான் எனக்குத் தைரியம் வந்தது...''

அவன் தன்னைக் கிட்டத்தட்ட ஒரு கதாநாயகி அளவுக்கு உயர்த்திப் பேசியதில், சங்கடம் தாளாமல் ரிதா குறுக்கிட்டாள்.

''எழுதிக் கொடுக்கலாமா ஸார்...?''

அவரே தமது லேப்டாப்பில் டைப் செய்து கொடுக்க, ராஜு கையெழுத்திட்டுக் கொடுத்தான். ''எடுத்துட்டுப் போய் ஸ்டேஷன்ல கொடுங்க. நான் பார்த்துக்கறேன். நகல் இதுல இருக்கு...'' - லேப் டாப்பைச் சுட்டிக் காட்டினார்.

''தேங்க்யூ ஸார்.''

அறை வாசல்வரை சென்றவர்களை அழைத்து, ''கொஞ்சநாளைக்கு ஆத்தங்கரைப் பக்கமெல்லாம் போகாதீங்க... ஜாக்கிரதை என்ன..?'' என்றார்.

வெளியே வந்தபோது ராஜுவின் முகம் வெளுத்திருந்தது.

''என்ன பயமா இருக்கா...?''

'' நீ கூட இருக்கறச்சே பயமா இல்ல... ஆனா ராத்திரி தூக்கம் வர மாட்டேங்குது.''

அவனை எப்படி அமைதிப்படுத்துவதென்று புரியாமல், ''ரொம்பப் பசிக்குது'' என்றாள்.

''வா வீட்டுக்குப் போய்ச் சாப்பிடலாம்,'' என்று அவன் அழைத்தபோது, ''வேண்டாம்

ஹாஸ்டலுக்குப் போறேன்'' - மறுத்தாள்.

''நோ! யு ஆர் கமிங் ஹோம்'' என்று தெருவில் ஆட்டோவை நிறுத்தி அவளை அதில் ஏறச் செய்தான்.

ருக்மிணியின் சமையல் பக்குவம் அவளை வீழ்த்திவிட்டிருந்தது. ஆவலாகச் சாப்பிட்டவள், திரும்பவும் ஏதேனும் வந்து தட்டில் விழுவதற்குள் எழவேண்டும் என்று தட்டையும் எடுத்துக்கொண்டு எழுந்திருக்க,

''ஊஹூம்... கொடு இங்கே'' என்று பிடுங்கி எடுத்துச் சென்றாள் ருக்மிணி.



“அழகான சிவப்புப் பொட்டு, புல்புல்லோட கன்னத்துல பளிச்சிடும் தெரியுமா... அந்தச் சிவப்பு. வுட்பெக்கரோட பின்னந்தலை. அதுலேயும் அதே சிவப்புதான். அது கொத்தக் கொத்த அந்தச் சிவப்புக் கொண்டை, தலையோட சேர்ந்து முன்னும் பின்னும் முன்னும் பின்னும்...”

சமையலறை தொட்டியில் கைகழுவச் சென்றவளைத் தடுத்து வாஷ் பேசினுக்கு வழி காட்டினாள். அவள் அகன்றதும்,

''தன்மையா பழகுது இந்தப் பொண்ணு'' என்று தணிந்த குரலில், அவன் சொல்வதைக் கேட்க முடிந்தது.

ராஜுவும் விஸ்வநாதனும் சாப்பிட்ட தட்டுகளை எடுக்காமலே போய்க் கை கழுவிக்கொண்டது அதிர்ச்சி அளித்தது.

''இது என்ன! இரண்டு பேரும் அப்படியே தட்டை வைச்சுட்டுப் போறீங்க... அது தானா நடந்து தேய்க்கற இடத்துக்குப் போகுமா...?''

''அம்மா எடுத்துப்பாங்க.''

''சே! சே! எடுங்க... இது என்ன ஹோட்டலா? நம்ப வீட்டு வேலையை நாம செய்துக்கிறதுல என்ன கௌரவக் குறைச்சல்...?''

''அப்படியே பழகிடுச்சும்மா'' என்ற விஸ்வநாதனை இடைமறித்து, ''உங்க பையனையாவது ஒழுங்கா பழக்குங்க'' என்று இரண்டு தட்டுகளையும் எடுத்து ராஜுவிடம் தந்தாள். ருக்மிணியை உட்கார வைத்துத் தானே பரிமாறினாள்.

''கிளம்பறேன்'' என்று அவள் விடை பெற்றபோது குங்குமம் தந்தாள் ருக்மிணி. ''நீங்களே வைச்சு விடுங்க'' என்று குனிந்து நெற்றியைக் காட்டினாள்.

கீழே சென்று அவளுக்கு விடை கொடுத்தபோது ராஜு சொன்னான். ''நெத்திப் பொட்டு அழகா இருக்கு உனக்கு...''

சற்றும் எதிர்பாராத அந்தப் பாராட்டு தன்னை வீழ்த்துவதற்குள் சுதாரித்துக் கொண்டாள்.

''அம்மாவுக்காக வைச்சுக்கிட்டேன்... ஹெல்மட் போட்டா கலைஞ்சுடும்.''

''அழகான சிவப்புப் பொட்டு, புல்புல்லோட கன்னத்துல பளிச்சிடும் தெரியுமா, அந்தச் சிவப்பு. வுட்பெக்கரோட பின்னந்தலை, அதுலயும் இதே சிவப்புதான். அது மரத்தைக் கொத்தக் கொத்த அந்தச் சிவப்புக் கொண்டை, தலையோட சேர்ந்து முன்னும் பின்னும் முன்னும் பின்னும்...''

''ஆஹா! ஆரம்பிச்சாச்சு... பறவைப் புராணம் எழுதுபவர் ராஜு அடிகள்...''

அவளுடைய செல்ஃபோன் அடித்தது. எடுத்துப் பேச, மறுமுனையில் டி.ஐ.ஜி. தனசேகர்.

(தொடரும்)

ஸ்ரீ : ||

''தி ஸ்ரீ விஷ்ணு சித்த ஸ்ரீ ட்ரஸ்ட் (பதிவு)''

புது எண்.18, வெங்கடேச அக்ரஹாரம், மயிலாப்பூர், சென்னை - 600 004.
(ஸ்ரீ வேதாந்த தேசிகா ஹால் எதிரில்) ✆ :044-32519772 / 42658989 / 9381030130

எமது நிறுவனர் பழவேரி சக்ரவர்த்தி ராகவஸிம்ஹாசார்யரால் எழுதப்பட்ட கீழ்கண்ட நூல்கள் தற்போது விற்பனையில் உள்ளன. பிரபலமான வார, மாத, தின இதழ்களில் பாராட்டி எழுதப்பட்ட இவை, பாரதம் மட்டுமன்றி, ஒரு சில வெளி நாடுகளிலும் விற்கப்படுகின்றன.

				விலை	தபால்
★ நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணன்	-1600	பக்கம்	5 பகுதிகள்	600/-	39/-
★ அல்லி மாமலர் மங்கை - ஸ்ரீலக்ஷ்மி	-1200	பக்கம்	3 பகுதிகள்	500/-	36/-
★ பூமாலை சூடிக்கொடுத்தவள் பாமாலை	- 900	பக்கம்	3 பகுதிகள்	400/-	33/-
★ சிங்கப்பிரான் பெருமை*	- 200	பக்கம்	1 பகுதி	170/-	25/-
★ ஸ்ரீ வீரராகவ ப்ரபாவம்*	- 170	பக்கம்	1 பகுதி	150/-	25/-

* இந்த நூல்களில் பெருமாளின் வண்ணப் புகைப்படங்கள் நல்ல ஆர்ட் பேப்பரில் அச்சிடப்பட்டவை இணைந்துள்ளன.

நூல்களை தபால்மூலம் பெற விரும்புவோர் மேலே குறிப்பிட்டுள்ள தொகையை DD/M.O. மூலம் "THE SRI VISHNU CHITHA SRI TRUST" என்ற பெயருக்கு அனுப்பலாம்.

நூல் விற்பனையில் வரும் தொகை, இலாப நோக்கின்றி, மேன்மேலும் எம்பெருமான் திருத்தொண்டுக்காகவே பயன்படுகின்றது என்பதை கருத்தில் கொண்டு நூல்களை வாங்கி பகவத் கைங்கர்யத்துக்கு உதவுமாறு தமிழ்மக்களை, ஆத்திகர்களை வேண்டுகிறோம்.

ஹெர்பல் டயலிசிஸ் - கிட்னி பெயிலியருக்கு புதிய சிகிச்சை



கிட்னி பெயிலியர் எனும் சிறுநீரகக் கோளாறு மிகவும் கொடிய நோய் என்பது அனைவரும் அறிந்ததே. சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களுக்கு உலகம் முழுதும் தற்சமயம் டயலிசிஸ் சிகிச்சையே செய்யப்படுகிறது. இந்த சிகிச்சையால் தற்காலிக நிவாரணம் கிடைக்குமேயன்றி நோய் குணமடைவதில்லை. அதன் பின் சிறுநீரகம் முழுதும் செயல்பட முடியாத நிலை ஏற்படும் போது சிறுநீரகத்தை மாற்ற மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஆனால் சென்னை ரத்னா சித்த மருத்துவமனை மற்றும் மூலிகை ஆராய்ச்சிமையத்தில் டயலிசிஸ் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு மாற்றாக ஹெர்பல் டயலிசிஸ் எனும் புதிய வகை சிகிச்சையை அறிமுகம் செய்து வெற்றிகரமாக செய்து வருகிறார்கள். இவ்வகை சிகிச்சை குறித்து ரத்னா சித்த மருத்துவமனையின் மேலாண்மை இயக்குனர் டாக்டர் க. திருத்தணிகாசலம் கூறும்போது ஹெர்பல் டயலிசிஸ் சிகிச்சை 100 சதவிகிதம் மூலிகை மருந்துகளை கொண்டே செய்யப்படுகிறது. ஹெர்பல் டயலிசிஸ் முறையில் அறுவை சிகிச்சை இல்லை. அமிர்த சஞ்சீவி மூலிகைச்சாறு காலை - மாலை இரு வேளையும் வெறும் வயிற்றில் தரப்படுகிறது. பத்தியம் கடைபிடிக்கப்படும்.

இந்த மூலிகை சாறு சிகிச்சை இரண்டு விதமாய் செயல்படுகிறது. முதலாவது இரத்தத்தில் யூரியா, கிரியேட்டினின், அல்புமின் அளவை குறைக்கிறது. இரண்டாவது பழுதுபட்ட சிறுநீரக திசுக்களை மீண்டும் சரிசெய்கிறது. இந்த சிகிச்சையின் சிறப்பம்சம் என்னவென்றால் சிறுநீரகம் நன்கு செயல்படும் வரை சிகிச்சை தொடர்ந்து செய்ய வேண்டும். சிறுநீரகம் நன்கு செயல்பட துவங்கிவிட்டால் சிகிச்சையை நிறுத்தி விடலாம். ஆயுள் முழுக்க மருந்து சாப்பிட அவசியம் இல்லை. இந்த வகை சிகிச்சை எடுத்துக் கொள்ள உள்நோயாளர் பிரிவில் தங்க வேண்டிய அவசியம் ஆகும். டயலிசிஸ் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இந்த சிகிச்சையை எடுக்க முடியாது.



விபரங்களுக்கு: டாக்டர் க. திருத்தணிகாசலம்

ரத்னா சித்த மருத்துவமனை மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையம்

750, பெரியார் நெடுஞ்சாலை, என்எஸ்கே நகர், அரும்பாக்கம், சென்னை - 106.

போன்: 044-26223828 / 26224688, 944337431

www.rathnasiddha.com | e-mail: thiruthani12@yahoo.co.in



'சென்னை - 28', 'சரோஜா'... படங்களில், தம் நடிப்பின் மூலம் கிச்கிச்சு மூட்டிய பிரேம்ஜி அமரன், இப்போது எடுத்திருப்பதோ இசையமைப்பாளர் அவதாரம். 'கல்கி'க்குப் பேட்டி என்றதும், "எவ்ளோ பண்ணிட்டோம். இதைப் பண்ண மாட்டோமா?" தனது ட்ரேட்மார்க் வசனத்தோடு வரவேற்றார்...

இந்த டயலாக்கை எங்கிருந்து பிடித்தீர்கள்?

"'அழகிய தமிழ் மகன்' படத்தில் விஜய் சார் சொன்ன டயலாக்கை நான் என் பாணியில் சொன்னேன். விஜய் சொன்னால் சீரியஸா பார்க்கிறாங்க; நான் சொன்னால் காமெடியா பார்க்கிறாங்க. இது காமெடிக்காகச் சொன்னது இல்லை; நான் சொன்னதுனால காமெடியாயிடுச்சு."

"எனக்கு

கங்கை அமரனோட பையனா சினிமாவில் அடையாளப்படுத்தப்பட்டது ப்ளஸ்ஸா... மைனஸா?

"நிச்சயமா ப்ளஸ்தான். பெரிய ஆளோட பையனா இருக்கறதால, ரசிகர்களிடையே எதிர்பார்ப்பும் அதிகமா இருக்கு. இதை நிறைவேற்ற அதிகமாக உழைக்கவேண்டியிருக்கு."

இனி நடிகனாகத் தொடர்வதாக உத்தேசமா?

"இல்லை. என்னுடைய பயணம் என்பது இசையை நோக்கித்தான் இருக்கும். நடிப்பு என்பது சிறிய இளைப்பாறுதல். நான் பெரிய நடிகனில்லை. என் அண்ணன் வெங்கட் பிரபு அருகில் இருந்து என்னைப் பார்த்ததால், என்னுடைய சின்னச் சின்ன மூவ்மெண்ட்டை சினிமாவில் வைத்துவிட்டார். கடவுள் அருளால் அந்த முயற்சியும் வெற்றி பெற்றுவிட்டது."

« பிரேம்ஜி அமரன் »

யுவன்தான் குரு!''

உங்கள் தந்தைக்கும், உங்கள் பெரியப்பாவுக்கும் இசையில் என்ன வேறுபாட்டை உணர்கிறீர்கள்?

''என் அப்பா குமார் இருநூற்றி ஐம்பது படங்களுக்கு இசையமைத்துள்ளார். இன்றும் என் அப்பா இசையமைத்த பல படங்களை, என் பெரியப்பா இசையமைத்த திரைப்படங்களாகத்தான் பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு என் அப்பாவின் இசையில் எனது பெரியப்பாவின் சாயல் இருக்கும்.''



இசையில் உங்கள் குரு யார்?

''இசையில் என் குரு யுவன் ஷங்கர் ராஜாதான். லண்டனில் உள்ள இசைக்கல்லூரியில் நான் பயிற்சி பெற்றிருந்தும் கூட, யுவனிடம் பல்வேறு இசை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டேன். என் மீது இருந்த நம்பிக்கையில் யுவன், 'புதுப்பேட்டை'க்கு பின்னணி இசையமைக்க வாய்ப்பு அளித்தார். தற்சமயம், 'அதே சமயம்- அதே இடம்', 'பூக்கடை ரவி' போன்ற படங்களுக்கு இசையமைத்துக்கொண்டிருக்கிறேன்.''

நீங்கள் ஏன் உங்கள் பெரியப்பா இளையராஜாவிடம் பயிற்சி பெறவில்லை?

''எனக்கு பெரியப்பா என்றாலே கொஞ்சம் பயம். நான் சிறு வயதில் முறையான இசைப் பயிற்சி எதையும் பெறவில்லை. பெரியப்பாவின் இசைக் குழுவில் இருப்பவர்கள் அனைவருமே முறையான இசைப்பயிற்சி பெற்ற வித்வான்கள். ஆரம்ப நாட்களில் எனக்குக் கேள்வி ஞானம் மட்டுமே இருந்ததால், என் பெரியப்பாவிடம் சென்று பயிற்சி பெறவில்லை.''

உங்கள் பெரியப்பா, கர்நாடக சாஸ்திரிய இசையை, பாமரர்களும் ரசிக்கும்படியாக திரையில் அளித்தார். ஆனால் உங்கள் தலைமுறை இசையமைப்பாளர்களிடம் இதுபோன்ற முயற்சி ஏதும் இல்லையே?

''பெரியப்பா காலத்தில் 'சிந்து பைரவி', 'சலங்கை ஒலி' போன்ற கர்நாடக இசையை மையமாகக் கொண்ட திரைப்படங்கள் வெளிவந்தன. அதனால் பெரியப்பாவுக்கும் தமது திறமையை வெளிக்கொணர வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இன்றைய தயாரிப்பாளரோ, இயக்குநரோ, சிச்சுவேஷனைச் சொல்லும்போதே, 'ஒரு குத்துப்பாட்டு வைங்க' என்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது? நல்ல திரை இசை என்பது இசையமைப்பாளரை மட்டும் சார்ந்தது இல்லை. நல்ல கதையும், அந்தக் கதையை உருவாக்கும் இயக்குநரையும் கூடச் சார்ந்தது.''

– ராகவ்குமார்

கோன்ஐஸ், பப்ஸ் மற்றும் நான்!

இரண்டு மூன்று வயதில் ட்ரவுசர் போடாமல் கற்கால மனிதன் மாதிரி நான் 'அலைந்து'கொண்டிருந்த சமயம். சில விஷயங்கள் இன்னும் ஞாபகமிருக்கின் றன. அப்போது இளந்தோப்பு மூன்றாவது தெருவில் குடியிருந்தோம். என் மாமா வின் நண்பர் சுரேஷ் என்னிடம், ''உன் அப்பா துப்பாக்கி வெச்சிருக்கார். எடுத்து 'டமால்'னு சுட்டுறுவார் தெரியும்ல!'' என்றார். நான் அதிர்ந்துபோய் ''அப் படியா?'' என்றேன். ''ஆமா, நீயும் இனிமே ட்ரவுசர் போடாட்டி உன்னை யும் சுட்டுறுவார்'' என்றார். ட்ரவுசர் மேட்டரைப் பற்றி நான் பெரிதாக எடுத் துக்கொள்ளவில்லை. ஆனால், நம் அப்பாவிடம் துப்பாக்கி இருப்பது இவ் வளவு நான் தெரியாமல் போச்சே, என்று தான் ஃபீல் பண்ணினேன். என் அண் ணனிடம் விசாரித்தபோது, ''ஆமாடா அப்பா ஆர்மீல இருக்கார்ல. அங்க பெரிய துப்பாக்கி வெச்சுருக்கார்'' என்றார். ''பெரிய துப்பாக்கினா வானம் உயரத் துக்கு இருக்குமா?'' என்றேன். ''அதை விட பெரிசு!'' என்றார்.

அப்போதெல்லாம் என் அம்மா வித விதமான பூக்கள் வரைவார். எல்லாம் துணியில் - எம்பிராய்டரி ஒர்க், தையற் கலையில் நல்ல ஈடுபாடு உள்ளவர். பண்டிகை சமயத்தில், எனக்கும் என் அண்ணனுக்கும் அவரே சட்டை - ட்ரவுசர் தைத்துத் தரும் அளவுக்கு நிபுணத்துவம் உடையவர். நான் வரை வதற்கு அம்மாதான் இன்ஸ்பிரேஷன். அம்மாவுடன் தையல் கிளாஸ்க்குப் போவேன். நானும் பூக்கள், இலைகள் என கிறுக்குவேன். அம்மாவிடம், ''அப்பா இந்தமுறை வரும்போது துப்பாக் கியை எடுத்துட்டு வருவாங்களா?'' என்றேன். ''அப்பா எடுத்துட்டு வரலை. நாம அங்க போறோம்!'' என அம்மா சொன் னவுடன் சந்தோஷம் தலைக்கு ஏறியது.

என் அம்மா பெயர் திரவியம்; அப்பா பெயர் வெங்கட்ராமன். அப்பா ஆர்மியில் APS-ல் வேலை பார்த்தவர். எனக்கு நாலு வயது இருக்கையில் நானும் அம்மாவும் ஜம்மு காஷ்மீர்- ஸ்ரீநகரில் ஒரு வருடம் அப்பாவுடன் போய்த் தங்கியிருந்தோம். பனி மழை, குளிர், புகாரி, சப்பாத்தி... என வித்தியாசமான வாழ்க்கை. அப்பா, அமர்நாத் பாதயாத்திரைக்குக் கூட்டிப் போயிருக்கிறார். ராணி இதழில் 'புதை யல்' படக் கதையை அம்மா வாசிக்க நான் கேட்பேன். சிலேட்டில் பூனை, ரயில்... என எதையாவது வரைவேன். அம்மா தான் வரையச் சொல்லித் தருவார். ஆட் களை நேரில் பார்த்து, குச்சி மனிதர்களாக வரைவேன். அந்த விதத்தில் அம்மாதான் எனக்கு முதல் ஆசிரியர்.

அதன் பிறகு அப்பா ஆர்மியிலிருந்து திரும்பி மதுரை டெலிகிராஃப்பில் (BSNL)

வேலைக்குச் சேர்ந்தார். சின்ன வயதிலிருந்தே அப்பா என்னிடம் படிப்புப் பற்றி எதுவுமே கேட்கமாட்டார். அப்பா என்றாலே நல்ல சுதந்திரம்தான். ஒன்னாவது ரெண்டாவது படிக்கையில், கட்டப் பால் குச்சியை வைத்து வீடு பூராவும் வரைவேன். சமயத்தில் அப்பாவும் அவருக்குத் தெரிந்ததை வரைந்து காட்டுவார். மாறி மாறி உற்சாகமாக வரைவோம். அப்பா நன்கு கதை சொல்லுவார். பெரும்பாலும் ஃபேண்டஸி கதைகள்! ''வெளில 'சோ'ன்னு மழை பெய்யுது. நனைஞ்சு வந்த காக்கா தன் வீட்டுக் கதவைத் தட்டுது. பொம்பளை காக்கா கதவைத் திறந்ததும், இது உள்ள போயி துண்டை எடுத்துத் தலையைத் துவட்டிட்டு கட்டிலில் உட்காந்துச்சு'' என்கிற ரேஞ்சில் சொல்வார். நான், காக்காவுக்கு வீடு, துண்டு, கட்டில் எல்லாம் உண்டா என குழம்புவேன். என்றாலும் அதுதான் கற்பனையின் பிறப்பிடம். ஓவியப் போட்டியில் பரிசுபெற்று வந்தால், சந்தோஷமாகி உறவினர் எல்லோரிடமும் (விடாப்பிடியாக) பகிர்ந்துகொள்வார். அப்பா நிறைய ஆங்கிலப் படங்கள் பார்ப்பவர். என்னையும், அண்ணனையும் ரீகல் தியேட்டருக்கு - பல ஆங்கில படங்களுக்குக் கூட்டிப் போவார். அதில் பார்த்ததுதான் Guns of Nevrone, For a few dollers more, போன்ற அற்புதமான படங்களெல்லாம். படங்களைவிட அப்பா இண்டர்வெலில் வாங்கித்தரும் கோன் ஐஸும், பப்ஸும்தான் பலமடங்கு ஆர்வமே. ஆவலோடு சாப்பிடுவோம்!

அப்பாவுக்கு நேரெதிர் அம்மா. மிகுந்த அன்பானவர். அதற்கு இணையாகக் கண்டிப்பானவர்! திட்டமிடுதலைக்



என்னை இயக்கிய ஹீரோக்கள்

19

இயக்குநர் சிம்புதேவன்



✱ திரவியம், வெங்கட்ராமன்

வில்லை என்பதுதான் உண்மை! அங்கு கிடைத்த உடற்பயிற்சியால்தான் ஸ்கூல் பேஸ்கட் பால் டீமில் இடம் கிடைத்தது.

அப்பா வீடுவீடாகப் போய் தந்தி கொடுப்பவராக ஆரம்பித்து, பி.எஸ்.என்.எல்.லில் ஓவர்ஸியராக ரிட்டையர்டு ஆனார். கஷ்டப்பட்டுக் குடும்பத்தை ஆளாக்கியவர். எந்தப் பிரச்னையையும் எளிதாகப் பார்ப்பார். வாழ்க்கையை அதன் போக்கிலேயே எடுத்துக் கொள்வார். குறைவான மார்க் எடுத்தால் "விடுப்பா... உன்னால முடிஞ்ச மட்டும் படிச்சேல்ல. வர்றது வரட்டும். உனக்கு எது பிடிச்சிருக்கோ அதைப் பண்ணு!" என சின்ன வயதிலேயே சொல்லுவார். எப்போதும் குறைவில்லாத சந்தோஷத்துடன் இருப்பார்.

அம்மாதான் எங்கள் குடும்பத்தின் ஆணிவேர். நான் முதன் முதலாக விகடனில் வாங்கிய சம்பளம், அது வரை என் அப்பா வாங்கி வந்த சம்பளத்தை விட அதிகம். ஆனால், நான் வாங்கியது என் தனி ஓர் ஆளுக்கு சென்னையில் பத்தவில்லை. அதுநாள் வரை அதைவிடக் குறைவான சம்பளத்தில் எங்கள் வீட்டில் ஐந்து பேர் சந்தோஷமாக இருந்தோம் என்றால், அது அம்மாவின் அற்புதமான நிர்வாகத் திறமைதான். அவரிடம் இருந்துதான் நான் மேனேஜ்மெண்ட் கற்றுக்கொண்டேன். நூல் பிடித்த மாதிரி செலவு செய்வதும், அந்த வருமானத்துக்குள் சேமிப்பதும்

கடைபிடிப்பவர். அம்மாவால்தான் பல நல்ல விஷயங்கள் எனக்குள் ஏறின. கதை புத்தகங்கள் படிக்கச் சொல்வார். நான்காவது படிக்கையில், காமேஸ்வரன் வீட்டிலிருந்து வாங்கி வரும் காமிக்ஸ்களை அம்மாவும் படிப்பார். அம்மாவைப் போல நானும் அண்ணனும் தொடர் கதைகள் படிப்போம். அதிகாலையில் எழுப்பி காஃபி போட்டுக் கொடுத்து, நான் தூங்கி வழியாமல் பாடங்களைப் படிக்கிறேனா என செக் பண்ணுவார். அம்மா, என்னை நிறைய கோயில்களுக்குக் கூட்டிப் போவார். ஆன்மிகத்தின் அடிப்படையைப் புரிய வைத்தவர். ஓவியம் வரைவதை மிகுந்த உற்சாகப்படுத்துவார். ஒரு கட்டத்தில் வீட்டு வாசலில் நான் சின்னச்சின்ன கோலங்கள்கூட போடுவேன். பள்ளி இறுதி நாட்களில் என்னை 'ஜிம்'க்குப் போகச் சொல்லி, கடலை ஊற வைத்து வெறும் வயிற்றில் சாப்பிடத் தருவார். ஏதோ எனக்கு 'சிக்ஸ்பேக்' வரவில்லை என்றாலும், சிங்கிள் நோயும்' வர

மற்ற எந்த உறவை விடவும் தாய் - தந்தை பாசமும், அன்பும் முழுக்க முழுக்க தன்னலமற்றது என்பதாலேயே, அது வேறெந்த உறவைவிடவும் உயர்வுடையது.

அம்மாவின் மிகப் பெரிய ப்ளஸ் பாய்ண்ட்.

மற்ற எந்த உறவை விடவும் தாய்-தந்தை பாசமும், அன்பும் முழுக்க முழுக்க தன்னலமற்றது என்பதாலேயே, வேறெந்த உறவுக்கும் இணையில்லாத உயர்வுடையது. என் தாய் - தந்தைக்காக மிக பெருமைப்படுகிறேன். சொல்லப் போனால், நாங்கள் மிடில் கிளாஸ் ஃபேமிலிதான். ஆனால் நான், என் அண்ணன், தங்கை யாருமே எந்த இடத்திலும் சின்னதாய் கஷ்டப்பட்டதாகக் கூட ஞாபகமில்லை. எல்லாக் கஷ்டங்களையும் அம்மாவும் - அப்பாவும் இடிதாங்கி போல் ஈர்த்துக்கொண்டார்கள். இன்று நான் இத் தொடர் எழுதும் நிலையை அடைவது வரை அவர்களே எல்லாவற்றுக்கும் காரணம். 'புலிகேசி' வெற்றி விழாவுக்கு அவர்கள் சென்னை வந்திருந்து மிகச் சந்தோஷப்பட்டார்கள். இரண்டாவது படம் ரிலீஸானபோது அப்பா, 'அறை எண் 305ல் கடவுள்' என் பையன் எடுத்ததுன்னு சொல்லிக்கப் பெருமையா இருக்குப்பா! என்றார். என்றென்றும் அவர்கள் ஆசிர்வாதங்கள்தான் என்னை வழிநடத்தும்.

இந்தொடர் மூலம் என் நினைவுகளை சின்னதாய்ப் புதுப்பித்துக்கொள்ள முடிந்தது. அதை மரியாதைக்குரிய 'கல்கி' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முடிந்ததில் கூடுதல் சந்தோஷம். போரடித்திருக்க மாட்டேன் என நம்புகிறேன். வாய்ப்பளித்த கல்கிக்கும் நெகிழ்வான நன்றிகள். வடக்கை அடைய வேண்டியவன், தெற்கில் வெகுதொலைவு நடக்கவேண்டும் என்பார்கள். எனது (சினிமா) துறையில் இப்போதுதான் தெற்கில் நடக்க ஆரம்பித்திருக்கிறேன். தங்கள் அனைவரின் வாழ்த்துகளோடு! **(முற்றும்)**



கிரேஸியைக் கேளுங்கள்

● **மணிமொழி கந்தசாமி,**
விருதுநகர்.

அமெரிக்காவுக்கு வேலைக்குச் செல்லும் இளைஞர்களுக்குத் தாங்கள் சொல்ல விரும்புவது...?

தாராளமாகச் சென்று சம்பாதியுங்கள். ஆனால் தாய், தந்தையை மறந்துவிடாதீர்கள். சம்பாதிக்க ஒபாமா; செலவழிக்க ஒங்கப்பாம்மா!

● **வெங்கடேஷ்,**
சென்னை.

பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும் என்கிறார்களே... மெய்யாவா கிரேஸி...?

சொல்ல முடியாது. சில சமயத்தில் நாரோடு சேர்ந்து பூவே நாறிடும்.



● **கே.எஸ்.கிழாம்பூர் ராமையா,**
டேவாஸ், மத்திய பிரதேஷ்.

எண்பத்தியாறு வயதைத் தாண்டி விட்ட எனக்கு, நீங்க சொல்ல நினைப்பது என்ன...?

நானும் எண்பத்தியாறைத் தாண்டிவிட்டேன். 'கிரேஸியைக் கேளுங்கள்' இந்த வாரத்துடன் எண்பத்தியேழாகிறது. 'என் பத்தி யாரு?' எதைக் கேட்டாலும் பதில் சொல்லாம, நாம இருவரும் நூறு தாண்டும் வரை கேள்விக்குறியாக இருந்து விடுவோம்.

● **வி.ஜி.சத்தியநாராயணன்,**
நங்கநல்லூர்.

கல்யாண மாலை நிகழ்ச்சியில் மணமகன் தேடும் பெண்கள் எல்லாருமே, என்னை அனுசரித்துப் போகின்ற மாதிரி வரன் வேண்டும் என்கிறார்களே.. ஏன் அப்படி...?

இந்த விஷயத்தில் 'பெண் புத்தி முன் புத்தி...' பெண்கள், வரும் முன் காப்பவர்

உங்கள்

கள்; ஆண்கள், வந்த பின் தோற்பவர்கள்.

● **ஜே. துரைராஜ், சென்னை.**

வெற்றியின் விலாசம் என்ன...?

பழைய என் 'பான்டிங்'... புதிய என் 'தோனி', நிரந்தர விலாசம் 'தோனிக்கு' முன், வெற்றிக்கு 'போணி' பண்ணிய விஸ்வநாதன் 'ஆனந்த்.

● **எம். அசோக்ராஜா, திருச்சி.**

மகாபாரதத்தின் ஹீரோ கிருஷ்ணரா... அர்ஜுனரா...?

இருவரும் இல்லை. மகாபாரதம், பாஞ்சாலி என்ற ஹீரோயின் ஓரியண்டெட் சப்ஜெக்ட். அதனால்தான், 'தருமனின் சூது',



'கண்ணனின் தூது' என்று தலைப்பிடாமல் 'பாஞ்சாலி சபதம்' எனப் பெயரிட்டார் பாரதியார்.

● *ரா. பிரசன்னா, மதுரை.*

நாம தூங்கறதை மட்டும் நம் மால, பார்க்கவோ, உணரவோ முடிவதில்லையே...?

'நல்லாத் தூங்கினேன்' என்று அந்த அனுபவத்தைச் சொல்ல வைப் பவன் எவன்? முதலில் அந்த 'அவ னை'க் கண்டுபிடியுங்கள். அதுதான் விழிப்புணர்வு. அப்புறம் பாருங்கள், மற்றவர் தூக்கத்தில் நாம் ஒய்வு பெற லாம்.

கனவுகன்னி?

● *வி. சிவசங்கர், கள்ளக்குறிச்சி.*

விரும்பியது கிடைப்பதற்கும், கிடைத்ததை விரும்புவதற்கும் சரியான எடுத்துக்காட்டு...?

விரும்பியது கிடைப்பது - இளமை. கிடைத்ததை விரும்புவது - முதுமை. கிடைக்காததை விரும்பாமல் இருப்பது புத்திக்கூர்மை.

● *அ.யாழினி பர்வதம், சென்னை.*

வாலிபத்தில் தங்கள் 'கனவுக்கன்னி' யார்...?

இன்றும் கனவில் வந்து கழுத்தறுக்கும் அதே, 'கிழக் கன்னி'தான்.

● *இராம. பார்த்திபன், வயலூர்.*

உங்களைக் கவர்ந்த கார்டூனிஸ்ட்?

'சிரிப்புத் திருடன் சிங்காரம், ரெட்டை வால் ரெங்குடு, முன்னெச்சரிக்கை முத் தண்ணா' போன்ற உற்சாகங்களை உலவ விட்ட, இந்தியாவின் வால்ட் டிஸ்னி 'மதன்'.

● *ராகினி, கும்பகோணம்.*

கனவுக்கும், நனவுக்கும் என்ன வித்தி யாசம்...?

கனவு - நாம் மட்டுமே காணும் நனவு. நனவு - நாம் காண்பதை மற்றவர்களும் காணும் கனவு.

தெனாவட்டு



அருவா அடிப்பவனும் ஆளை அடிப்பவனும் முட்டிக்கொண்டால் என்னவாகுமோ... அதுதான் கதை. அருவா வென்றதா ஆளைக் கொன்றதான்னு சற்றே அதிகம் இரத்தம் கலந்து திரைக்கு வந்திருக்கிறது தெனாவட்டு.

முதல் படமே ஆக்ஷன் களமென்பதால் லாஜிக் குறித்து கவலைகொள்ளாமல், புகுந்து விளையாடியிருக்கிறார் இயக்குநர் வி.வி.கதிர்.

அருவா அடிக்கும் மதுரை டையனாக ஜீவா. படத்துக்குப் படம் வித்தியாசம் காட்டி, நடிப்பில் மெருகேறும் ஜீவாவுக்கு இந்தப் படம் ஆக்ஷன் அவதாரம். மதுரை 'ஸ்லாங்' பேசுவதிலிருந்து, காதலையும் கிண்டலையும் கலந்துகட்டி கொடுப்பது வரை படம் முழுக்க படு யதார்த்தமாக வருகிறார். வழக்கமான தமிழ் கதாநாயகியாக பூனம் பஜ்வா. நாயகியை முன்வைத்துதான் எல்லா மோதல்களும் என்றாலும், நாயகிக்கு நடிப்பதற்கு வாய்ப்பில்லை என்ற அதே நிலை இந்தப் படத்திலும் தொடர்கிறது. ஒரே ஆறுதல் ஆபாசமில்லாத உடைகளில் அழகழகாய் வந்து போகிறார். நாயகிக்கு அப்பாவாக வரும் டெல்லி கணேஷ் பாத்திரத்தில் அநியாயத்துக்கு ஓட்டை. ஆளை அடிக்கும் அநியாய வில்லனாக ரவி. இவர் புதுமுகமென்றாலும், கோலிவுட் பரீட்சையில் பாஸ் மார்க் வாங்குகிறார். நடுரோட்டில் கொலை செய்துவிட்டு வில்லன், ராணுவ வீரன் ரேஞ்சுக்கு மார்தட்டிக் கொள்வதை தமிழ் சினிமாவில் மட்டுமே பார்க்கலாம்! எப்போதும் நடிப்பில் ஆவேசப்படும் சாய்குமார்க்கு அமைதியான போலீஸ் வேடம் ஒட்டவில்லை.

இசை ஸ்ரீகாந்த் தேவா. பாடல்களில் காதுகளுக்குள் மத்தளம் வாசிக்கிறார். அனல் அரசுவின் சண்டைப் பயிற்சியில் ஏகத்துக்கும் அனல். கஞ்சா கருப்புவின் காமெடி கிச்சுகிச்சு மூட்டுவதற்குப் பதில் எரிச்சல் அடைய வைக்கிறது. வழக்கமான பாணியிலிருந்து விலகி அரவாணிகளை கண்ணியத்தோடு பயன்படுத்தி இருப்பதற்கு இயக்குநருக்குப் பாராட்டு. வசனங்களில் இருக்கும் வேகத்தை, திரைக்கதையிலும் காட்டியிருக்கலாம்.

தெனாவட்டு - தீ வேடமிட்ட தென்றல்!

- மகிமைராஜன்

ரகசிய தும்மல்...



விழிப்புத் தட்டியவுடன் மணியைப் பார்த்தாள் நிறைமதி.

'அச்சச்சோ, நாலரை.'

ராத்திரி படுத்ததும் மோகன் ஆசையோடு நெருங்கி வந்தது நினைவுக்கு வந்தது. ஏனோ அசதியாக இருந்ததால், தூங்கி விட்டாள். யாருக்கு இப்படியொரு நல்ல புருஷன் கிடைப்பான்? பெண்டாட்டிக்குப் பிரியமில்லை எனும்போது எத்தனை பேரால் இப்படி அமைதியாகத் தூங்கிவிட முடிகிறது?

அன்று மோகன் வியாபார வேலையாக வெளியூர் போகிற தேதி வேறு. இன்னும் அரைமணி நேரத்தில் மாமனார் அலாரக் குரல் கொடுப்பார். பரபரப்பாய் எழுந்து கிளம்பினால், திரும்ப ஊர் வந்து சேர எப்படியும் நான்கைந்து நாட்களாகி விடுமே. மோகன் மீது சரிந்தாள். விழித்துக் கொண்டான் மோகன்.

ஆனால், மாமனாரின் அலாரம் அன்று முன்னதாகவே கேட்டது...

''யப்பா... மோகா.. மோகா...''

மோகன் மணியைப் பார்த்தான். ''இன்னும் நேரம் இருக்குப்பா. பஸ் ஆறரைக் குத்தானே?''

''இன்னிக்கு வியாழன் ஆறு டு ஏழரை எமகண்டம். அதனால நீ அஞ்சே முக்கா வண்டிக்கே கிளம்பிடு...''

''ஓ... அப்ப சரிப்பா...'' ஏக்கப் பெருமூச்சோடு மோகன் எழுந்து புறப்படப் போனான். இழுத்தாள் நிறைமதி.

''அங்கே அப்பா கத்திக்கிட்டிருக்கார்... மூடே இல்லை...''

ஆழமான பார்வையோடே, அவனுக்கு வேண்டியதை எடுத்துக்கொடுத்து உதவிக் கொண்டிருந்தாள் நிறைமதி. மாமனார் பஞ்சாங்கத்தோடு வந்தார்.

''மோகா... இன்னைக்கு மேற்கே சூலம். பரிகாரமா மார்ல தைலம் பூசிட்டுக் கிளம்பு...''

''சரிப்பா...''

''நிறைமதி... நான் வெளிய போய் சகுனம் பார்த்துட்டுக் குரல் கொடுக்கறேன்... அப்புறமா மோகனை அனுப்பு...''

''சரிங்க மாமா...''

சற்று நேரத்தில் வெளியிலிருந்து கூப்பிட்டார் பெரியவர்.

''நிறைமதி... பசு மாடு வருது... நல்ல சகுனம் மோகனை வரச் சொல்...''

மோகன் வாசல் தாண்டிக் கால் வைக்க,

''ஹா... ஆச்...'' - பலமாகத் தும்மி விட்டாள் நிறைமதி.

''கெட்டுது போ.. இனி ஒன்பதரை வண்டிக்குத்தான் போகணும்'' - சலிப்போடு உள்ளே வந்தார் மாமனார். மோகனை அறைக்குள் அழைத்து, இன்னொரு முறை தும்மிக் காட்டிக் கண்ணடித்தாள் நிறைமதி. ●

◆ **தாண்டவக்கோன்**

யுத்தம் சரணம் கச்சாமி!

இலங்கையிலிருந்து வெளியேறிய
புத்தன்
தனுஷ்கோடியின் மிஞ்சிய
திட்டுகளில் அலைந்துகொண்டிருக்கிறான்

அவனை இறக்கிவிட்ட
படகுகள்
திரும்பிவிட்டன
யுத்தக் கரைகளுக்கு

நினைத்திருக்க முடியுமா
இந்தியாவுக்குள்
அகதியாய்த் திரும்புவானென்று

இருபத்தொன்றாம் நூற்றாண்டின்
ஒரு பின்னிரவில்
கள்ளத்தோணி பயணம் அமையுமென்று

அவனால்
ஒரு பறவையாக முடியும்
நீலக்கடலை
தேசங்களைக் கடக்க முடியும்

அப்படித்தான்
சிங்களத்தைக் கடந்தான்
இனி திரும்பக் கூடாதென்ற
வைராக்கியத்துடன்

புத்தனின் வைராக்கியம்
உலகம் அறியும்
அரண்மனைகள் அறியும்
யசோதரை அறிவாள்

புத்தனின்
இதயம் தின்று
பசியாறுகின்றன ஓநாய்கள்

யாரும் கதறவில்லை
யாருடைய
ரத்தமும் உறையவில்லை

எங்கு அமர்வான் புத்தன்
இந்தியாவிலும் இல்லை
போதிமரம்



கோசின்ரா

ஐஸ்வர்யங்களின் அதிதேவதை!

சாரதா நவராத்ரியின் ஒன்பது நாட்களிலும் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று சக்திகளையும் சிறப்பாக வழிபடுகிறோம். துஷ்ட நிக்ரகத்தின் பொருட்டு நிகழ்ந்த தேவியின் உற்பவத்தைப் பேசும், தேவி பாகவதத்தைப் பாராயணம் செய்கிறோம். இந்தத் தேவி பாகவதம் மது, கைடப வதம்; சும்ப, நிகம்ப வதம்; மகிஷாசுர வதம் ஆகிய மூன்று நிகழ்வுகளை வர்ணிக்கிறது. மது, கைடபன் ஆகிய இரு அசுரர்களையும் தேவி, மகாகாளியின் உருவெடுத்து வதம் செய்தாள். சும்பன் நிசும்பன் இருவரையும் மகா சரஸ்வதி வதம் செய்தாள். மகிஷாசுரனை மகா லக்ஷ்மியாகத் தோன்றி அழித்தாள்.

மகிஷாசுரன், தமோகுணத்தின் உருவம். சோம்பலின் வடிவம். எனவேதான் சோம்பலுக்குப் பெயர்போன எருமையின் தலையுடன் அவன் தோற்றம் அளிக்கிறான். மகிஷாசுரன் என்பது ஓர் உருவகமே! ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உள்ள தமோகுணமே மகிஷாசுரன். இந்தத் தமோ குணத்தை வெல்வது எப்படி? சோம்பலைச் சுறுசுறுப்பால் அல்லவா வெல்ல முடியும்? சோம்பலினால், விளைவது தரித்திரம் என்றால், சுறுசுறுப்பினால் அடையக் கூடியது ஐஸ்வர்யம்! எனவே தமோகுணத்தின் உருவான மகிஷனை அழிக்க, ஐஸ்வர்யத்தின் அதிதேவதையான மகாலக்ஷ்மியே கிளம்பி விட்டாள்!

மகிஷனை வதம்செய்ய அவதரித்த தேவியான மகாலக்ஷ்மி, நாம் பொதுவாகக் காணும் மகாலக்ஷ்மி போல, நான்கு திருக்கரங்களுடன், இரு கரங்களில் தாமரை மலர் ஏந்தி, மற்ற இரு கரங்களில் இருந்து பொற்காசுகள் பொழியும் வடிவில் தோற்றமளிப்பவள் அல்லள்! இவள் பதினெட்டு கரங்களுடன் விளங்கும் பராசக்தி வடிவம்!

ஒரு பெண்ணால் மட்டுமே அழிவு என்று வரம் (சாபம்?) பெற்ற மகிஷாசுரனை அழிக்க, தேவர்களின் சக்தியெல்லாம் ஒன்றுதிரண்டு உருவான பெண்ணுருவமே அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி! சிவனது தேஜஸ் முகமாகவும், விஷ்ணுவினுடைய தேஜஸ் பதினெட்டு கரங்களாகவும், பிரம்மாவினுடைய தேஜஸ் பாதங்களாகவும், அக்னியினுடைய தேஜஸ் மூன்று கண்களாகவும், சந்திரனுடைய தேஜஸ் மார்பகங்களாகவும், வருணனுடைய தேஜஸ் தொடைகளாகவும், வசுக்களின் தேஜஸ் கை விரல்களாகவும், சூரியனுடைய தேஜஸ் கால் விரல்களாகவும், குபேரனுடைய தேஜஸ் மூக்காகவும், பிரஜாபதியின் தேஜஸ் பற்களாகவும், இரவு பகல் ஆகிய சந்த்யையின் தேஜஸ் இரண்டு புருவங்களாகவும், வாயுவினுடைய தேஜஸ் காதுகளாகவும், வருணனும் ஸ்கந்தனும் உதடுகளாகவும், யமனுடைய தேஜஸ் குழற்கற்றையாகவும் பூமாதேவியின் தேஜஸ் பின்பாகமாகவும் உருக்கொண்டன. அனைத்து தேவதாசக்திகளின் ஒருமித்த சக்தியாகப் பேருருக் கொண்டாள் அம்பிகை!

பாற்கடல் இவள் அணியத்தக்க ஆடை

த.கி. நீலகண்டன்

அழகின் வடிவே... அருளின் வடிவே...


19

களையும், விஸ்வகர்மா ஆபரணங்களையும், இமயமலைக்கரசான ஹிமவான் சிங்க வாகனத்தையும் சமர்ப்பித்தனர். இனி, அசுரவதம் செய்யப் புறப்பட்ட அம்பிகைக்கு ஆயுதங்கள் வேண்டுமே! இந்திரன் தன்னுடைய வஜ்ராயுதத்தையும் ஐராவதத்தின் மணியையும் தந்தான். விஸ்வகர்மா கதாயுதத்தையும் பரசு ஆயுதத்தையும் அளித்தார். வருணன் தன்னில் உருவான சங்கைத்



தந்தான். மகாவிஷ்ணு தன் சக்கரத்தைத் தந்தார். சிவன் தன் சூலத்தைக் கொடுத்தார். சமுத்ரராஜன் பாசக்கயிற்றையும் ஜல தேவன் தாமரை மலரையும்; யமன் கால தண்டத்தையும்; காலன் கத்தி கேடயம் ஆகியவற்றையும்; அக்னி சக்தியாயுதத்தையும்; வாயு வில்லும் அம்புப் பெட்டியையும், குபேரன் பானபாத்திரத்தையும் தந்து வணங்கினர். பிரம்மதேவன் கமண்டலம், ஜபமாலை... ஆகியவற்றைத் தந்தார். இப்படி சமஸ்த தேவதா மூர்த்திகளின் சக்தி வடிவமாய், பதினெட்டு கரங்களிலும் பதினெட்டு ஆயுதங்கள் தாங்கி, தேவி திவ்ய தரிசனம் தந்தாள். தேஜோமயமான இந்தத் திவ்ய மங்கள ரூபத்தில், சகல தேவர்களும் அவர்கள் தேஜஸும், சக்திகளும், ஆயுதங்களும் அடக்கம் என்பதால், இந்த மகோன்னதமான வடிவம் தேவியின் விஸ்வரூபம்!

தேவி பாகவதம் விரிவாக வர்ணிக்கும் இந்த வடிவத்தில் வலதுபுறம் உள்ள ஒன்பது திருக்கரங்களில் கீழிருந்து மேலாக அக்ஷமாலை, தாமரை, அம்பு, வாள், வஜ்ராயுதம், கதாயுதம், சக்கரம், சூலம், அங்குசம்... ஆகியவை விளங்க, இடது புறம் உள்ள கரங்களில் மேலிருந்து கீழாக சங்கு, மணி, பாசம், சக்தியாயுதம், கால தண்டம், கேடயம், வில், பான பாத்திரம், கமண்டலம் ஆகியவற்றைத் தரித்து, பின் புறம் சிம்மவாகனம் விளங்க, தாமரை மலர் பீடத்தில் கம்பீரமாக நின்றவண்ணம் தேவி தரிசனம் தருகிறாள்!

விக்ரகத்தின் அளவுப் பரிமாணம் மிக தீர்க்கமானது. பதினெட்டுக் கைகளையும் சேர்த்து வடிக்கும்போது தோள்புறத்தில் மொத்தையாக ஒரு தோற்றம் ஏற்பட்டு விட்டால் விக்ரகத்தின் அழகு போய் விடும். ஒவ்வொரு புஜமும் தோளில் இருந்து பிரிந்து, அந்தந்த கைகளில் ஏந்தும் ஆயுதத்துக்கு ஏற்ற அமைப்புள்ள கரங்களாக விளைந்து, விரல்களில் நளினமாக ஏந்திய ஆயுதங்களுடன் முடிவது ஒப்பற்ற ஒரு கலைநயம்.

தேவர்களின் சக்தியெல்லாம் ஒன்று திரட்டி உருவான பெண்ணுருவே அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி!

அம்பிகையின் கரத்தில் உள்ள ஒவ்வொரு ஆயுதமும் அந்த தமோகுணத்தை வெல்லும் தத்துவத்தை நமக்கு உணர்த்துகின்றன. உடல் மற்றும் மனவலிமை, சோர்வின்மை, புத்திக்கூர்மை, வேகம், விவேகம், குறிக்கோளில் உறுதி, மாற்றங்களை எதிர்கொள்ளும் மனோபாவம், காலத்தின் நியதியை மதிக்கும் குணம், அசையாத தவம், குலையாத அநுஷ்டானம் என்று வெற்றிக்கு வித்தாகும் பல்வேறு குணங்களையே ஆயுதங்களாக ஏந்தி நிற்கிறாள் இந்த வெற்றித் திருமகள்.

(பெருகும்)

காதைக் குடுங்க...



தொங்கலில் தோழர்கள்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜெயலலிதாவுடன் மீண்டும் தொடர்பு கொண்டிருக்கும் நிலையில், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இப்போது தொங்கலில் இருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கோ, மார்க்ஸிஸ்டுகளை விட்டுவிட்டு அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைப்பதில் சங்கடம். சில மாதங்களுக்கு முன் புறம்போக்கு நிலங்களை வளைத்து, சிறுதாவூர் பங்களா வளாகம் அமைந்திருப்பதாகப் பரபரப்பாகப் புகார் எழுந்தபோது, அரசு விசாரணைக் கமிஷன் அமைக்கும் வரை போராடியவர்கள் மார்க்ஸிஸ்டுகள். இந்த ஒரு கோபம் இருக்க, சமீபத்தில் விஜயகாந்தைப் போய் முதலில் மார்க்ஸிஸ்டுகள் சந்தித்தது ஆத்திரத்தை ஏற்றி விட்டது. இனி இந்திய கம்யூனிஸ்டு கட்சி வேண்டுகோளை ஏற்று மார்க்ஸிஸ்டுகளோடு அம்மா உடன்பாடு கண்டாலும், பிரகாஷ் கரத், யச்சூரி போன்ற மத்திய தலைவர்களுடன்தான் பேசுவாராம் ஜெ. அதற்கு மற்றொரு காரணம் பாராளுமன்றத் தேர்தலில் எக்காரணம் கொண்டும் மாயாவதியை 'பிரதமர் வேட்பாளர்' என்று சொல்லி மார்க்ஸிஸ்டுகள் பிரசாரம் செய்யக்கூடாது என்று உறுதிமொழியை அவர்களிடம் வாங்கத்தானாம்.

தாத்தாவாகவே நம்மை வெளியே அனுப்பட்டும் என்பது தயாநிதியின் நிலைப்பாடு. அவராகவே போகும்படி அழுத்தம் கொடுக்க வேண்டுமென்பது தாத்தாவின் யுக்தி. விளைவு : அறிக்கை தாக்குதல், எதிர்த்தாக்குதல். இந்த நிலையில் தயாநிதியைக் கழகத்தில் தக்க வைத்துக் கொள்ளவேண்டுமென்ற ஸ்டாலினின் ஆசை, நிறைவேறாத ஆசையாகி விடுமோ என்று கலைஞர் குடும்பத்திலேயே பலர் கவலைப்படுகிறார்கள். காரணம் எப்பாடுபட்டாவது தயாநிதியை வெளியே தள்ளிவிட வேண்டுமென்பது, கலைஞருக்கு அவ்வப்போது தோள்கொடுக்கும் சில கட்சிப் பிரமுகர்களின் ஆசை. எந்தக் காரணம் கொண்டும், மத்திய சென்னை தொகுதியில் போட்டியிடுவதில் இருந்து பின்வாங்கக்கூடாது என்று இருக்கும் தயாநிதி, கட்சியில் தனிமைப்படுத்தப்பட்டாலும் தேர்தல் நெருக்கத்தில் ஏதேனும் சமாதான பேக்கேஜ் வரும் என்று உறுதியாக நம்புகிறாராம்.

- ஸ்ரீநி

குடத்தைத் தூக்கிக்கொண்டு புடைவை நனையநனைய வருவதுதான், அம்மாவைப் பற்றிய முதல் நினைவுச் சித்திரமாக உள்ளது. தூரத்திலிருந்து பார்த்தால் குடம் ஒரு குழந்தைபோல் தெரியும்.

அந்தக் காலத்தில், பெண் குழந்தைகளின் கையில் சிறுபிராயத்திலேயே தோண்டியைக் கொடுத்துவிடுவார்கள். தோண்டி என்பது குடத்தின் தங்கை. அம்மா ராகம் போட்டுப் பாடும்.

ஒரு குடம் தண்ணி ஊத்தி
ஒரு பூ பூத்தது -
ரெண்டு குடம் தண்ணி ஊத்தி
ரெண்டு பூ பூத்தது!
மூணு குடம்
தண்ணி ஊத்தி
மூணு பூ பூத்தது!

சிறு குழந்தைகளுக்குக் கவிதையும் கணக்கும் பிசைந்து ஊட்டிய காலமாக அது இருந்தது. அம்மா, இந்தப் பாட்டைப் பாடும்போது அப்படியே கண் முன்னால் பூப்பூப்பது போல் சந்தோஷமாக இருக்கும்.

கால ஓட்டத்தில் வீட்டிலிருந்த பழைய பாத்திரங்களின் இடத்தை, நவீனமான புதிய பாத்திரங்கள் பிடித்துக் கொண்டு விட்டன.

கர்ணன், கவச குண்டலத்தோடு பிறந்ததுபோல் அம்மா குடத்தோடு பிறந்திருக்குமோ என்று தோணும்.

நிறைய ஜகடைகள் மாட்டிய பொதுக் கிணற்றில் இருந்துதான் கிராமத்துப் பெண்கள் தண்ணீர் கொண்டு வருவார்கள். அம்மாவோடு நானும் போவேன். அங்கேதான் பெண்கள் தங்கள் கதைகளை மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். தண்ணீரோடு சேர்ந்து பெண்களின் பிரலாபங்களும் குடத்தில் நிரம்பித் தளும்பும்!

யாரோ ஒரு பெண் குடம் நிறையத்



தஞ்சாவூர்க் கவிராயர்

சிறப்புச் சிறுகதை

குடத்தில் தளும்பும் கதை!

தண்ணீர் கொண்டு வந்து வைத்துவிட்டு, அப்புறம் தூக்குப் போட்டுக் கொண்டதாம். பெண்களின் பேச்சு கிணற்று ஜகடைகளின் சத்தத்தை மிஞ்சுவதாக இருக்கும்.

அம்மாவின் அதட்டலை மீறி, கட்டைச் சுவரில் ஏறி கிணற்றுக்குள் எட்டிப் பார்ப்பேன். அடி ஆழத்தில் கறுப்பாக மின்னும் தண்ணீர்.

''அம்மா நீ சொன்ன கதைல வர்ற மாதிரி, காக்கா செஞ்சது போல இதுல கல்லைப் போட்டா தண்ணி மேல வருமே. ஏன் கஷ்டப்பட்டு வாளியில் எடுக்கணும்?'' என்பேன்.

''போடா, முட்டாள்!'' என்று சொல்லும் அம்மா.

அம்மாவுக்குப் பிடித்தமான ஒரு பித்தளைக் குடம் வீட்டில் இருந்தது. மாமியார் கொடுத்த குடம். அந்தக் குடத்தில் அப்படி என்ன விசேஷமோ, நாங்கள் அந்த வீட்டுக்குக் குடிவந்தபோது பக்கத்து வீட்டுப் பெண்கள் அந்தக் குடத்தைப் பார்த்து விட்டுப் போனார்கள்.

அம்மா அதைப் புளி போட்டு பளபள வென்று துலக்கி வைக்க, தங்கம் மாதிரி ஜொலிக்கும்.

''அம்மா இது தங்கத்தால் செஞ்சது தானே?'' என்பேன்.

''தங்கத்தைவிட ஒசத்திடா இது. என் மாமியார் தந்தது.''

''நீதான் எங்க அம்மாவை மெச்சிக்கணும். அந்தச் சின்ன வயசுல இவ்ளோ பெரிய குடத்தைக் கொஞ்சம் கூட இரக்க மில்லாமல் கொடுத்து தண்ணீர் கொண்டு வரச் சொல்லுமே! அப்போ எனக்கு விவரம் போதாது. இப்ப நினைச்சா கஷ்டமா இருக்கு மங்கா...'' என்பார் அப்பா.

படிப்பு, வேலை, சென்னைக்கு மாற்றல், திருமணம், அப்பாவின் மரணம், சென்னையில் வாடகைக்கு வீடு தேடி அலைச்சல், ஏதோ ஒரு அடுக்கு மாடி குடியிருப்பில் வாடகை வீடு கிடைத்து விடும்.

ஒவ்வொரு முறை வீடு மாற்றும் போதும் அம்மா கேட்கிற கேள்வி.

''அந்தக் குடத்தை எடுத்து வெச்சிட்டியாடா?''

''வெச்சாச்சு. வெச்சாச்சு!' என்பாள் என் மனைவி எரிச்சலுடன்.

வீட்டுக்கு வந்த உறவினர் என் மனைவியிடம், ''அம்மா, உன் வீட்ல அடசல் ரொம்ப ஆயிடுச்சே. இந்தப் பழைய பித்தளைப் பாத்திரங்களை எல்லாம் கடைல போட்ருங்க...'' என்றார்.

ஒரு ஆள் தராசுடன் வந்து சேர்ந்தான். நண்டுசிண்டு சாமான்களை எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள் என் மனைவி. குடத்தையும் எடுத்து வைத்தாள்.

''இது எதுக்கு இனிமே?''

அம்மாவுக்குக் கண் பார்வை சுத்தமாகப் போய்விட்டாலும் செவிப்புலன் கூர்மை. கட்டிலில் இருந்தபடி குரல் கொடுத்தது.

''குடத்தை மட்டும் போட்டுடாத தாயி!''

''ஏன் ஜிங்குனு எந்திரிச்சு கொடத்துல தண்ணி கொண்டு வரப் போறீங்களா..?'' - மனைவியின் எகத்தாளம்.

''ரொம்ப பழசாயிடுத்தும்மா. நல்ல கனமான பழைய பித்தளை. எடை ரொம்ப இருக்குமே. எடுத்துக்கட்டுமா?'' என்றான் தராசு.

''குடத்தை எடுத்து வைடா. உபயோகப் படும்'' அம்மா விடவில்லை.

எனக்கு மறுக்கத் தோன்றவில்லை. குடத்தைப் பரணில் பத்திரப்படுத்திவிட்டு, மற்ற பொருட்களை எடைக்குப் போட்டு விட்டேன்.

அம்மாவின் உடம்பு பலவீனமாகிக் கொண்டே வந்தது. சாப்பாடு கூட வேண்டி யிருக்கவில்லை. காப்பி கிடைத்தால் போதும்.

''ஒரு வாய் காப்பி கொடம்மா'' என்று என் மனைவியிடம் கெஞ்சுவது போல் கேட்கும் அடிக்கடி.

''இவங்க நச்சரிப்புத் தாங்காம கொழந்தைக்கு எடுத்து வெச்ச பாலில் காப்பி போட்டுக் கொடுத்தேன் இன்னிக்கு...'' குற்றம்சாட்டுவது போல் சொன்னாள் மனைவி.

ஒருநாள் ஆஃபீஸிலிருந்து திரும்பிய என்னிடம் என் மனைவி சொன்னாள் :

''என்ன ஆச்சரியம்... இன்னிக்கு பூரா உங்க அம்மா காப்பியே கேக்கல...''

நான் வேகமாக அம்மாவைப் படுக்க வைத்திருந்த அறைக்குச் சென்றேன்.

''அம்மா'' என்றேன். பதிலே இல்லை; தொட்டேன்; சில்லிட் டிருந்தது. எப்போது உயிர்

'மல்லிகை' படத்தில் ஆண் வேடத்தில் நடிக்கிறார் நடிகை பூமிகா என்றதும் நமக்கே சற்று ஆச்சர்யம்தான். ஏனெனில், பேசும்போது கூட வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டு உதடுகளுக்கு வலிக்காமல் பார்த்துக்கொள்வார் பூமிகா. பூஞ்சை உடல், மிரட்சிப் பார்வை, அதிராத நடை, அடங்காத அழகு... இப்படி இருக்கும் பூமிகா ஆண் வேடத்தில் எப்படி...? வாஞ்சையோடு கேட்டோம் மல்லிகை படத்தின் இயக்குநர் வி. சமுத்திரத்திடம்...

''என்னோட முதல் படம் 'மல்லிகை'. படத்தோட டைட்டில் மல்லிகைன்னு முடிவான பிறகு, கதாநாயகியாக என் மனத்தில் தோன்றியவர் பூமிகாதான். 'சில்லுன்னு ஒரு காதல்' படத்துக்குப் பிறகு கல்யாணம் செய்துகொண்டு வாழ்க்கையில் செட்டில் ஆனவர். நடிப்புக்கு வளைந்து கொடுப்பாரா? சந்தேகத்தோடு அணுகினோம். கதையைக் கேட்டதும், அரைமணி நேரம்



டைம் கொடுங்க. யோசிச்சுட்டுச் சொல்லிட றேன் என்றார். அந்த அரைமணி நேரமும் எனக்கு பிரசவ அவஸ்தைதான். பிறகு ஓ.கே. என்றதும்தான் எனக்கு உயிர் வந்தது. மல்லிகை மென்மையான காதல் கதை. இருப்பினும் காதலின் வன்மையான பக்கங் களையும் செல்லுலாய்டில் செதுக்கி இருக் கிறோம். தான் வரும் காட்சிகளில் எழுபது சதவிகிதம் ஆண் வேடத்தில் வருகிறார். அச்சு அசப்பில் அப்படியே ஒரு சாஃப்ட்வேர் ஆசாமி போல இருக்கிறார். பூமிகாவை நடிக்க சம்மதிக்க வைத்தது போல இளையராஜாவை இசையமைக்க வைக்கவும் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டோம். அவரது இசையில் பாடல்கள் அனைத்தும் காதலின் கதகதப்போடு வந் திருக்கின்றன'' என்கிறார். '1977' படத்தில் சரத்குமார்க்கு ஜோடியாக நடித்த பர்ஸானா இப்படத்தில் இரண்டாவது கதாநாயகி யாக நடிக்கிறாராம்.

- கண்மணி



'மல்லிகை' படத்தில்...

பிரிந்ததோ?

என் மனைவி விசும்பி விசும்பி அழு தாள். குழந்தைகள் பயத்துடன் பார்த்தன.

நண்பன் ராஜகுமாரன், எல்லாவற்றை யும் பார்த்துக்கொண்டான்.

பாடை கட்ட ஆட்கள். சங்கு ஊதி சேகண்டி அடிக்கும் தாசரி. வீட்டுக்கு முன் னால் ஷாமியானா. முக்கிய உறவினர் களுக்கும் நண்பர்களுக்கும் தகவல்.

பட்டணத்தில் வாழ்வது மட்டுமல்ல; சாவதும் கஷ்டம்தான்!

''ஆகட்டும்... ஆகட்டும்...'' யாரோ அவசரப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

நான் வசித்த குடியிருப்பிலிருந்து சில முகங்கள் எட்டிப் பார்த்தன. அவற்றில் அனுதாபம் இல்லை. மரணம் அவர்கள் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டதைக் காண நேர்ந்த பயம் இருந்தது. ஆஃபிஸுக்குப் போக வேண்டுமே என்ற கவலை இருந் தது.

வீடு முழுவதும் ஊதுவத்தி வாசனை. ரோஜாப்பூ வாசனைகூட இப்படி அடி வயிற்றைக் கலக்குமா?

ஐயர் கத்தினார்.

''பாடியைக் குளிப்பாட்டணும். டய மாச்சு...''

தொடர்ந்து கசமுசவென பேச்சுகள். ராஜகுமாரன் கையைப் பிசைந்துகொண்டு நின்றான்.

''பாஸ்கர், தெருமுனைலேர்ந்து தண்ணி கொண்டு வர ஏற்பாடு பண்ணிட்டேன். நம்ம வீட்லேர்ந்தே தண்ணி கொண்டு போய் வச்சுடலாம். அஞ்சு குடம் வேணு மாம். ஐயர் சொல்றார்...''

மூக்கைச் சிந்திக்கொண்டு எழுந்து வந்தாள் என் மனைவி.

''ஏங்க... பரண் மேல ஒரு குடம் கெடக்கில்ல...''

ஸ்டூலைப் போட்டு இருட்டில் துழாவி ஒட்டடையும் தூசுமாய்க் கிடந்த அம்மாவின் குடத்தை



ஒட்டடையும் தூசுமாய் இருந்த அம்மாவின் குடத்தை பரணிலிருந்து எடுத்தேன்!

எடுத்தேன்.

'உபயோகப்படும் என்று சொன்னாயே. இதற்குத் தானா அம்மா?' அழுதேன்.

இன்னும் நாலு குடங்களுக்கு எங்கே போவது? குடியிருப்பில் யார் வீட்டிலும் குடம் இல்லை.

''ஸாரி, சார்!''

''குடம் இல்லியே சார்!''

உதவிக்கு வந்த இளைஞன் சொன்னான்.

''அண்ணே! நீங்க சொல்லுங்க... 100 குடம் வேணும்னாலும் கொண்டாறேன்...''

''நாலு குடம் போதும்ப்பா!''

''பிளாஸ்டிக் குடம். பரவாயில்லையா?''

ஐயர் சொன்னார் :

''பிளாஸ்டிக் குடம் உதவாது ஸ்வாமி. பித்தளை இல்லேன்னா எவர்சில்வர் குடம் கொண்டு வாங்கோ...''

'இப்போதெல்லாம் குயவர் வீட்டிலும் பிளாஸ்டிக் குடம் வந்து விட்டது.'

எங்கே படித்தேன்? கவிதையா? பட்டி மன்றத்தில் கேட்டதா? ஞாபகமில்லை.

''என்ன ஸார் யோசனை? குடம் கேட்டேனே!''

ஓடினேன். பக்கத்திலிருந்த குடியிருப்பின் படிகளில் ஏறி இறங்கினேன். யார் வீட்டிலும் குடம் இல்லை!

என்னுள் முட்டிய அழுகை கவிதையாய்த் தளும்பியது :

பனிக்குடம் உடைந்து
பெற்ற தாயை
கடைசியாய்க் குளிப்பாட்ட
குடமின்றி அலைகிறேன்
அடுக்குமாடி கானகத்தில்...

குடம் போல் தேறிய எவர்சில்வர் பாத்திரங்களில் மேலே வேட்டி பிடித்து தண்ணீர் கொண்டு வந்தோம். நான் அம்மாவின் குடத்தைத் தோளில் சுமந்து வந்தேன்.

ஐயர் மந்திரங்களைச் சொல்லி அர்த்தமும் சொன்னார்.

''இந்த மந்திரங்களை நான் சொல்லச் சொல்ல சொல்லுங்கோ. உங்க அம்மா இப்போ வைகுந்தம் போகப் போறாங்க... சொல்லி முடிச்சதும் கோவிந்தா... கோவிந்தான்னு சொல்லணும்!''

ஐயர் சொன்ன மந்திரங்கள் என் காதில் விழத்தான் செய்தன.

பெண்கள் குடத்து நீரை அம்மாவின் தலையில் ஊற்றிக்கொண்டிருந்தனர். அழுகையினூடே மெல்ல முணுமுணுத்தேன்.

'ஒரு குடம் தண்ணி ஊத்தி
ஒரு பூ பூத்தது -
ரெண்டு குடம் தண்ணி ஊத்தி
ரெண்டு பூ பூத்தது!
மூணு குடம் தண்ணி ஊத்தி...' ●



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற, மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகள் வெளிவந்து, ஒபாமா தனது வெற்றியைக் கொண்டாடி முடிப்பதற்குள் ஆரம்பித்து விட்டது அடுத்த பிரச்னை.

'அமெரிக்காவின் புதியமுகமாக சித்திரிக்கப்படும் ஒபாமாவின் இதயம் முழுவதும் வெறுப்பால் நிரம்பியது; அவர் முகமூடி அணிந்திருக்கிறார். நிறத்தால் கறுப்பர் எனினும் அவர் எப்போதுமே வெள்ளை மாளிகையின் விசுவாசி' என்று அறிக்கை விட்டிருக்கிறது ஒசாமா அண்ட் கோ.



அல்கொய்தாவின் இரண்டாம் நிலை தலைவரான அய்மான் அல் சாவாகிரி வெளியிட்டிருக்கும் வீடியோவில் ஒபாமாவை இப்படி விளாசித் தள்ளியிருக்கிறார். உலகமெங்கும் உள்ள இஸ்லாமியர்கள் ஒபாமாவை அடியொற்றி அமெரிக்காவின் பக்கம் சாய்ந்து விடுவார்களோ என்ற அச்சம்தான் அடிப்படைவாதிகளின் வசைபாடலுக்குக் காரணம்.

சரி... ஒசாமா பின்லேடன் என்ன ஆனார்? வழக்கமாக அவர்தானே வீடியோவில் தோன்றுவார்?

உயிருடன் இருப்பதற்கு எந்த வாய்ப்புமில்லையென்றே எண்ணுகிறது அமெரிக்க உளவுத் துறை. அதனாலென்ன? ஆபத்தில் சிக்கி அழிந்தார்கள் என்றாலும், அடுத்தடுத்து வந்தவரும் அவர்களுக்குத் தம்பியடா...

ஆஸ்திரியாவில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் முத்தமிட்டுக் கொள்ள தடைபோட்டிருக்கிறார், சிஜ்பிரெய்ட் பியர்மேர் என்ற தலைமையாசிரியர். பெற்றோர்கள் அனைவருக்கும் விவரமான விளக்கமொன்றையும் அவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

'உதட்டில் முத்தமிடுகின்றனர். தோள் மீது சாய்ந்து கொள்கின்றனர். நேரம் நொடிகளைத் தாண்டி நிமிஷங்கள் வரைக்கும் நீடிக்கிறது. இது மென்மேலும் தொடர வாய்ப்புள்ளது. அதிலும் குறிப்பாக சிறுவர்கள் தம்மை முத்தமிடச் சொல்லி சிறுமியரை வற்புறுத்தவும் செய்கின்றனர்' என்று தான் போட்ட தடைக்கு அடுக்கடுக்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார் பியர்மேர்.

பெற்றோர்கள் தரப்பிலிருந்து எதிர்ப்

பெறுவும் இல்லை. மாணவர் அமைப்பு களுக்குத்தான் பியர்மேர் சாத்தனாகிவிட்டார். 'இது காட்டுமிராண்டித்தனம்' என்று கண்டிக்க ஆரம்பித்துவிட்டன. அரசியல்வாதிகளின் ஆதரவும் மாணவர்களுக்குத்தானாம்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதைவிடவும், அதற்காக அடிக்கடி இன்சுலின் ஊசி குத்துவதற்குத்தான் பலருக்குப் பயம். இந்த ஊசி பயத்துக்கு ஆளானவர்களுக்கு மகிழ்வூட்டும் ஒரு செய்தி...

அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனிரிக்ஸ் மருந்து நிறுவனம் இன்சுலின் ஸ்ப்ரே ஒன்றை உருவாக்கியுள்ளது. சாப்பிடுவதற்குப் பத்து நிமிஷங்களுக்கு முன்னால், அதை கன்னங்களின் உட்பக்கமாக ஸ்ப்ரே செய்து



ஒபாமா Vs ஒசாமா!

கொண்டால் போதும். ஊசியையே முற்றிலுமாகத் தவிர்த்துவிடலாம்.


இந்த 'ஸ்ப்ரே' நிறமற்றது, மணமற்றது, சுவையற்றது மற்றும் பயமற்றது.

ஹேண்ட்பேக்கில் பாடி-ஸ்ப்ரேயுடன் இன்சுலின் ஸ்ப்ரேயும் இடம்பெறும் காலம் வெகு தொலைவில் இல்லை. டிசம்பர் மாதமே சந்தைக்கு வந்துவிடும் என்கிறார்கள். இந்திய மதிப்பில் இதன் விலை ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய்.

- ஸாந்த்

யாராவது ஒழுங்கா படிக்கலைன்னா வீட்ல என்ன சொல்வாங்க? ''பேசாம மாடு மேய்க்கப் போயிடு''. ஆனால், இங்கே எல்லோரும் படிப்பதே ஆடு, மாடுகளைப் பற்றித்தான். புதிர் ஒன்றும் போடவில்லை. கால்நடை மருத்துவக் கல்லூரியில் வேறென்ன படிப்பார்கள்? 150 வருட பாரம்பரியமிக்க வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு விசிட் அடித்தோம்...

''மனுஷங்களுக்கு வைத்தியம் பார்க்கறதே சவாலான விஷயம். நீங்களெல்லாம் ஒரு வார்த்தை கூடப் பேச முடியாத விலங்கினங்களுக்கு வைத்தியம் பார்க்கக் கத்துக்கறீங்களே... சிம்ப்ளி



க்ரேட்'' என நாம் ஐஸ் வைத்து ஆரம்பிக்க, ''ஆமாமாம். ரொம்ப சரியாச் சொன்னீங்க... மனசுக்குள்ளே மாடுகளும், நாய்களும் நாங்க ஊசி போடும்போதெல்லாம் எப்படியெப் படித் திட்டுதோ தெரியாது'' என ஆரம்பித்தார் விஷ்வேந்தர்.

''திட்டு மட்டுமா? பல சமயம் அடி, உதைல ஆரம் பிச்சு, சாணி அடி கூட வாங்கி இருக்கோம்'' என எல்லோரை யும் மலரும் நினைவுகளுக்குள் மலர்ந்து சிரிக்க வைத்தார்.

''ஒரு சமயம் அப்படிதாங்க. ஒரு 4,000 மாடுகளுக்கு vaccine ஊசி போட்றதுக்காக இருபது பேர் போனோம். ஒரு மாடு ரொம்ப முரண்டு பண்ணி எங்க சீனியர்ஸ் ரெண்டு





பேரைப் பின்னங்காலாலேயே பின்னி பெடலெடுத்துடுச்சு. சரி நாம போய் ட்ரை பண்ணுவோம்னு ஊசியும் கையுமா போய் நின்னா, எனக்கும் லெப்ட் அண்ட் ரைட் வாங்கிடுச்சு. ஆனா அதையெல்லாம் பொருட்படுத் தாம வெற்றிகரமா போட்டுட்டு வந் துட்டோம்ல'' கைப்புள்ள கணக்கா கண்கலங்கினார் மோகன்ராஜ்.

''**எ**ங்க பேராசிரியர் zooல இருக்கிற ஒரு சிம்பன்ஸிக்குப் பூச்சி மருந்து கொடுக்கறதுக்காகப் போயிருக்கார். நம்மளைவிட புத்திசாலியாச்சே சிம்பன்ஸி. முதல் நாள் அதுக்கு தெரி யாம சாப்பாட்ல இவங்க மாத்திரை யைக் கலந்து கொடுத்த விஷயத்தைக் கண்டுபிடிச்சுருச்சு. அடுத்தமுறை இவரு அதே டெக்னிக்கை யூஸ் பண்ணி maazaaல மாத்திரையை போட்டுக் கலக்கிக் கொடுத்தாரா, அதையும் ஸ்ட்ராவை வெச்சு மேல இருக்குற ஜூஸை மட்டும் உறிஞ் சிட்டு, கீழே அப்படியே மாத்திரைய விட் டுட்டு, இப்படி ஒரு லுக் விட்டுச்சாம் பாருங்க'' என சூப்பராக எல்லோரையும் பார்த்து ஒரு லுக்கு லுக்கினார், ராம்குமார்.

''**ப**ல சமயம் வீட்டுல செல்லமா வளர்க் கற நாய்களுக்கு ட்ரீட்மென்ட் கொடுக்கறதுக் குள்ள போதும் போதும்னு ஆகிடுங்க... நாய்ங்ககூட பொறுமையா இருக்கும். ஆனா அந்த ஓனர்ஸ் பண்ற டார்ச்சர் தாங்க முடியாது. 'என் ரோஸிக்கு வலிக்காம ஊசி போடவே உங்களுக்குத் தெரியாதா?'ன்னு ஆரம்பிச்சு, 'என் பட்டுக்குட்டி ஒரு வாரமா என்னைப் பார்த்து வாலே ஆட்டல அதனாலதான் இங்க கூட்டிட்டு வந்தேன்'னு நம்மளை ஆட்டிப் படைச்சுடுவாங்க'' என கலகலக்கினார் சித்ராம்பிகை.

''**நா**ய்ங்கன்னதும் ஒரு விஷயம் ஞாபகத் துக்கு வருது. ஒரு குறிப்பிட்ட நாய், ஒவ்வொரு முறையும் சர்ஜரி க்ளாஸ் நடக்கும்போது முதல் பெஞ்சுல வந்து உட்கார்ந்து, க்ளாஸ் முடியற வரைக்கும் கூர்ந்து கவனிக்கும். உடனே எங்க சார், 'உங்களை எல்லாம் முன்னுக்கு வாங்க முன்னுக்கு வாங்கன்னு சொல்றேன். ஆனா கேட்கவே மாட்டேங்கறீங்க. அந்த நாயைப் பாருங்க. க்ளாஸ் மேல எவ்வளவு இன்ட்ரஸ்ட் எடுத்துக்கிட்டு முன்னுக்கு வந்து காட் டுது'ன்னு ஃபீல் பண்ணுவார்'' என மாதவ குமரன் அசத்தலான அபிநயத்தோடு விவரிக்க, அங்கே ஒரே ஆரவாரமான சிரிப்பு... ''இவரு நிஜமாவே ஓர் அசத்தல் மன்னர்தாங்க... 'அசத் தப் போவது யாரு' நிகழ்ச்சில கலந்துக்கிட்டு 'அசத்தல் மன்னர்'னு பட்டம் வாங்கினவர்'' என கோரஸாகக் கும்மியடிக்க, அவர் மறுபடி யும் கும்பிடு போட்டு அபிநயித்தார்.

– நளினி சம்பத்குமார்

படங்கள் : **குமார்**

ஹாஸ்பிடல் எத்திக்ஸ் 6

டாக்டர் செலக்‌ஷன்

ஜி.எஸ்.எஸ்.



சிறப்பான மருத்துவரைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

மும்பை பிரபல மருத்துவர்கள் அனிருத்தா மால்பானி மற்றும் அஞ்சலி மால்பானி எழுதிய 'How to get the best Medical Care? - Be an Intelligent Patient' என்ற நூலில், மேலே குறிப்பிட்ட கேள்விக்கு, ஒரு பட்டியலையே பதிலாக அளித்திருக்கின்றனர். பயனுள்ள அந்தப் பட்டியல் இதோ:

- மருத்துவரின் பெயருக்குப் பின்னால் எஃப்.ஐ.சி.ஏ (யு.எஸ்.ஏ.), எஃப்.ஆர்.எஸ். ஹெச். (லண்டன்) போன்ற எழுத்துக்கள் இருந்தால், இது அவரின் கல்வித் தகுதி அல்ல. வெளிநாட்டிலுள்ள ஒரு கழகத்தில் குறிப்பிட்ட அளவு பணம் செலுத்தி, தங்களை இணைத்துக் கொண்டதன் அடையாளம்.
- மருத்துவரைப் பார்க்க நோயாளி எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்? அந்தத் தூரம் நோயாளிக்கு வசதியானதுதானா? அங்கு வாகனங்களை நிறுத்த இடம் இருக்கிறதா?
- உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மருத்துவராக அவர் உள்ளாரா?
- எந்தத் துறையில் அந்த மருத்துவர் ஸ்பெஷலிஸ்ட்? என்பதை அறிந்துகொள்ள வேண்டுமா? (உதாரணமாக, இதயநோயாளிகள், பொதுநல மருத்துவரைவிட இதயநோய் நிபுணரைச் சந்தித்து ஆலோசனை பெறவே விரும்புவார்கள்.)
- எப்போது அந்த மருத்துவர் நோயாளிகளைச் சந்திக்கிறார்? அது நமக்குச் சௌகரியமான நேரமா?
- அவசியமானால், வீட்டுக்கு வந்து பார்ப்பாரா? எவ்வளவு காலம் முன்பாக அவரிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்க வேண்டும்?
- அவசர நேரத்தின்போது அதி சீக்கிரமாக மருத்துவரைப் பார்க்க முடியுமா...?

போன்ற கேள்விகளுக்குத் திருப்தியான பதில் கிடைத்

தால், அந்த மருத்துவரை நோயாளி சிகிச்சைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு சிறந்த மருத்துவருக்கான குணநலன்கள் எவை... அவர் நடந்துகொள்ளக்கூடாத முறைகள் எவை என, கீழ்க்காணும் 'ஓ.கே. மருத்துவர்; நோ.கே.மருத்துவர்' அட்டவணைகள் நமக்கு வழிகாட்டுகின்றன.

ஓ.கே.மருத்துவர்!

- நோயாளிகளை அன்புடன் வரவேற்பார்.
- மரியாதையுடனும், கண்ணியத்துடனும் சிகிச்சை அளிப்பார்.
- அறிகுறிகளுக்கு மட்டும் சிகிச்சை அளிக்காமல் முழுமையாக நோயைத் தீர்க்க சிகிச்சை தருவார்.
- நோயாளியின் திறமையையும் புரிந்துகொள்வார்.
- சொல்வதைக் கவனமுடன் கேட்டு, நோய், உடல்நலம் பற்றிய உண்மை விவரங்களைத் தெரிவித்து, நோயாளியின் கேள்விகளுக்குப் பதில் சொல்வார்.
- தேவைப்பட்டால் அவரே உங்கள் வீட்டுக்கு வருவார். அல்லது வேறு ஒரு மருத்துவரை அனுப்பி வைப்பார்.
- கடினமான மருத்துவச் சொற்களை விளக்குவதற்காக வரைபடங்களைப் பயன்படுத்துவார்.
- நோயைக் கண்டறிதல், மருத்துவ நடைமுறைகள் மற்றும் எதிர்காலத்தில் உடல்நலம்... என அனைத்தையும் விளக்குவார்.





- மாற்று மருத்துவம் குறித்து வெளிப்படையாகப் பேசுவார். தேவை ஏற்பட்டால் அந்தச் சிகிச்சையை நோயாளிகளுக்குப் பரிந்துரைப்பார்.
- நோயாளிகளின் நலனில் அக்கறை கொண்டு, தனக்குச் சமமானவராக எண்ணுவார்.
- வாங்கக்கூடிய விலையில் மட்டுமே மருந்துகளைப் பரிந்துரைப்பார்.
- தகவல்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்வார் (புத்தகங்கள், பத்திரிகைகள், இணையத்தளம்).
- உங்கள் உடல் நிலை அல்லது மருத்துவப் பரிசோதனை குறித்த கூடுதல் தகவல் தேவைப்பட்டால், அதற்காக உங்களை அவர் தொலைபேசி மூலம் தொடர்புகொள்பவர்.

'நோ'.கே. மருத்துவர்!

- நேரத்தின் மதிப்பைப் பற்றிக் கவலைப்படாமல், எப்போதும் நீண்ட நேரம் காக்க வைத்து, நோயாளிகளை அலைக்கழிப்பார்.
- நோயாளியின் உடலைத் தொட்டுப் பரிசோதனை செய்யாமல், எடுத்ததற்கெல்லாம் பரிசோதனை செய்யச் சொல்பவராகவும், அது தரும் அறிக்கைகளை மட்டுமே நம்புபவராகவும் இருப்பார்.
- நோயாளியுடன் போதிய நேரம் செலவிட மாட்டார்.
- எப்போது பார்த்தாலும், வேலையில் மூழ்கி இருப்பது போலவும், பரபரப்பாகவும் காணப்படுவார்.
- மாற்று மருத்துவ சிகிச்சைகளைப் பற்றிப் பேச விரும்ப மாட்டார்; நிராகரிப்பார்.
- நோயாளி கேள்வி கேட்பதை விரும்ப மாட்டார்; கேட்டால் சரியான பதிலும் சொல்ல மாட்டார்.
- தவறான உறுதிமொழிகளை அளிப்பார்.
- 'அது ரொம்ப ரகசியம்' என்று கூறி நோயாளிகளிடமிருந்து சில தகவல்களை மறைப்பார்.
- சிகிச்சையின்போது என்ன செய்கிறார் என்பதைத் தெரிவிக்கமாட்டார்.

(தொடரும்)

இயக்குநர் ராம், பரந்து விரிந்திருந்த அந்த டிபார்ட்மெண்டல் ஸ்டோரைச் சற்று வியப்பாகத்தான் பார்த்தார். வழக்கமாக அவரது படங்களில் வரும் கோடி ரூபாய் செட் போல இருந்தது.

அவரது படமானால் ஹீரோயின் கண்ணாடிக் கடையில் பர்ச்சேஸ் செய்வாள்;

ஆக்ஷன் டைரக்டர்!

வில்லன்கள் விரைந்து வருவார்கள்; துப்பாக்கியால் சுடுவார்கள்; கண்ணாடிகள் உடையும்; ஹீரோ பறந்து வருவார்; பரஸ்பரம் பிஸ்டல் உபயோகத்தில் கோடி ரூபாய் செட் நாஸ்தியாகும்; தமிழில் பரபரப்பான ஆக்ஷன் இயக்குநர் அவர்.

உலக நாடுகளில் பலவற்றை அவர் பார்த்திருந்தாலும், மலேசியா சற்று வித்தியாசமாகத்தான் இருந்தது. உல்லாச விரும்பிகளின் சொர்க்கபூமி.

''எக்ஸ்கியூஸ் மீ...''

ராம் திரும்பினார். ஓர் அழகான தம்பதி நின்றிருந்தார்கள். வீல்சேரில் தொட்டிலில் பச்சிளம் குழந்தை.

உடைந்த ஆங்கிலத்தில் அந்த இளைஞன் கேட்டான்.

''நீங்கள் தென்னிந்தியரா?''

ராம், ''யெஸ்...''

''என் மனைவிக்குத் தென்னிந்திய சங்கீதம் வேண்டும். சிறந்த பாடல்களைத் தேர்வுசெய்து தர முடியுமா?''

குழைவான உச்சரிப்பு.

''நான் ஒரு திரைப்பட இயக்குநர். நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை. இவர் எனது கைட். இவருக்கு உங்கள் உச்சரிப்பு தெளிவாகப் புரியும் என்று நினைக்கிறேன். இவர் தேர்வு செய்து தருவார்...''

அவன், கைடை அழைத்துக்கொண்டு நகர்ந்தான்.

ராம், அந்தத் தம்பதியையே உற்றுப் பார்த்தபடி நின்றிருந்தார்.

மூன்று நாட்கள் மலேசியப் பயணம் ராமுக்கு நிறைவாக இருந்தது.

மலேசியாவைச் சுற்றிப் பார்த்தாயிற்று.





உயர்பதவிகளில் இருக்கும் அவரது நண்பர்கள் மூவரைச் சந்தித்துப் பேசியாயிற்று.

அதைவிட அந்த நைட் கிளப் அனுபவம்...

விமான நிலையத்தில் செக்யூரிட்டி செக்கப் முடித்து இமிக்ரேஷனில் பாஸ்போர்ட்டில் குத்து வாங்கிக்கொண்டு, ராம் விமானம் நோக்கி நடந்தபோது எதிர்ப்பட்டான் அவன்.

ராம் சற்றுத் திகைத்து நின்றார்.

நேற்றைய தினம் ஷாப்பிங் மாலில், அவரிடம் மனைவி சகிதமாய் தென்னிந்திய சங்கீதம் கேட்டவன், இப்போது போலீஸ் யூனிபார்மில்...

என்ன இது? குழப்பம், அதிர்ச்சி.

சட்டென நின்றார்.

அவனுக்கு ராமின் தயக்கம் புரிந்திருக்கவேண்டும். நின்றான்.

''யெஸ்...'' என்றான் சிரித்து.

''நீங்கள்...''

''இன்டர்போல் போலீஸ்...''

ராம் திகைத்தார்.

''நேற்று உங்களிடம் சி.டி. கேட்டது நான்தான். அந்தப் பெண் எனது மனைவி அல்ல; சக அதிகாரி. குழந்தை செட்டப்...''

''ஏன்...?''

''பயந்துவிடாதீர்கள். நீங்கள் மலேசியா வந்ததிலிருந்து உங்களை நாங்கள் ஃபாலோ செய்கிறோம். கைடு போல உங்களோடு ஒட்டிக்கொண்டவன் சர்வதேச தீவிரவாதக் கும்பலைச் சேர்ந்தவன். உங்களை மிரட்டி, பெரும் தொகையைக் கேட்பது அவர்கள் திட்டம். அதோடு மலேசியாவில் இருக்கும் உயரதிகாரிகள் சிலரும் அவர்களது டார்கெட். உங்களோடு வந்து அவர்களை, அவர்கள் அலுவல

திருவாரூர் பாபு



'பவானி' படத்தில்...

சுத்தை உளவு பார்த்தான். எங்களுக்கு அவன் மீது சந்தேகம் வந்துவிட்டது. ஆனாலும் ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் சி.டி. வாங்கிக் கொடுக்கச் சொல்லி அவன் ரேகையைப் பதிவுசெய்தோம்.

அடுத்த பத்தாவது நிமிடம், அவன் சர்வதேச போலீஸாரால் நான்காண்டுகளாகத் தேடப்பட்டு வருபவன் என்பதைப் புரிந்துகொண்டோம். ஆனாலும் உடனே எங்களால் செயல்பட முடியாத சூழ்நிலை. உங்களைப் பணயமாக வைத்து, அவன் தப்ப நேரிடலாம் என்பதால் பொறுமையாகக் காத்திருந்து, இன்று மாலை அவன் உங்களை விட்டு நகர்ந்ததும் மடக்கிவிட்டோம். அவர்கள் திட்டத்தையும் முறியடித்து விட்டோம்...''

அவர் சிரித்தபடி நகர்ந்தார்.

சர்வதேச போலீஸாரால் தேடப்பட்டு வரும் ஒரு தீவிரவாதியுடனா... மூன்று நாட்களும் சுற்றிக்கொண்டிருந்தோம்? என்னை மிரட்டி பணம் கேட்கத் திட்டமா?

ஆக்ஷன் பட இயக்குநருக்கு வியர்த்தது. ●

பூவின் கையில் கத்தி முளைத்த மாதிரி இருக்கிறது சினேகா கையில் துப்பாக்கி. துப்பாக்கிச் சுடுவதில் பயிற்சி எடுத்துக்கொண்டு இவர் ஒன்றும் இந்தியாவுக்காக ஒலிம்பிக்கில் பங்கேற்கப் போவதில்லை. பிறகு? சினிமாவில் வில்லன்களைத் துரத்தித் துரத்திச் சுடப் போகிறார். வெற்றியடைந்து வெள்ளி விழா கண்ட பழைய படங்களை ரீமேக்கும் கலாசாரத்தில், விஜயசாந்தி நடித்த 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்.' படம் 'பவானி' என்ற பெயரில் ரீமேக் ஆகிறது. விஜயசாந்தி வேடத்தில் சினேகா நடிக்கிறார். அதற்காகத்தான் எந்நேரமும் துப்பாக்கியும் கையுமாகத் திரிகிறார். சுந்தர்.சி. நடிக்கும் 'தீ' படத்தைத் தயாரிக்கும் ஸ்ரீமூவி மேக்கர்ஸ் நிறுவனம்தான் இந்தப் படத்தையும் தயாரிக்கிறது. இதில் சினேகாவுக்கு ரஜினி ரேஞ்சுக்கு ஓப்பனிங் சாங் வேறு உண்டாம். தினாவின் இசையமைப்பில் 'பரவை முனியம்மா' பாட

கருப்புசாமி... கருப்புசாமி
காக்கி சட்டை போட்ட மாதிரி
காவலுக்கு நின்னா வேங்கை மாதிரி... **என**

இனி சினேகா உலாவருவாராம்!

- கவிதா

ஈஸ்வர தத்துவம்!

இயற்கையில் சகலமும் மாறிக்கொண்டிருக்கிறது. சில மாறுதல்கள் மட்டும் நம் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனால் நாம் மாறாததாக நினைக்கிற மலையும், சமுத்திரமும்கூட காலக்கிரமத்தில் மாறிக் கொண்டேதான் இருக்கின்றன. இயற்கையில் எதுவுமே சாசுவதம் இல்லை. இதற்கு எதிராக மாறாமலே ஒன்று இருக்கத்தான் வேண்டும். அதுதான் ஸ்வாமி என்பது.

இயற்கையில் படிப்படியாக ஒன்றிலிருந்து இன்னொன்று என்றும், அதே இயற்கையில் எந்த ஒன்றுக்கும் மாறுதல் உண்டு என்றும் அம்பாள் காட்டி, இந்த இரண்டாலும் கடைசியில் பரமாத்ம தத்துவம் ஒன்று இருந்தாக வேண்டும் என்று உணர்த்துகிறாள்.

அது இருந்துவிட்டுப் போகட்டுமே, அதை எதற்கு உபாசிக்க வேண்டும் என்று கேட்கலாம். நாம் எப்படி இருக்கிறோம்? எப்போதும் எல்லையில்லாத தேவைகளோடு (wants) இருக்கிறோம். பரமாத்மா ஒரு தேவையும் இல்லாமல் இருக்கிறார். இத்தனை தேவையுள்ள நாம் அற்ப சக்தியோடு இருக்கிறோம். ஒரு தேவையும் இல்லாத பரமாத்மாவோ சர்வ சக்தராக இருக்கிறார். நாம் ஒரே பள்ளமாக இருக்கிறோம். அவர் பரம உன்னதமாக இருக்கிறார். அவர் சக்தியிலும் ஞானத்திலும் மட்டும் உயர்ந்தவர் என்பதில்லை. தயையிலும் உயர்ந்தவராக இருக்கிறார். அதனால்தான் அவரைத் தியானித்தால் பள்ளமாக இருக்கிற நம்மையும் தூர்த்து நிரப்பச் செய்கிறார். நாம் குறைந்தவர்கள், அவர் நிறைந்தவர். நம் குறையைத் தீர்த்து நிறைவாகச் செய்ய அந்த நிறைவால் தானே முடியும்? அப்படிச் செய்கிற கருணா மூர்த்தி அவர். நாம் உபாசித்தால் நம் குறைகளைப் போக்குகிறார்.

– ஜகத்குரு காஞ்சிகாமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



அருள்வாக்கு



ஆராய்ச்சி

அமைச்சர் : நாட்டிலே விலைவாசி ஏற்றத்தாலே மக்கள் ரொம்பக் கஷ்டப்பட றாங்க. ஒருவேளை சாப்பிட்டுக்கிட்டு இருந்தவங்களுக்கு, இப்ப அது கிடைச் சாலே ஆடம்பர வாழ்க்கை மாதிரி ஆயி டுச்சு. நம்மகிட்டே மக்கள் நலத் திட்டங் கள் இருக்கே தவிர, எதையும் நடை முறைப்படுத்தலை. இப்படியே போனால் புரட்சி வெடிச்சுடும் மன்னா.

மன்னர் : நீங்க இன்னும் பத்தாம் நூற்றாண்டிலேயே இருந்து தொலைச்சு, என் உயிரை வாங்காதீங்க. ஆங்... அது என்ன... மக்கள் நலத்திட்டம்னு ஒரு கெட்ட வார்த்தை சொன்னீங்களே... அதை யெல்லாம் சொல்லி, மக்கள் மனசைக் கெடுத்துடாதீங்க. நம்ம மக்களுக்கு நன்மை கள் செய்யறா மாதிரி மலையளவு பேசி உரு கணும். அதிலே கடு களவு செய்து, நமக்கு விழா எடுக்க வைச்சட ணும்.

அமைச்சர் : விழான் னதும் ஞாபகம் வருது. அரண் மனை வாயில்லே கட்டி யிருந்த ஆராய்ச்சிமணி உங்க தாத்தா காலத்தது.... அதிலே லேசா விரிசல்... சாப்பாடு இல் லாம இளைச்சு இருக்கிற நம்ப ஜனங் களுக்கு அவ்வளவு பெரிய மணியை அடிக் கத் தெம்பு இல்லை.. அதனாலே...

மன்னர் : ஆஹா அருமை! மணியிலே விரிசல் விழுந்ததுக்குக் காரணம் எதிரி நாட்டு மன்னனின் வயிற்றெரிச்சல்தான்னு சேனாதிபதி மூலமா கணீர்ன்னு அறிக்கை விடுங்க. நமக்கு முன்னே ஆண்டவங்க அதைச் சரியாத் துடைக்கலேன்னு சவால் விடுங்க. அதுக்கு மறுப்பு அறிக்கை பல முனைகளிலிருந்து வரும். இந்த விரிசல்

பிரச்னைக்கு மக்கள்கிட்டே தீர்ப்பு கேட்க, நாடு முழுவதும் பொதுக்கூட்டம் போட்டு ஆவேசமாப் பேசுவோம். அரைவேளை மட்டும் சாப்பிட்டுக்கிட்டு இருக்கிற மக்களை வெச்சே உண்ணாவிரதப் போராட்டம்னு அறிவிச்சு பிரியாணி பொட்டலம் கொடுத்தா ரொம்பச் சந்தோஷப்படுவாங்க. இதுல பலரை நம்ம பக்கம் இழுத்திடலாம்...

அமைச்சர் : அப்ப அந்த மணி விஷயம்...?

மன்னர் : மணி விஷயத்தை அவ்வளவு சீக்கிரம் முடிக்கறதுக்கா அதைக் கையில் எடுத்தோம். வெண்கல மணியானாலும், அதை அடிக்காம, ரப்பரா நினைச்சு மெகா சீரியல் மாதிரி இழுஇழுன்னு இழுத்துக்கிட்டே இருக்கணும்.

அமைச்சர்: இந்த விஷயத்தில் விழா எடுக்கறது...?

மன்னர்: விழா இல்லாம ஒரு பிரச்னையை நாம கையில் எடுத்ததா சரித்திரமே கிடையாது. ஒரு விழா என்ன... இரண்டு விழாக்களே எடுத்துடலாம். முதலில், பழைய மணியை எடுக்க, வெண்கல இறக்கு விழா. அதுக்கு எதிரி மன்னர்களுக்கும் அழைப்பு விடுத்தா, நம்ம மரியாதை

மணிக்கு டெண்டர்!

குணத்தை மக்கள் பாராட்டுவாங்க. விழாவுக்கு வரலேன்னா, மக்கள் குறை தீர்க்கிற மணி விஷயத்தில் கூட காது கொடுக்காதவங்கன்னு அறிக்கை விட்டுடலாம்.

அமைச்சர் : ரொம்பப் பெரிய விழாவா இருக்கும் போலிருக்கே. டிராஃபிக்கெல்லாம் ஸ்தம்பிச்சு, மக்கள் நடுரோட்டிலே மாட்டிக்கிட்டு தின்டாடினாங்கன்னா, அதுவே மாபெரும் வெற்றிதான். இதிலே இன்னொரு விழா எப்ப வரும்..?

டி. ராமன்

மன்னர் : உங்களுக்குத் தொலைநோக்குப் பார்வை வந்துடுச்சு அமைச்சரே. இந்த விழா முடியறதுக்குள்ளே அடுத்ததைப் பத்திப் பேச ஆரம்பிச்சாதான், டெம்போ குறையாம பார்த்துக்கலாம். வெள்ளி முலாம் பூசிய சிறிய மணிக்கு டெண்டர் விட்டோம்னா, நம்மை ஆதரிக்கறவங்க நாலு பேரு பிழைச்சுப்பாங்க. அப்புறம் அந்த மணியை ஊர் ஊரா எடுத்துப் போய், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கணும். அப்புறம் வெள்ளி மணி ஏற்ற விழாதான்.

அமைச்சர் : இதோட முடிக்கக்கூடாது மன்னா...

மன்னர் : மணியான யோசனை. ஒவ்வொரு வீட்டிலும் இலவசமா சின்ன மணி கட்டுவோம்னு விழாவிலேயே அறிவிப்பு செய்துடலாம். மக்களும் எல்லாக் கஷ்டங்களையும் மறந்து, மணிக்காக அப்ளிகேஷன் போட ஆரம்பிச்சுடுவாங்க. அப்ப நீங்க முதலில் சொன்ன விஷயம்...?

அமைச்சர் : அதைவிட முக்கியமா மணி பிரச்னை வந்துடுச்சே.

மன்னர் : நீங்களே மறந்துட்டீங்கன்னா சாதாரண மக்களும் அதையேதான் செய்வாங்க. பிரச்னைகளைத் திசைதிருப்பி விடறதுலேதான், நம்ம சாமர்த்தியமே இருக்கு. ●

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சொத்துக்கள் வாங்க சிறந்த தருணம். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். சனி/ராகு/கேதுவை வழிபட்டு வருதல் நலம் தரும்.

ரிஷபம்: உடல் நிலை சீராகும். கடன் சுமை தீரும். தெய்வ பலம் நிறைந்து இருக்கும். புதிய கடன் கிட்டும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். சனி/குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

மிதுனம்: சுப காரியம் கைகூடும். ஆடை ஆபரணங்கள் வந்து சேரும். கூட்டாளிகளை விட்டு விலகிப்போவீர்கள். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு/மனை வாங்க உகந்த காலம். உத்தியோக உயர்வு, இடமாற்றம் ஏற்படும். ராகு/ கேது வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கடகம்: குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. இன்னும் ஒரு சில மாதங்கள் பொறுமையைக் கையாளுவது நல்லது. தேவையில்லாத கடன் சுமை அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ராகு/கேது/சனி/குரு வழிபாடு செய்து வர சங்கடங்கள் தீரும்.

சிம்மம்: சுப காரிய நிகழ்ச்சிகள் கைகூடும். வெளிநாடு செல்லும் யோகம் வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். கடன் சுமை தீரும். வீடு/மனை வாங்க நல்ல காலம். பண வருவாய் பெருகும். மனச் சலனம் விலகும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

கன்னி: வாக்குவன்மை மேலோங்கும். பண வசதி பெருகும். கல்வி வளம் மேலோங்கும். விரயங்கள் குறையும். வீடு மாற்றம் ஏற்படும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். எதிரிகளால் தொல்லை இருக்காது. வெளியூர் பிரயாணம் வந்து சேரும். பிள்ளைகள் இடம் மாறிச் செல்வார்கள். சுபகாரியம் கைகூடும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

> காதல் பெயர்ச்சிப் பலன்களை ஏன் யாருமே கணிக்கிறதில்லே?

துலாம்: உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டாகும். உடன் பிறந்தவர்களால் நற்பலன் உண்டாகும். புதிய தொழில் துவங்க ஏற்ற தருணம். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. எதிர்ப்பு தொல்லைகள் விலகும். செலவுகள் சுபமானதாக இருக்கும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: தனயோகம் கிட்டும். திருமணம் கூடி வரும். வீடு/மனை வாங்க நல்ல காலம். வெளியூர் பிரயாணம் தேடி வரும். பண வருவாய் மிகுதி ஆகும். கல்வி வளம் மேலோங்கும். ஆடை ஆபரணப் பொருட்கள் சேரும். எதிரிகளால்

தஞ்சை பரத்வாஜ்

தொல்லை இருக்காது. மகப்பேறு உண்டாகும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

தனுசு: கூட்டாளிகளை விட்டு விலக நேரிடும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படும். வராத நிலுவைகள் வர கால தாமதம் ஆகும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். வேலைப் பளு அதிகரிக்கும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வழக்கு சற்று தள்ளிப் போகும். உடன்பிறப்புகள் விலகிப் போவார்கள். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர நற்பலன் கிட்டும்.

மகரம்: எதிலும் கவனமுடன் செயல்படுவது நற்பலனை அளிக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். அநாவசியமான செலவுகள் வந்து சேரும். மனக்குழப்பம் அதிகரிக்கும். வரவுக்கும் செலவுக்கும் சமமாக இருக்கும். கடன் சுமை அதிகரிக்கும். வியாபாரத்தில் மந்தமான சூழ்நிலை உருவாகும். ராகு/கேது/சனி/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கும்பம்: ரொம்பவும் உல்லாசமான வாரம். பண வசதி பெருகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். நீண்டநாள் பிரச்னை முடிவுக்கு வரும். கடன் சுமை தீரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வராத நிலுவைகள் வந்து சேரும். பணக் கஷ்டம் இருக்காது. குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

மீனம்: பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். கூட்டாளிகளை விட்டு விலக நேரிடும். வழக்கு வெற்றி அளிக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வராத பணம் வந்து சேரும். மன சஞ்சலம் தீரும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும். ○

30.11.08 முதல் 06.12.08 வரை





"என்னய்யா, ரொம்ப நேரமா அவஸ்தைப்பட்டுக்கிட்டு இருக்கே, 'கணக்கு' சரியா வரலியா?"

"இல்லேய்யா, கொட்டாவி மட்டும் வருது, 'தூக்கம்' சரியா வரலே!"

– வெ. சீதாராமன்

"இந்தப் படம் பெரும் பொருட்செலவாமே... நிஜமா?"

"ஆமா... கதை சொல்லக்கூட ஹீரோவை சுவிட்சர்லாந்துக்குக் கூட்டிப் போறாங்க!"

– அம்பை தேவா





"நாயா அலைஞ்சு லோன் வாங்கினியே, இப்ப என்ன ஆச்சு?"

"இப்ப பேயா வந்து வசூல் செஞ்சிட்டுப் போறாங்க...!"

– வாழை வேலவன்


பந்தல்!

உண்டியல

''என்னங்க மாநாட்டுப் பந்தலை உண்டியல் வடிவில் அமைச்சிருக்காங்க...?''

''எல்லாம் வசூலை ஞாபகப்படுத்தத்தான்.''

– ஜி. ஹேமலதா





''இது ரொம்பப் பழமை வாய்ந்த சிறை!''

''அதான் இங்கே நடந்த ரெய்டுல ஓல்டு மாடல் செல்ஃபோன் கிடைச்சிருக்கு!''

– அம்பை தேவா



''கரண்ட் கட் கண்ணாபின்னான்னு இருக்கிறதால நம்ப தொழிலே பாதிச்சுப் போச்சுன்னு புலம்பிட்டுப் போறானே கபாலி...?''

''ஜனங்க ராத்திரியெல்லாம் தூங்காம முழிச்சுக்கிட்டு இருக்காங்களாம்...!''

– சீர்காழி வி.ரேவதி

பிரஃபஸர் சோம்நாத்!

பாராளுமன்ற சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி, இனி தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறாராம். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தவரான சாட்டர்ஜி, தம் பதவிக்காலம் முடிவடைந்ததும், இந்தியாவில் அல்லது மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் எதிலாவது ஆசிரியர் பணிக்குப் போகலாமா என்று யோசிப்பதாகத் தெரிய வருகிறது. பல மேல்நாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சாட்டர்ஜியின் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் டெல்லி வரும்போது தவறாமல் சாட்டர்ஜி வீட்டுக்கு வந்து அளவளாவிக்கொண்டு இருந்துவிட்டு, விருந்து சாப்பிட்டுவிட்டுப் போவது வழக்கம். *(எம்.பி.க்களை விட மாணவர்களைச் சமாளிப்பது சுலபம் என்ற எண்ணத்தில் எடுத்த முடிவாக இருக்குமோ?)*

சிங்கூரிலிருந்து நானோ கார் தொழிற்சாலை குஜராத்துக்குப் போய்விட்டாலும், சிங்கூர் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. தொழிற்சாலைக்கு நிலம் தர முடியாது என்று போராடிய திரிணாமுல் காங்கிரஸ் இப்போது, கார் தொழிற்சாலைக்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை அவரவர்களுக்கே திருப்பித் தர வேண்டும் என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. அண்மையில் இதற்காக மம்தா பானர்ஜி நடத்திய பேரணியின்போது நடந்த மோதலில் நான்கு பேர் மரணமடைந்தார்கள். *(தேர்தல் வரை இப்படி ஏதாவது நடந்துகொண்டுதான் இருக்கும்; காரணம் வோட்டு வங்கி அரசியல்தான்!)*

■ சோம்நாத் சாட்டர்ஜி



மேற்கு வங்காள மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால், அரசுக்கு ஆண்டுக்கு 350 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. நஷ்டத்தைக் குறைக்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படி, முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யா, போக்குவரத்துத்

அக்கம் பக்கம்



* புத்ததேவ் பட்டாச்சார்யா

துறை அமைச்சர் சுபாஷ் சக்கரவர்த்திக்கு உத்தரவிட்டும், அவர் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. மாநில தலைமைச் செயலாளரை அழைத்து, உடனடியாக ஒரு கூட்டம் நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டார். (இதைச் சற்றும் எதிர்பார்க்காத போக்குவரத்துத் துறை அமைச்சர் மிரண்டு போயிருக்கிறாராம்.)

அண்மையில் நிகழ்ந்த அஜித் பாஞ்சாவின் மறைவு திரிணாமுல் காங்கிரஸில் ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. எழுபத்திரெண்டு வயது பாஞ்சா, ராஜீவ், நரசிம்மராவ், வாஜ்பாய்... ஆகிய மூன்று பிரதமர்களின் அமைச்சரவைகளில் மந்திரியாக இருந்தவர். தவிர, அவர் ஒரு சிறந்த நடிகர். 'நாடி பினோதினி' என்ற நாடகத்தில் ராமகிருஷ்ண பரமஹம்சராக நடித்து, பாராட்டும், விருதுகளும் பெற்றவர். பாஞ்சா ஒரு எழுத்தாளரும்கூட. பல மாதங்களாக அவர் கேன்சருடன் நடத்திய போராட்டத்தில், இறுதியில் கேன்சர் ஜெயித்துவிட்டது!



* மம்தா பானர்ஜி

மேற்கு வங்காளத்தில் நூற்றுக்கும் அதிகமான ரத்த வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மாநிலத்தில் கடும் ரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டது. ரத்த தான முகாம்கள் நடத்துவதை வழக்கமாகக் கொண்ட அரசியல் கட்சிகள், பல மாதங்களாக, சிங்கூர், நந்திகிராம் போன்ற போராட்டங்களில் பிஸியாகிவிட்டன. செப்டெம்பர், அக்டோபரில் துர்கா பூஜைக் கொண்டாட்டத்தின் காரணமாக ரத்த தான முகாம்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன. இப்போது, மீண்டும் அதிகமான அளவில் ரத்ததான முகாம்கள் நடத்த அரசாங்கமும், தனியார் ரத்த வங்கிகளும் முழு மூச்சாகக் களம் இறங்கியுள்ளன.

– எஸ். சந்திரமௌலி

விக்ன நாசினி - துயரங்கள் தடங்கல்களையெல்லாம் நாசம் செய்யக்கூடியவள்.

தேஜோவதி - தேஜஸ்வினியாக, தேஜஸ் ஸ்வரூபிணியாக இருக்கக்கூடியவள். தெய்வீக ஒளிமயமாக இருப்பவள்.

த்ரிநயனா - மூன்று கண்களை உடையவள். அபிராமி பட்டர் அவளை முக்கண்ணி என்றே பாடினார்.

லோலாக்ஷி காம ரூபிணி - பெண்களின் அன்பு வடிவமாகவும் விருப்பமாகவும் இருக்கக்கூடியவள்.

மாலினி - மாலைகளை அணிந்தவள்.

ஹம்ஸினி - ஹம்ஸ வடிவினள்.

மாதா - தாயாக - சிருஷ்டியின் அன்னையாக இருப்பவள்.

மலையாசல வாஸினி - அசலமான

''இரவு - பகல் நேரம் பாராமல் பனியிலேயே கூம்பாமல் இருக்கக்கூடியவள் நீ! உன் திருவடிகளைப் போய் தாமரை என்கிறோமே! தாமரை பனியிலும் இருட்டிலும் கூம்பி விடுமே! உன் திருவடியின் அருளோ என்றும் கூம்புவதில்லை'' என்கிறார் ஆசார்யர்.

அப்படிப் பனிப் பிரதேசத்தில் பக்தர்களுக்குக் குளிர்ச்சியைத் தருபவள் **ஸுமுகி** என்ற பெயரும் உடையவள். **ஸுமுகி** என்றால் அழகான முகம் படைத்தவள்.

நளினி - அழகான தாமரை மலர் போன்று இருப்பவள். குமுதமாகவும் இருக்கிறாள்; தாமரையாகவும் இருக்கிறாள். எல்லா வண்ணங்களிலும் உறைகிறாள்; வண்ணங்களையெல்லாம் கடந்தும் திகழ்கிறாள்.

ஸ்ரீ லலிதா

மூன்றாம் பாகம்

11

சுதா சேஷய்யன்

ஆதார சக்கர ஆராதனை!

இமயத்தில் வாழக்கூடியவள். ஆசார்யர் ஆதிசங்கரர் சொல்லுவார்: ''அம்மா! தாமரைதான் உன் திருப்பாதங்கள் என்று சொல்கிறேனே - அது அவ்வளவு சரியில்லை'' என்பார். அம்பாளுடைய திருவடிகளை, 'சரணாம்புஜம்' 'பாதாம்புஜம்' (திருவடித் தாமரைகள்) என்று அழைப்பதுண்டு. இவ்வாறு அழைப்பது சரியில்லை என்று ஆசார்யர் ஏன் கருதினார்? தாமரை, இரவு நேரம் வந்தால் கூம்பி விடும். பனியை அதனால் தாங்க முடியாது. ஆனால், அம்பிகையின் பிறந்த வீடே ஹிமாசலம்! பனிப் பிரதேசம். புகுந்த வீடு எங்கே என்று கேட்டால், அதுவும் பனிப் பிரதேசமான கைலாயம்.

ஸுப்ரூ : அழகான புருவங்கள் படைத்தவள். 'ப்ரூ' என்பது புருவங்களைக் குறிக்கும். புரு என்பதிலிருந்து வந்ததுதான் ஆங்கிலச் சொல்லான brow.

அழகான கவலை!

ஆசார்யர் சொல்கிறார், அம்பிகையின் அழகான புருவங்கள் சற்று இலேசாக நெரிந்திருக்கின்றனவாம். ஏனென்றால், இந்த உலகத்தில் இருக்கக்கூடியவர்களின் கவலைகள், துன்பங்கள், இன்னல்களை நினைத்து அம்பாள் இலேசாகப் புருவங்களை நெரிக்கிறாளாம்!

ஆகவே, அவளுடைய புருவங்கள், பார்ப்பதற்கு அழகாக இருப்பதால் மட்டுமே அழகைப் பெறவில்லை! தன்


ஸ்ரீ சாரதாதேவி,
சிருங்கேரி.

குழந்தைகளுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய தன்மையினாலும் அழகைப் பெறுகின்றன!

ஷோபனா - அழகே வடிவமானவள்.

ஸுர நாயிகா - தேவர்களின் தலைவி.

காலகண்டி - ஆலகால விஷத்தை உண்ட பரமேசுவரன் கால கண்டன் (கால - விஷ; கண்டம் - கழுத்து). அவனுடைய தர்மபத்னி காலகண்டி.

காந்திமதி - ஒளிபொருந்தியவள், தேஜஸ்வினி.

க்ஷோபிணி உணர்ச்சியை உறுதிப் படுத்துபவள்.

ஸூக்ஷ்ம ரூபிணி - ஸ்தூல வடிவமாக, அழகின் வடிவமாக மட்டுமின்றி ஸூக்ஷ்ம ரூபமாகவும் எல்லாவற்றின் ஆத்மாவாக வும் இருக்கிறாள்.

வஜ்ரேசுவரி - உறுதி படைத்தவள்

வாமதேவி - வாமதேவனுடைய தர்ம பத்னி. வாமதேவர் என்பது சிவகாமேசுவர ருடைய இன்னொரு திருநாமம். சிவபெரு மானுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அவற் றுள் ஒரு முகம் வாமதேவம். அந்த வாமதேவருடைய தர்மபத்னி வாமதேவி. ஈசுவரனின் வாம பாகத்தில் இருக்கக்கூடிய வள் என்றும் கொள்ளலாம்.

வயோவஸ்தா விவர்ஜிதா - மூப்பினால் (வயதினால்) ஏற்படக்கூடிய மாறுதல் களுக்கு உட்படாதவள்.

ஸித்தேஸ்வரி - எல்லோருக்கும் சித்துக் களை வழங்கக்கூடியவள். சித்தர்களுக்கெல் லாம் ஈசுவரியாக இருக்கக்கூடியவள்.

ஸித்தவித்யா - ஸித்துக்கள் என்றால், அணிமா தொடங்கி மஹிமா வரையில் உள்ள வித்யைகள். அப்படிப்பட்ட எல்லா வித்யைகளினாலும் உணரப்படக்கூடியவள் ஸித்த வித்யா.

ஸித்த மாதா - அந்த வித்யைகளின் தாயாக - உற்பத்தி ஸ்தானமாக இருப்பவள்.

யசஸ்வினி - புகழுக்கும் கீர்த்திக்கும் இருப்பிடமாகவும் அதனை பக்தர்களுக்கு வழங்க வல்லவளாகவும் இருப்பவள்.

பஞ்சபூதங்களிலும் பெருமாள் இருப்பதாக, திருமழிசை ஆழ்வார் தன் பாசுரங்களில் சொல்கிறார்!

ஆதார சக்கரங்கள்

இப்படிச் சொல்லிக்கொண்டே போய், அடுத்து வரக்கூடிய 62 திருநாமங்கள் அம்பாளினுடைய ஆற்றலை குண்டலினி சக்தியானது எவ்வாறு எழுப்பி, எழுப்பி எழுப்பிக்கொண்டே போய் ஒவ்வொரு சக்கரத்திலும் ஸ்தாபிதம் செய்கிறது என் பதை உணர்த்தி, அந்த ஸ்தாபிதம் மூலமாக அவளை வழிபடக்கூடிய திருநாமங்கள்.

விசுத்தி சக்ர நிலயா என்று ஆரம் பித்து, அங்கேயிருந்து போய் **சஹஸ்ர தள பத்மஸ்தா ஸர்வ வர்ணோப ஷோபிதா** வரையில் இருக்கக்கூடிய திருநாமங்கள் இந்த ஆதார சக்கர ஆராதனை முறையைச் சொல்பவை.

சாதாரணமாக, ஆதார சக்கரங்களின் வரிசை என்பது 'மூலாதாரம்' என்பதில் தான் ஆரம்பிக்கும். மூலாதாரம், சுவாதிஷ் டானம், மணிபூரகம், விசுத்தி, ஆக்ஞா, சஹஸ்ராரகம் என்பதுதான் கீழிருந்து மேல் நோக்கி உடலில் அவை அமைந்துள்ள வரிசை.

ஆனால், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் விசுத்தியில் நடுவிலே எங்கேயோ ஆரம் பித்தது, கீழ்நோக்கி மூலாதாரம் வரையில்

போய் அங்கேயிருந்து ஆக்ஞா, சஹஸ்ரார கம் என்று மேல்நோக்கிப் பாய்கிறது. சஹஸ்ராரகம் என்பதுதான் அம்பாள் சிவ-சக்தி ஐக்கிய ஸ்வரூபமாக நடனமாடு கின்ற ஸ்தானம்; ஆயிரம் இதழ் கொண்ட தாமரையால் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரம் என்றால் எண்ணிக்கையில் சரியாக ஆயிரம் தளங்கள் என்று அர்த்தம் இல்லை; ஆயிரக்கணக்கான என்று பொருள்.

இந்தக் கிரமம் ஏன் மாறி வருகிறது என்று பார்க்கிறபோது, ஆச்சார்யர் ஆதிசங்கரர் கூட இதே - ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் உள்ள கிரமத்தைத்தான் கையாண்டு



பாடியிருக்கிறார் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த ஆதார சக்கரங்களுக்கும் பஞ்ச பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகியவற்றுக்கும் தொடர்பு உண்டு. இந்த பஞ்சபூதங்கள் எப்படி, எந்த வரிசையில் தோன்றின என்பதற்கொரு கணக்கு உண்டு.

நாம் இருப்பது 'பிருத்வி' என்கிற மண் அல்லது நிலத்தின் மீது. அதுதான் கடைசியாக உருவானது. ஆனால், ஆழ்வார்களும் மாணிக்கவாசகரும் பாடுகிறபோது 'மண்' என்பதில் ஆரம்பித்தே பஞ்சபூதங்களை வரிசைப்படுத்துவார்கள்.

பிருத்விக்கு முன் தோன்றியது தண்ணீர்; அதற்கு முன் தோன்றியது நெருப்பு; நெருப்புக்கு முன் தோன்றியது காற்று; காற்றுக்கு முன் தோன்றியது வெளி அல்லது ஆகாயம். அண்டவெளி என்பதற்கு எல்லையே கிடையாது. அதனால்தான் sky is the limit என்று ஓர் ஆங்கிலச் சொல் வழக்கு கூட ஏற்பட்டது. இந்த ஆகாசம் தான் முதலில் தோன்றியது; அதிலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் என ஒவ்வொன்றாகப் பிறந்தன.

இந்த வரிசைக் கிரமத்தில் அவை தோன்றியபோதிலே குணங்களும் தோன்றின.

இதை எங்கே பார்க்கலாம் என்றால் ஆழ்வார் பாசுரத்தில் :

பூ நிலாய ஐந்துமாய்
புனற்கண் நின்ற நான்குமாய்
தீ நிலாய மூன்றுமாய் சிறந்த
கால் இரண்டுமாய்
மீ நிலாயது ஒன்றும் ஆகி,
வேறுவேறு தன்மையாய்
நீ நிலாய வண்ணம்
நின்னை யார்
நினைக்கவல்லரே?

என்று திருச்சந்த விருத்தத்தில் திருமழிசை ஆழ்வார் பாடுகிறார். பூமியில் ஐந்து, நீரில் நான்கு, தீயில் மூன்று, காற்றில் இரண்டு, ஆகாயத்தில் ஒன்று என அதனதன் குணங்களின் எண்ணிக்கையைச் சொல்லி அவை அனைத்திலும் பெருமாள் இருப்பதைக் கூறுகிறது இந்தப் பாசுரம்.

பஞ்சபூதங்களில் தோன்றிய இந்த ஐந்து குணங்கள், நம் ஐம்புலன்களோடு தொடர்புடையவை. எப்படி...?

(வளரும்)

மருதன்



ஒரு கற்பனை பயணம்!

கவனியுங்கள். இந்தப் புத்தகம் எழுதப்பட்டது 1873ம் ஆண்டில். க்ரிப்டாலஜி என்னும் துறையைப் பற்றி அப்போது யாரும் கனவுகூட கண்டிருக்கவில்லை. ஆனால், ஜூலஸ் வெர்ன் க்ரிப்டாலஜியின் நுணுக்கங்களைக் கிட்டத்தட்ட அப்படியே எழுத்தில் கொண்டுவந்துவிட்டார். பூமியின் மையத்துக்கு ஒரு பயணம். (Journey to the centre of the earth) இன்றைய சயின்ஸ் ஃபிக்‌ஷன் கதைகள் அனைத்துக்குமான முன்னோடி இந்தப் புத்தகம்.

பூமியின் மையத்துக்கு எப்படிப் போவது என்பது பற்றிய ஒரு ரகசியக் குறிப்பு ஒரு ப்ரொஃபஸருக்குக் கிடைக்கிறது. தன் சகோதரனை அழைத்துக்கொண்டு ஐஸ்லாண்டுக்குப் பயணமாகிறார். நெருப்பைக் கக்கிக்கொண்டு ஒரு எரிமலை அவர்களை வரவேற்கிறது. 'பைத்தியமா? வேண்டாம் வா. திரும்பிப் போய்விடலாம்' என்கிறான் சகோதரன். 'போய் என்ன செய்வது?' என்கிறார் ப்ரொஃபஸர். 'இதன்மூலம் நீங்கள் அடைய விரும்புவது என்ன?' கேட்கிறான் சகோதரன்.

பதிலளிக்க முடியவில்லை ப்ரொஃபஸரால். பதிலைத் தயாராக வைத்துக்கொண்டு ஆய்வு ஒன்றைத் தொடங்க முடியாது. தவிரவும், ஆய்வின் முடிவு முக்கியமும் அல்ல. ஆய்வுதான் முக்கியம்.

ஒரு கோழி முட்டை. அம்புக்குறிகள். இப்படியாக அடுக்கடுக்காக பல குறியீடுகள். ஒவ்வொன்றையும் தனித்தனியே எடுத்து வைத்துக்கொண்டு உடைக்கிறார் ப்ரொஃபஸர். முட்டை எதைக் குறிக்கிறது? ஒரு கோடு எதைக் குறிக்கிறது? சாய்ந்த கோடு? வளைந்த கோடு? இரு கோடுகள்? லத்தீன், பிரெஞ்சு என்று வெவ்வேறு மொழிகளைத் துணைக்கு அழைத்துப் பாடுபடுகிறார் ப்ரொஃபஸர். எல்லாவற்றையும் உடைத்து, எல்லாவற்றையும் சிராக்கி, ஒரு நேர்க்கோட்டில் கூட்டி வைத்து வாசிக்கும்போதுதான் விடை கிடைக்கிறது.



இன்று க்ரிப்டாலஜி ஒரு முக்கியத் துறை. ராணுவ அதிகாரிகள், உளவு நிறுவனங்கள், புலனாய்வு அதிகாரிகள் என்று பலருக்கும் இந்தத் துறையின் அவசியம் தெரியும்.


உதாரணத்துக்கு, 'வரும் மார்ச் மாதம் 23ம் தேதி காலை பத்து மணிக்கு குறிப்பிட்ட இடத்தில் இருந்து தாக்குதலைத் தொடங்குவோம். அனைவரும் தயாராக இருக்கவும்.' - இதை எப்படி எழுதி அனுப்புவது? சகாக்கள் அனைவருக்கும் அந்த சங்கேதக் குறியீடு புரிய வேண்டும். அதைவிட முக்கியம், செய்தியை வழியில் யாராவது பறிமுதல் செய்தால், அவர்களுக்கு அந்தக் குறியீடு புரியக்கூடாது; அல்லது தவறாகப் புரிய வேண்டும். சவாலான பணி இது.

எரியும் எரிமலை. பேய் போல் அடிக்கும் கடலலைகள். விசித்திர ஜீவராசிகள். அதீத இருட்டு. அதீத வெளிச்சம். உயிரைக் குடிக்கும் ஆபத்துகள். அனைத்தையும் கடந்து அந்தப் பயணம் தொடர்கிறது. இடையில் ப்ரொஃபஸரும் அவர் சகோதரரும் பிரிந்துவிடுகிறார்கள்; தொலைந்தும் விடுகிறார்கள். ஒவ்வொரு காட்சியையும் ஜூல்ஸ் வெர்ன் விவரித்திருக்கும் விதம் பிரமிப்பூட்டக் கூடியது.

ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்தால் பிரமாண்டம் புரியும். பூமியைப் பிளந்து பயணமாகிறது இந்தப் புத்தகம். முதலில் பூமிக்கு மையம் என்று ஒன்று இருக்குமா? அதை அடைய முடியுமா?

இன்று வரை பல கேள்விகளுக்கு விடையில்லை. பூமியை வாசித்துக்கொண்டு இருக்கிறார்கள். கையளவு கற்றுவிட்டோம் என்று நினைப்பதேகூட தவறுதான். கைவிரல் நுனியின் ஒரு பகுதியளவுதான் நமக்குத் தெரியும்.

ஜூல்ஸ் வெர்ன் அறிவியல் ஆய்வாளர் அல்ல; கதாசிரியர். கற்பனையில் நடத்தப்பட்ட ஆய்வு அது. கற்பனைப் பயணம், கற்பனையான பூமியின் மையம். கற்பனைக் கதாபாத்திரங்கள், கற்பனைச் சம்பவங்கள். க்ரிப்டாலஜிகூட அவரைப் பொறுத்தவரை ஒரு சுவையான கற்பனைதான். ஆனால், அறிவியல் உலகம் கற்பனையை ஆச்சரியத்துடன் அணுகுகிறது. சயின்ஸ் ஃபிக்ஷனில் இருந்து தொடர்ந்து கற்றுக்கொள்ள முயற்சிக்கிறது. ஆகவேதான் சயின்ஸ் ஃபிக்ஷனின் தந்தை என்று கொண்டாடப்படுகிறார் ஜூல்ஸ் வெர்ன். ○





கொடைக்கானல்

கதை:

கற்பைக் காப்பாற்றிக் கொள்ள வீட்டை விட்டு வெளியேறும் ஒரு நடிகை, திருடனிடம் மாட்டிக் கொண்டால் என்னவாகும்...? நீங்கள் நினைப்பதுபோல் இல்லை. சினிமா என்பதால் காதல் வருகிறது; பிறகு மோதல் வருகிறது. காதல் சேர்ந்ததா...? மோதல் தீர்ந்ததா என்பது தான் கதை.

ப்ளஸ்:


- நடிகையாக அழகு கொஞ்சும் நடிப்பால் வசீகரிக்கும் பூர்ணா.
- அவரை ஆபாசமில்லாமல் பயன்படுத்தியிருக்கும் இயக்குநரின் புத்திசாலித்தனம்.
- செந்தில் அண்ட் கோ நிகழ்த்தும் பேய் காமெடி.
- நாயகன், நாயகி இருவருக்குள் நிகழும் செல்லக் காதல். சின்னச் சின்ன ஊடல்.
- கொடைக்கானலின் 'குளுகுளு'வை கேமராவில் கொண்டு வந்திருக்கும் ஒளிப்பதிவு.
- நல்ல தமிழ் வார்த்தைகளைக் கொண்ட வசனங்கள்.

மைனஸ்:

- கதையோடு ஒட்டாத நடிப்பை வழங்கிய கதாநாயகர்கள்...
- கண்ணாமூச்சி காட்டும் சினிமா போலீஸ்...
- புஷ்வாணமான 'ஃப்ரண்ட்' செண்டிமெண்ட்...
- தூங்க வைக்கும் திரைக்கதை!
- கதையோடு ஒட்டாத இசை!
- நேர்த்தியற்ற சண்டைக் காட்சிகள்
- காமெடியர்கள் போல வரும் வில்லன் அண்ட் கோ

கொடைக்கானல் - பார்க்கலாம்!

– பிரேம்ஜி



நிறங்களின் உணர்வுகள்!

சூரியனுக்கு சுப்ரபாதம் - ஆர்னால்ட் பென்னெட், தமிழில்: ஜெயந்தி சங்கர், அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், பெரம்பூர், சென்னை - 11, விலை ரூ.35/-

நேர மேலாண்மை குறித்த பன்னிரண்டு கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. வேலைப்பளுவினால் மன அழுத்தத்தில் இருப்போர், முழு ஈடுபாடின்றி பணிபுரிவோர் போன்றவர்களுக்கு நேரத்தைப் பங்கிடு செய்யும் வழிமுறைகளைக் கூறுகிறது இந்நூல். 'வெற்றிக்கு வழி உழைப்பு மட்டுமல்ல; திட்டமிடுதலும் தான்' என்கிறார் நூலாசிரியர்.

நிறங்கள் பெயர் மாறிவிட்டன, குகை மா.புகழேந்தி, குமரன் பதிப்பகம், தி.நகர், சென்னை - 17, விலை ரூ.50/-

வெவ்வேறு வண்ணத் திரைகளினூடாக, சமூகம், சக மனிதர்கள் மீதான பார்வைகள் கவிதைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொகுப்பு. நூலில் 70 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நிறங்களின் உணர்வுகளை அனுபவித்துப் பார்க்கத் தூண்டும் கவிதைகள்.

விற்பனைக்குப் பிறகு திருப்திகரமான சேவை அளிக்கும் வழிகள், பிரமோத் பத்ரா விஜய் பத்ரா, தீபக் மகேந்துரு. தமிழில்: விமலநாத், கண்ணதாசன் பதிப்பகம், தி.நகர், சென்னை - 17. விலை ரூ.75/-

விற்பனையாளர்கள் தத்தம் வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், புதிய வாடிக்கையாளர்களைப் பெறவும், விற்பனைக்குப் பின் அளிக்கும் சேவை முக்கியமானது. அதற்கான வழிமுறைகளை, பதினொரு கட்டுரைகள் மூலம் தொகுத்துத் தருகிறது இந்நூல்.

மௌனம் கலையட்டும்! ஜென்ராம், விகடன் பிரசுரம், சென்னை - 02, விலை ரூ. 65/-

சமூகம் மற்றும் அரசியலில் இருக்கும் மெத்தனங்களை, பிரச்னைகளை... எளிய விவாதங்களாகத் தரும் கட்டுரைகள். அலசப்படும் நிகழ்வுகளில், தொடர்புடைய புகைப் படங்கள் பொருத்தமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. கட்டுரைகள் வெளி வந்த தேதிகளோடு இருப்பதால் இந்நூல் ஓர் ஆவணமாகவும் பயன்படும்.


- நேயமுகில்

மறைந்து வரும் உயிரினங்கள்!









- கவிதைகள்
- கதைகள்
- பரிசுப் போட்டி

அனிமேஷன் அதிசயம்!

கோகுலம்

டிசம்பர் 2008 விலை ரூ.8/- குழந்தைகளின் குதூகலம்!



லலிதா செல்லப்பா

கல்யாணமாகி புகுந்த வீடு போன சரோஜா, ஆறுமாதங்கள் கழித்து இன்றுதான் வந்தாள். அவள் முகத்தில் மலர்ச்சி; இல்லறத்தின் முதிர்ச்சி.

அனைவரும் சாப்பிட்டு முடிந்தபின்னர் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த சமயம், "அப்பா அவர் தினமும் ஒரு மணி நேரம் பஸ்சில் இடிபட்டு, கஷ்டப்பட்டு ஆபீஸ் போறதை நினைச்சாலே ரத்தக் கண்ணீர் வருது. கல்யாணத்தின் போது ஸ்கூட்டர் வாங்கிக் கொடுக்கவில்லையே. அதை இப்ப வாங்கிக் கொடுத்துடுங்க. அவர் சந்தோஷம்தான் என் சந்தோஷம்" என்ற சரோஜாவை அதிசயத்துடன் பார்த்தேன்.

கல்யாண ஏற்பாடுகள் செய்த சமயம், "அம்மா, என் கல்யாணத்துக்காக அப்பா படற கஷ்டத்தைப் பார்த்தா, ரத்தக் கண்ணீர் வருது. எனக்காக இத்தனை கஷ்டமா? செய்த செலவுகள் போதும். ஸ்கூட்டர் கேட்டால் வாங்கிக் கொடுக்கணுமா..? அப்பா படற கஷ்டத்தில் ஸ்கூட்டர் வேண்டாம். அப்பாவின் சந்தோஷம்தான் என் சந்தோஷம்" என்று சொன்னவளா இன்று இப்படி?

"கவலைப்படாதே சரோஜா. சீக்கிரமே ஸ்கூட்டர் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு பண்ணறேன்" என்றார் என் கணவர். ○

வெ.ராம்குமார்

"அப்பா! நான் ஒரு பெண்ணை லவ் பண்றேன்... கட்டினால் அவளைத்தான் கட்டுவேன்."

தன் எதிரே நின்று கம்பீரமாகப் பேசும், தன் ஒரே மகன் விமலைப் பார்த்து, "சரிப்பா! உன் இஷ்டம் போல கட்டிக்கோ... ஆனால், இப்ப வேணாம் ஒரு சில மாதங்கள் ஆகட்டும். ஏன்னா, அப்பத்தான் உனக்குத் திருமண யோகமே வருது" என்றார் சுபாஷ்.

"ஓ.கே. நீங்க சம்மதிச்சீங்களே அதுவே போதும்ப்பா!" என்றபடி அவன் கிளம்ப,

"ஏங்க! அவன்பாட்டுக்குக் காதல்ங்கறான். நீங்க பாட்டுக்கு சரின்றீங்களே... திருமணம்ங்கறது உங்களுக்கெல்லாம் விளையாட்டா..." என பட்டாசு போல் படபடவென வெடித்தாள் கலா.

"கலா! அவன் காதலிக்கிற விஷயம் எனக்கு எப்பவோ தெரியும். அது மட்டுமில்லாமல், திருமணத்துக்குக் குறுக்கே நின்னா, கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளி முதியோர் இல்லத்துல சேர்த்துடுவானாம்... அந்த நிலைமை வர வேணாமுன்னு தான்!"

"அடப்பாவி மகனே... சரி, அதுக்கு எதுக்கு கல்யாணத்துக்கு டைம் சொன்னீங்க?"

"அதற்கு முன்னாடி, நம்ம சொத்து, பெற்றவர்களைச் சாகும்வரை நல்லபடியா கவனித்தால்தான் கிடைக்கும்ன்னு அவனுக்குத் தெரியாமல் மாற்றி எழுதத்தான்" என்றார். ○



போஸ்டர்

ஆர்.தேவிகா

"தலைவரே... 'நாளைய பொழுது' சினிமாவைத் தடை செய்யணும்"

"ஏன்...?"

"அதுல நம்ம கட்சி நிறுவனர் ஐயாவோட தில்லுமுல்லுகளையெல்லாம் அக்குவேறு, ஆணி வேறா... அலசி இருக்காங்களாம். படம் வெளியே வந்தா... நம்ம கட்சியோட செல்வாக்கு குறைஞ்சிடும் தலைவரே..."

"சரி பார்த்துக்கலாம்."

மறுநாள் செய்தித்தாளைப் பார்த்த தொண்டனுக்குப் பயங்கர அதிர்ச்சி.



'நாளைய பொழுது' சினிமா... ஒரு காவியம் எனத் தொடங்கும் வாழ்த்துக் கடிதத்தோடு, தலைவரின் ஃபோட்டோவுடன் விளம்பரம் வெளியாகி இருந்தது.

தொண்டன் ஆதங்கப்பட்டான். "என்ன தலைவரே இப்படிப் பண்ணிட்டிங்க?"

"எங்கள மாதிரி அரசியல்வாதிங்க வாழ்த்தி விளம்பரம் கொடுக்கிற படங்களை மக்கள் நிராகரிச்சுருவாங்க. இந்தப் படம் ஊத்திக்கும். தடை செஞ்சா படத்துல என்னமோ இருக்குனு... கூட்டம்கூட்டமா வந்து பார்க்க ஆரம்பிச்சுடுவாங்க!" என்றார்!

பார்வை

மிதுனன்

புதிய கார் டிரைவர், வேலைக்கு வந்து ஒரு வருஷமாகிறது. இளைஞனான போதிலும், காரை மிகப் பொறுப்பாக ஓட்டுகிறான். இருப்பினும் போகப் போக அவன் சொரூபம் புரிந்தது.

காலை வீட்டுக்கு வந்தவுடன் 'அம்மா' என்றழைத்து கார் சாவி கேட்பான். அதை வாங்கும்போதும், கொடுக்கும்போதும், வைத்த கண் வாங்காமல் பார்க்க ஆரம்பித்தான். இந்தச் சின்ன வயதில் அவன் பார்வையில் இவ்வளவு களங்கமா?

கணவரிடம் விஷயத்தைக் கூறி விட்டேன். மறுநாள் காலை அவன் வேலைக்கு வந்தவுடன் கணக்கைத் தீர்த்து வேலையை விட்டு நீக்கிவிட்டார்.

உடனே அவன் 'அம்மா' என்று என் காலைத்தொட்டு வணங்கினான். அவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து மணிபர்ஸை எடுத்துத் திறந்து காட்டினான். அதில் என் வயதையொத்த ஒரு பெண்ணின் படம் இருந்தது.

"அம்மா, இவங்க என் அம்மாங்க. அசப்பில உங்களை மாதிரி இருக்காங்க பாருங்க. சமீபத்துல சாலை விபத்தில் இறந்துட்டாங்க. உங்களைப் பார்க்கும்போது அவங்களே நேரிலே வந்துவிட்டதா உணர்றேங்க. அது தாங்க உங்களைப் பாத்துக்கிட்டிருந்தேன். மன்னிச்சுடுங்க" என்றான்.


நான், கார் சாவியை அவன் கையில் கொடுத்து வேலையில் தொடரச் சொல்லி விட்டேன்.



வியக்கவைக்கும்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'சென்னை சங்கமம்' நடத்தத் திட்டமிட்ட போது, தமிழ் மண்ணின் மணம் பரப்பும் நாட்டுப்புறக் கலைகளை மட்டும், சென்னை நகரவாசிகளுக்கு அறிமுகப் படுத்துவதுதான் முதலில் செய்யப்பட்ட ஏற்பாடு. ஆனால், கலைகளோடு நமது பாரம்பரிய உணவு வகைகளை சென்னை வாசிகள் ருசிக்கவேண்டும் என்ற யோச னையும் முன்வைக்கப்பட்டது. அந்த யோச னைக்குச் செயல்வடிவம் கொடுத்தவர் ஹாட்பிரட் மகாதேவன். இவருடைய கைவண்ணத்தில் சென்னைவாசிகள் திக்கு முக்காடிவிட்டனர்.

இன்று இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் பல நகரங்களிலும், ஹாட்பிரட் உணவகம் பிரசித்தம். ரொட்டி வகைகள், பிஸ்கட்டுகள், கேக்குகள்... போன்றவற்றை மேற் கத்திய பாணியில் தயாரித்து விற்பனை செய்து வெற்றிக்கொடி நாட்டி வருகிறது ஹாட்பிரட். இவர்களது கேக்கில் முட்டை கலக்காத கேக்குகளும் உண்டு. சென்னை பல்கலைக்கழகத்தில், கேட்டரிங் உதவிப் பேராசிரியராக வாழ்க்கையைத் துவக்கினார் மகாதேவன். ஆனால், இப்படியே பேராசிரி யர் பணியில் நீடித்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை என்பதை விரைவில் புரிந்துகொண்டார். கொஞ்சம் சேமிப்பை வளர்த்துக்கொண்டு, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் 1982-ல் உணவகத்தைத் துவக்கினார்; பிரமாதமாகப் போயிற்று. அந்த வெற்றி கொடுத்த தன்னம்பிக்கை யில் அடுத்து 'காங்கேட்' என்ற உணவகத் தைத் துவக்கினார். நார்த் இண்டியன், மேற்கத்திய, காண்டினென்டல் உணவு வகைகளை அற்புதமாகத் தயார்செய்து, நூற்றுக் கணக்கான வாடிக்கையாளர் களைக் கவர்ந்தார். ரொட்டி மற்றும் பிஸ்கட் தொழி லில், நம் தயாரிப்புகள் மேற்கத்தியத் தரத்தில் இல்லையே என்று கவலைப்பட்டு, மகா தேவன் துவக்கியதுதான் ஹாட்பிரட்.



இந்தியாவில் வெற்றிக் கொடி நாட்டிய பிறகு, ஹாட்பிரட் பிரான்ஸுக்குப்



விருந்தோம்பல்



6

'மா:பா' பாண்டியராஜன்

போனது. இப்போது பல நாடுகளில் கால் பதித்துச் சக்கைபோடு போட்டுக்கொண்டிருக்கிறது.

ஹாட்பிரட் போன்ற நூற்றுக்கணக்கான உணவகங்களும் மற்றும் ஹோட்டல்களும், இந்தியாவில் 'விருந்தோம்பல்' துறையில் வேலை வாய்ப்புகளை வளர்த்து வருகின்றன. சுற்றுலாப் பயணிகளின் விருப்பமான இடமாக இந்தியா இருப்பதால், சர்வதேச சுற்றுலாப் பயணிகள் லட்சக்கணக்கில் வருகிறார்கள். இதனால் ஹோட்டல் தொழில் செழிக்கிறது. 2008ம் ஆண்டு, விண்ணைமுட்டும் நிலங்களின் விலையால் ஹோட்டல்கள் மெட்ரோ நகரங்களை விட்டு, அடுத்தகட்ட நகரங்களில் விரிவாக்கத்தைத் துவங்கின. 2006-07ம் ஆண்டு விருந்தோம்பல் தொழில், முந்தைய வருடத்தோடு ஒப்பிடும்போது, இருபத்தி இரண்டு சதவிகித வளர்ச்சியை அடைந்திருந்தது. இந்திய அரசின் சுற்றுலாத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட 1980 ஹோட்டல்களில், சுமார் ஒரு லட்சம் அறைகள் உள்ளன. 2010ம் வருடம் விருந்தோம்பல் தொழிலில், சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் புரளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தங்கும் அறைகளின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தொடக்கூடும்.

சில சுற்றுலா நகரங்களைத் தவிர மற்ற சில நகரங்களில் தற்போது ஹோட்டல்கள் கொஞ்சம் டல்லடித்து வருகின்றன. இதற்குக் காரணம், சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுணக்கம்தான். இது ஒரு தற்காலிக நிலையே. தாஜ், ஒபராய், லீ-மெரிடியன் போன்ற சங்கிலித் தொடர் ஹோட்டல்கள், இந்தியாவில் பல நகரங்களில் இருக்கின்றன. அதேபோல சங்கிலித் தொடர் ஹோட்டல்களை நமது நாட்டில் துவங்க, வெளிநாடுகளைச் சேர்ந்த ஹில்டன், மரியாட் போன்ற நிறு

அனுபவத்தில் நன்கு வேலை தெரிந்த தச்சர், எலெக்ட்ரீஷியன், பிளம்பர், சமையல்காரர் என்று நிறையவே இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் திறனைப் பற்றி தக்க சான்றிதழ் (Accreditation and certification) இல்லாத நிலையில், அவர்களுக்குப் பெரிய நிறுவனங்களுக்கோ, அல்லது வெளிநாடுகளுக்கோ வேலைக்குச் செல்வதில் பிரச்னை இருக்கும். இப்படிச் சான்றிதழ் இல்லாவிட்டால், வெளிநாட்டு வேலைக்கு, தூதரகங்கள் விசா தராது. சமீபத்தில் ஒரு நிறுவனம் வெளிநாட்டுப் பணிக்காக, தனது சமையல் கலைஞர்களுக்குப் பொய்யான ஆவணங்கள் கொடுத்து தூதரகத்தில் மாட்டிக் கொண்டது. சரியான மற்றும் முறையான கல்வியறிவு இல்லாத அதே சமயம், இதுபோன்ற தொழில்களில் அனுபவம் உடைய, சுமார் பதினைந்து லட்சம் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். ஆனால், இந்தத் திறன்களை உடையவர்களின் தேவையோ சுமார் ஐம்பது லட்சம். எனவேதான், நல்ல 'வேலைக்காரர்களுக்கு' கொஞ்சம் பயிற்சி கொடுத்து, சான்றிதழ் வழங்கி, அவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை வழங்கி வழிசெய்யும் முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. இது தவிர, தேவையைக் கணக்கிலெடுத்து இந்தத் தொழில்களில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் உருவாக்கப்பட்டிருக்கிறது தேசிய திறன் வளர்ச்சி இயக்ககம். (National Skill Development Mission)



மத்திய அரசால் சுமார் 15,000 கோடி ரூபாய் செலவில் திறன்மேம்பாடுகளை வளர்க்கத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. நாடு முழுவதும் 1600 தொழிற் பயிற்சிக்கூடங்கள் (ITI), 10,000 வொகேஷனல் பயிற்சிப் பள்ளிகள், 50,000 திறன் மேம்படுத்தும் மையங்கள் ஆகியவற்றை இந்த இயக்ககத்தின் கீழ் அமைப்பதுதான் திட்டம். ப்ளம்பர், எலெக்ட்ரீஷியன், வாகன மெக்கானிக், பேக்கர், சுற்றுலா உதவியாளர், சுகாதாரப் பணியாளர்கள் என்ற பலவிதமான வேலைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பள்ளியிறுதி படித்தவர்களும், பாதியில் படிப்பை விட்டவர்களும், ஏற்கெனவே இந்தத் தொழில்களில் அனுபவமுடையவர்களும் வொகேஷனல் பயிற்சியில் சேர்ந்து, முறையாகத் தொழில் கற்று சான்றிதழ் பெறலாம். வருத்தமான செய்தி என்னவென்றால், வழக்கமான அரசு மெத்தனம் மற்றும் அதிகாரிகள் சுணக்கம் காரணமாக இந்தத் திட்டம் செயல்வடிவம் பெறத் தாமதமாகி வருகிறது.

வனங்கள் முயன்று வருகின்றன. 2009-ல் இந்தத் துறையில் நாலரை லட்சம் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பது முதலில் போட்ட மதிப்பீடு. இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவால், வேலை வாய்ப்பு இரண்டு லட்சமாகக் குறைந்தாலும், 2010ல் நிலைமை சீராகி வளர்ச்சிப் பாதை பிரகாசமாகும்.

(வெளிச்சம் வீசும்)

எழுத்தாக்கம் : **ஸ்ரீநி**

நீங்கள் கேட்டவை

தராசு



● **ஆர். வஸந்தா, சென்னை - 28**

? சென்னை ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்குத் தாமே நேரில் சென்று, எல்லா வழிமுறைகளையும் நிறைவேற்றி, ஓட்டுனர் லைசென்ஸ் புதுப்பித்துக்கொண்ட அன்புமணி ராமதாஸைப் பாராட்டலாம் அல்லவா?


! எல்லா அரசியல்வாதிகளுமே இப்படி விதிமுறைகளை அனுசரித்து நடந்துகொண்டால், நீங்கள் அன்புமணியைத் தனித்துப் பாராட்ட நினைக்கமாட்டீர்கள் அல்லவா! அப்படி ஒரு சூழ்நிலை தோன்ற அன்புமணி வழிகாட்டியிருக்கிறார்; மற்றவர்கள் பின்பற்ற வேண்டுமே! நிற்க; அன்புமணிக்கு ஆர்.டி.ஓ. ஆபீஸில் கிடைக்கும் மரியாதை, அங்கே செல்ல நேரும் எல்லோருக்கும் கிடைத்தால், ஆர்.டி.ஓ. அலுவலகங்களையும் பாராட்டலாம்.

புத்தாண்டுக்காக மதுபான உற்பத்தி அதிகரிப்பாமே?

● **ஆர். ராஜதுரை, சீர்காழி**

? புத்தாண்டுக்காக மதுபான உற்பத்தியை அதிகரிக்க அரசு உத்தரவிட்டுள்ளதே?

! பூரண மதுவிலக்கு கோருகிறார் ராமதாஸ். மதுபான உற்பத்தியை அதிகரிக்க உத்தரவிடுகிறது தி.மு.க. அரசு. 'பா.ம.க.வுடன் தீவிர கருத்துவேற்றுமை ஏதுமில்லை' என்று கருணாநிதி கூறுகிறார் (ஹிந்து 26.11.08). கேவலம்! கேவலம்!



★ சிலையும் சிந்தனையும்

● **வானவில் மூர்த்தி, கடலூர்**

? முதல்வர் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைத் தமிழர்களுக்கு நிதி உதவி குவிந்துள்ளதே, இதன் விளைவாக, தேர்தல்வாக்குகளும் குவியுமா?

! பங்குச் சந்தை சரிந்துகொண்டே வரும்போது ஒரு நல்ல செய்தி வந்தால் குறியீடு உயரும்; அடுத்த நாள், மறுபடி சரியும். அப்படித் தாங்க தி.மு.க. ஆட்சியில் அதன் வோட்டு வங்கியும்.

● **அ.ப.ஜெயபால், பரங்கிப்பேட்டை**

? அதிகமாக யோசிப்பவர்களுக்கு வழுக்கை விழும்

என்பது உண்மையா?

! இல்லை; மரபணு ரீதியான நிகழ்வு அது. ஐன்ஸ்டீன், அப்துல் கலாம் போன்ற பல தீவிர சிந்தனையாளர்களுக்கு நிறைய முடி வளர்ந்திருக்கிறது. வழுக்கை பற்றிய கவலைதான் வாழ்க்கையை வழுக்கையாக்கும்; தவிர்க்க வேண்டும்.

● **த. பரதன், திருவாரூர்**

? தொலைத் தொடர்பு வசதிகள் இவ்வளவு முன்னேறியுள்ள இக்காலத்திலும், கடத்தல் கொள்ளைகள் நடப்பதைத் தவிர்க்க முடியாதா?

! ஹூம்... மாநகரங்களில் பட்டப்பகலில் நடக்கும் கொலை, கொள்ளைகளையே தடுக்க முடியவில்லை!



✱ சிரிப்பும் கண்ணீரும்

● **ஏ.எஸ்.யோகானந்தம்,**
ஔவையார்பாளையம்

? யுவராஜ் சிங்கின் அசத்தலான, அதிரடி சதங்கள்...?

! கங்குலியின் ஓய்வு, யுவராஜுக்கான டெஸ்ட் வாய்ப்பைத் திறந்திருக்கிற நேரத்தில், இந்த அதிரடி, தேர்வாளர்களை ஈர்த்திருக்கும். தேவையான நேரத்தில் வந்த அழகான சதங்கள், யுவராஜாவை மன்னராக்கும்.

● **பவானி கிருஷ்ணா, பெங்களூரு**

? விலைவாசி உயர்வைச் சமாளிக்க, அரசு ஊழியர்களுக்குத் தலா ரூ.20,000 முன் பணமாகத் தர வேண்டும் என்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச்செயலாளர் முத்து சுந்தரம் அறிவிப்பு பற்றி?

! இன்றைய முன் பணக் கோரிக்கை நாளைக்குக் கடன் தள்ளுபடி கோரிக்கையாக மாறும்! அரசு ஊழியர்கள், முதல்வரின் தயாள சிந்தையால், ஒருவேளை பயன் பெறலாம். வரி செலுத்தும் இதர மக்களுக்கு என்று விடிவுகாலம்?

● **எம். சம்பத்,**
வேலாயுதம்பாளையம்

? விலைவாசி உயர்வைச் சமாளிக்க முடியாமல் நடுத்தர, ஏழை மக்கள் அலை பாய்ந்து கொண்டிருக்க, 'நாட்டின் வளர்ச்சி விகிதம் எட்டு சதவிகிதத்தைத் தொடும்' என்று பிரதமர் பேசுகிறாரே - அழுவதா? சிரிப்பதா?

! விலைவாசியை நினைத்து அழுகை வருகிறபோது, கொஞ்சம் நம்பிக்கை ஊட்டி பிரதமர் சிரிக்க வைக்கிறார் என்று நினைத்துச் சிரித்து வையுங்கள்.

● **சி. இந்து அழகேஷ், கள்ளக்குறிச்சி**

? ஒபாமா வெள்ளையர்களுக்கு உதவி செய்யும் கறுப்பு அடிமை என்று 'அல் கொய்தா' தலைவர் குறிப்பிட்டுள்ளது குறித்து...?

! இதுபோன்ற அநாகரிகச் சாடல்களால் ஒபாமா சஞ்சலப்படப் போவதில்லை; அமெரிக்க மக்களும் பிளவுபடப் போவதில்லை. தனது கூலிப் படையினரை உசுப்பிவிட அல்கொய்தா கையாளும் தந்திரம் இது.

● **ஆர்.பிரகாஷ், பொன்மலை**


? தெலுங்கு தேசம் ஜெயித்தால், வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ளவர்களுக்கு

❏ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
வானவில் மூர்த்தி,
கடலூர்

இலவச அரிசி வழங்கப்படும் என சந்திரபாபு நாயுடு அறிவித் துள்ளாரே?

! அரிசிப் பஞ்சம் வந்தாலும் நம் நாட்டில் இலவச அபத்தங்களுக் குப் பஞ்சமே வராது. மக்கள் வறு மைக் கோட்டுக்குக் கீழேயே மகிழ்ச்சியோடு இருந்துவிட மாட்டார்களா என்ற எதிர்பார்ப் புடன் இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ள சந்திரபாபு நாயுடுவுக் குத் தேர்தல் சின்னமாக 'திரு வோடு' ஒதுக்கலாம்.





* ஓய்வும்... * ... உயர்வும்





* தாக்குதலும் தந்திரமும்

* அரிசியும் அரசியலும்

● **ஜி.ஜெயபாலன், மதுரை**

? தங்கள் சுயலாபத்துக்காக ஜாதி - மதங் களைப் பயன்படுத்தும் சமூகத் தலைவர் களை, மாணவர்கள் அடையாளம் கண்டு, புறக்கணிக்க வேண்டும் என்கிறாரே விஜய காந்த்?

! அப்படியெல்லாம் ஏதும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இன்றைய மாணவர்களிடையே ஜாதி-மத பேதங்களை அரசியல் - சமூகத் தலைவர்கள் வளர்த்து வருகிறார்கள்.

● **அ. பழநி, தெங்கம்புதூர்** ★

? சட்டமன்றத்தில், சொகுசு கார் மற்றும் எம்.எல்.ஏ. காலனி வேண்டும் என காங். எம்.எல்.ஏ. கோரிக்கை வைக்கிறார். பிரச் னைகளை விவாதிப்பதற்குப் பதிலாக இப்படி சொகுசு கேட்கிறார்களே - கடைசி வரை பஸ்ஸில் சென்ற கக் கன்ஜியும் தமிழக மந்திரிதானே?

! கக்கன்ஜி போன்ற அன்றைய அரசியல் தலைவர்கள் பலரை இன்றுள்ளோ ருடன் ஒப்பிடக்கூடாது; சும்மா நினைவு கூர்ந்து படத்துக்கு - சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்த வேண்டும்; அவ்வளோ தான்!

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? புதிய டீ.வி சேனல் தொடங்க அரசியல் கட்சிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள் ளது பற்றி...?

! ஏற்கெனவே நிறைய அரசியல்கட்சி சேனல்கள் இருக்கும்போது, இந்த அனுமதி மறுப்பு நியாயமல்ல; நீதியுமல்ல. கோர்ட் டுக்குப் போனால் ஜெயிக்காது. ○

★ ரூ. 50/- பரிசு பெறுபவர்:

அ. பழநி,
தெங்கம்புதூர்

பாரதிராஜாவின் படங்களில் நடித்தபோது ஆரம்ப நாட்களில் கொஞ்சம் தடுமாறத்தான் செய்தேன். ஆனால், அவரிடம் கற்றுக் கொண்ட பிறகு, சமாளித்து விட்டேன்.

''இந்த சீன்ல நீ அழணும்'' என்று சொல்வார்.

''எனக்கு அழறதுக்கான மூட் இல்லியே சார்!'' என்று சொல்வேன்.

'கிழக்குச் சீமையிலே' படத்தில் மிகச் சிறிய இடத்தில் ஷூட் செய்த காட்சி கூட, திரையில் மிக பிரம்மாண்டமாகத் தெரியும். வெகு அழகாகக் காட்சி விரியும். அதற்குக் காரணம் அவரிடம் இருக்கும் 'ஒழுங்கு' என்கிற செய்நேர்த்தி.

நான் எப்பொழுதுமே ஜாலியாக இருப்பவள். ஷூட்டிங் ஸ்பாட்டிலும் அப்படித்தான்.

பாரதிராஜா சார், ''இது எவ்வளவு முக்கியமான சீன் தெரியுமா? நீ என்னடான்னா, இப்படி அரட்டை அடிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கே?'' என்பார்.

'பசும்பொன்' படத்தில் நான் பிரபுவுக்கு அம்மா. அந்தக் கதாபாத்திரத்துக்கு எனக்கு ரோல் மாடலாக இருந்தவர் பாரதிராஜா சாரின் அம்மாதான். ''ராசா! என்னடா ராசா?'' என்றுதான் பேசுவார். ஒரு கிராமத்து அப்பாவி மனுஷி எப்படி இருப்பாரோ, அப்படி இருப்பார். அவருக்குப் பாசத்தைக் காட்டுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது.

'பசும்பொன்' படத்தில் நான் பிரபுவிடம், ''நீ

பாரதிராஜாவை



எல்லாருக்கும் எல்லாம் செய்யறே! நான் என் புள்ளையைத் தொலைச்சுட்டேன். என் புள்ளையை எனக்குத் தேடிக் குடுப்பா'' என்று சொல்லி அழ வேண்டும்.

வழக்கம்போல சிரித்துப் பேசிக் கொண்டு, ஜாலியாக இருந்தேன். டைரக்டர், ''ரொம்ப சீரியஸான சீன். நீயும் கொஞ்சம் சீரியஸா இரு'' என்றார்.

டேக்கின் போது, வசனத்தைச் சொல்லி விழுந்து அழுகிறேன். நடித்து முடித்துவிட்டுத் திரும்பிப்

அழவைத்தேன்!

பார்த்தால், பாரதிராஜா சார் அழுதுகொண்டிருக்கிறார். நான் பதறிப் போனேன்.

''ஏன் சார் அழறீங்க?''

''நீ இவ்வளவு கேலி, கிண்டல் எல்லாம் பண்ணிக்கிட்டு எப்பவும் ஜாலியா இருக்கே! நடிக்க வேண்டிய இடத்துல சரியா பண்ணிடறே!'' என்றார்.

அதேபோல அந்தப் படத்தில் இன்னொரு சாவுக் காட்சியிலும் அப்படித்தான். விடியற்காலை ஆறு மணி. அப்போதுதான் சூரியன் தங்க நிறத்தில், மேலெழும்பும். அந்தச் சமயத்தில் அந்தக் காட்சியைப் படம்பிடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார் இயக்குநர். எல்லோரும் பரபரப்பாக, தயாராக இருந்தார்கள். நான் இயக்குநரிடம், ''என்ன சார்! டிஃபன் சாப்பிட்டீங்களா?'' என்று கேலி பேசிக்கொண்டு இருந்தேன். அந்தக் காட்சியில் நான் நடித்ததும் சரியாக வந்தது. பாரதிராஜா சார் ஆச்சரியப்பட்டுப் போனார். இதற்கெல்லாம் காரணம், எனக்கு என் மீதிருந்த நம்பிக்கை.

ஒருநாள், நானும் பாரதிராஜா சாரும் பேசிக்கொண்டிருந்தபோது கேட்டேன் : ''சார்! நான் அப்போ ஒரு நடிகை மாதிரியே இருக்க மாட்டேன். குண்டா வேற இருந்தேன். எப்படி சார் என்னை செலக்ட் பண்ணினீங்க?''

அவர் சொன்னார் : ''அப்போ நானே கத்துக்கிட்டுதான் இருந்தேன்.''


அது நூற்றுக்கு நூறு உண்மை. நாம் எல்லோ

ருமே வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டுமானால், கற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

டி.வி. புரொடக்ஷன் ஹவுஸை நடத்துவது என்பது வித்தியாசமான போராட்டம். நான் நிறையப் பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு பக்கம் தொழில் பிரச்னை, மறுபக்கம் பணப் பிரச்னை. சன் டி.வி.யில் ஆரம்பத்தில் 'ஃபண்டட் புரோக்ராம்' என்று பணம் கொடுத்தார்கள். பிறகு, திடீரென்று ஃபண்டை நிறுத்திவிட்டார்கள். 'பணம் கொடுக்கிறேன். சுவற்றில் கையெழுத்துப் போடு' என்று யாராவது சொல்லியிருந்தால்கூடப் போட்டிருப்பேன்.

'நடிகை' என்ற விதத்தில் எல்லோருமே எனக்கு மரியாதை கொடுத்தார்கள். ஆனால் ஒரு தொழில், அதன் தயாரிப்பாளர் என்று வந்தபோது அவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை.

ஆனால், நான் தெளிவாக இருந்தேன். சீரியல் தயாரிப்புத் தொழிலை ஒரு புரொஃபஷனாகச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். பிரச்னைகளைச் சரிசெய்வதற்குத்தான் 'நிறுவனமாக்கல்' (Corporatization) செய்வது என்று முடிவு செய்தேன். ஒழுங்கு, எல்லாவற்றிலும் ஒழுங்கு.



தினம் தினம் 'சித்தி'யை லட்சக்கணக்கானோரைப் பார்க்கத் தூண்டியது அந்த ஒழுங்குதான். இன்னொரு காரணம், அந்த ஒழுங்கால் வந்த கூட்டு முயற்சி, உழைப்பு.

கூட்டு முயற்சியில் வெற்றி பெறுவதுதான் சினிமாவிலும் தொலைக்காட்சியிலும் சாத்தியமாகும்.

ஒரு யூனிட்டில் இருப்பவர்கள், அவரவர் வேலையைச் சரியாகச் செய்தாலே போதும். எல்லாமே சரியாகிவிடும். இதை நான் உணர்ந்திருந்தேன். ஓர் ஒழுங்கைக் கொண்டு வந்தேன். 'சித்தி' தொடருக்கான வெற்றியில் என் யூனிட்டில் இருந்த ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.

சமீபத்தில் என் மகள் என் பழைய படங்கள் சிலவற்றை என்னிடம் காட்டி, ''எப்படி இருக்கீங்க பாருங்கம்மா!'' என்று ஆச்சரியப்பட்டுச் சொன்னாள்.

பாரதிராஜாவிடம் ''எப்படி சார் என்னை நடிக்க செலக்ட் பண்ணுனீங்க!'' என்று கேட்டேன்.

எனக்கே, நான் நடித்த சில படங்களை ரொம்பப் பிடிக்கும். அப்படி ஒரு படத்தைத்தான் அன்றைக்கு என் மகள் காட்டியிருந்தாள். அந்தப் படத்தின் பெயர் 'ஸ்வாதி முத்யம்.'

(ரயில் வரும்)

எழுத்தாக்கம் : **பாலுசத்யா**



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது



'சிரிப்பும் கண்ணீரும்'

'குழந்தைக் குலத்துக்கு விடுதலை'


(கல்விச் சிந்தனைகள்)

- அமரர் கல்கி எழுதிய இருநூல்கள் அறிமுகம்

தலைமை :

திரு விட்டல் ஐ.ஏ.எஸ்.

(முன்னாள் பிரதம விஜிலன்ஸ் அதிகாரி)



வாழ்த்துரை : **ஓவியர் கோபுலு**

'பாரதி கண்ட ஆறு சமயம்'

திருமதி **கௌசல்யா சிவகுமார்** அவர்களின் இசைப் பேருரை

05.12.2008, வெள்ளிக்கிழமை

மாலை : 6.00 மணி

அமரர் கல்கி நினைவு நாள்

ஆஸ்திக சமாஜம் அரங்கம், வீனஸ் காலனி,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018

அனைவரும் வருக!

ஐ.ஐ.டி. வளாகம் செக்யூரிட்டி பிரிவில் பணிபுரியும் சுப்பிரமணியம், டியூட்டி நேரம் போக, மற்ற நேரங்களில் வெண்ணிற ஆடையுடன் உலவும் துறவி. ஐ.ஐ.டி.யில் அவரது அடையாளமே 'சாமி' சுப்பிரமணியம்தான்!

நாற்பத்தேழு வயது. வயதைத் தோற்கடிக்கும் அழகு; இளமை.

''இந்த அழகும், இளமையும் தவத்தால் கிடைத்தது'' என்கிறார் கறுப்புநிற மாருதி ஸென் காரை லாகவமாகச் செலுத்தியபடி. காரின் முன்னும் பின்னும் அருட்பெரும் ஜோதி வாசகங்கள்.

''சாமியார் என்றாலே, அதுவும் வள்ளலார் சாமி என்றாலே வறுமையால் பீடிக்கப்பட்ட வயதான ஆசாமி என்ற ஒரு பிம்பம் இருக்கிறது. அதை உடைக்கத்தான் இந்த ஹை-டெக் சமாச்சாரங்கள்'' என்று புன்னகைக்கிறார்.

செங்கல்பட்டுக்கு அருகில் இருக்கும் குளத்தஞ்சேரி என்ற குக்கிராமத்தில் பிறந்த சுப்பிரமணியத்துக்கு, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆவது இளமைக் கால இலட்சியம்!

''கடைசியில் ஐ.ஐ.டி.யில் 1600 ரூபாய் சம்பளத்தில் செக்யூரிட்டி வேலைதான் கிடைத்தது. எனக்கு ஏற்பட்ட ஏமாற்றமும் வருத்தமும் கொஞ்சமல்ல. இந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு சென்னையில் நான் எப்படி வாழப் போகிறேன்? என்று அப்படியே உடைந்து போனேன்!'' என்றவரிடம்,

''வள்ளலார் மீது எப்படி நாட்டம் ஏற்பட்டது?'' என்று கேட்டால்,

''செக்யூரிட்டி வேலையில் கிடைத்த தனிமையையும் ஒய்வையும் புத்தகங்கள் படிப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டேன். அப்போதுதான் தற்செயலாக திருவருட்பா எனக்குப் படிக்கக் கிடைத்தது.

'என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்' என்று கம்பீரமாக ஒலித்த வள்ளல்பெருமானின் வாக்கும் வாழ்க்கையும் என்னை ஆனந்தக்கூத்தாட வைத்தன.



''ஐ.ஐ.டி. சாமியார்!''

அருட்பா படித்த பிறகு, செக்யூரிட்டி வேலை காரணமாக ஏற்பட்ட வருத்தம் போய்விட்டது. இங்கே இருக்கிற பேராசிரியர்கள், பெரிய அதிகாரிகள் இவர்கள் படிப்பாலும் பதவியாலும் ஆன்மாவுக்கு ஒரு பயனும் இல்லையே என்று வருந்த ஆரம்பித்துவிட்டேன்'' என்கிறார்.

''துறவு எண்ணம் எப்படி ஏற்பட்டது?''

''திருவண்ணாமலை தீபத்துக்குப் போயிருந்தேன். கோயிலுக்குள் நுழையும் போது என்னை வழிமறித்த ஒருவர், உள்ளே போனால் துறவி ஆகிவிடுவாய் திரும்பிப் போ என்றார். நான் கோயிலுக்குள்தான் சென்றேன். வெளியே வந்ததும் வடலூர் செல்லும் ஆசை வந்தது!''

''ம்... அப்புறம்?''

''வடலூர் மேட்டுக்குப்பத்தில் வள்ளலார் சித்தியடைந்த சித்திவளாகத்தில் வழிபட்ட போது அங்கிருந்த பூசகர், உடல் நலம் குன்றிய தன் தாயைப் பார்த்துவர, அவர் திரும்பும் வரை இரண்டு நாட்கள் என்னிடம் நிர்வாகத்துக்குத் தெரியாமல் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றார். தீபம் ஏற்றுவது, விபூதி கொடுப்பது, வெள்ளாடை உடுப்பது எல்லாம் கற்றுக் கொடுத்துச் சென்றார். இந்தப் பேறு யாருக்குக் கிடைக்கும்? வள்ளல்பெருமானே ஆட்கொண்டு தீட்சை கொடுத்து என்னைத் துறவி ஆக்கியதாக ஓர் உறுதி எனக்கு உண்டாயிற்று...''

''உங்கள் ஆகார நியமமெல்லாம் எப்படி?''

''1987லிருந்து சாதம் உண்பதில்லை. கரிசலாங்கண்ணி மூலிகையை நிழலில் உலர்த்தி, பொடி செய்து வெல்லம் சேர்த்து காய்ச்சிப் பருகுவதோடு சரி. இப்போது கொஞ்சம் பால் சேர்த்துக் கொள்கிறேன்; பழங்களும் சாப்பிடுகிறேன். இரவு நித்திரை, ஒரு மணி நேரம் மட்டுமே'' என்று ஆச்சர்யப்படுத்துகிறார்.

''நம்மை நஷ்டப்படுத்துபவை நான்கு விஷயங்கள் என்று சொல்கிறார் வள்ளலார். ஆகாரம், தூக்கம், மைதுனம், பயம்! ஆகாரம் அரை, தூக்கம் கால், மைதுனம் வீசம், பயம் பூஜ்யம் ஆகப் பெறுதல் வேண்டும்! முன்பெல்லாம் மாத ஊதியம் முழுமையும் உணவாக்கி ஏழைகளுக்கு வழங்குவது உண்டு. இப்போது மாதம் தோறும் 500 பேருக்குக் குறையாமல் உணவளிக்க முடிகிறது. நல்ல உள்ளங்கள் பல எனக்கு இம்முயற்சியில் உதவுகின்றன. குறிப்பாக ஐ.ஐ.டி. இயக்குநரின் துணைவியார் ஜெயஸ்ரீ ஆனந்த் என் முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுப்பதால் பல நல்ல காரியங்களைச் செய்ய முடிகிறது. என்னைப் பார்த்து பலரும் வள்ளலார் வழி நடக்கவும், ஏழை எளிய மக்களுக்கு உதவவும் ஆரம்பித்திருக்கிறார்கள். இது போதும் எனக்கு! அருட்பெரும் ஜோதி... தனிப் பெரும் கருணை!'' முணுமுணுக்கிறார் ஐ.ஐ.டி. சாமியார்!

- கிருஷ்ணகாந்தன்

‘‘எல்லா பொண்டுகளும் ஒரே கலர்ல ரவிக்கைச் சேலை கட்டிக்கிட்டு, பஸ்ஸேறி அடிக்கடி திண்டுக்கல்லு போய்ட்டு வர்றாளுக. என்னமோ பெருசா சாதிக்கப்போற மாதிரின்னு ஊர்ல உள்ள மத்த பொண்டுக (எல்லாம் பொறாமை!) எங்களைப் பார்த்து ஏளனம் செஞ்சாங்க. இப்ப அவங்க மட்டுமில்ல, ஊரு சனங் களே எங்கள தென்னை மர உசரத்துக்கு அண்ணாந்து பார்க்கு றாங்க. காரணம், தென்னை மரங்கதான்’’ என்று கோரசாகக் குரல் தருகின்றனர், அந்த மகளிர் சுய உதவிக் குழு பெண்கள்.


சுமதி

திண்டுக்கல் மாவட்டம், கொடை ரோடு அருகே கே. இராஜதானிக் கோட்டை கிராமம். ஊரிலிருக்கும் ஏழு மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒன்றி ணைந்து, கடந்த நான்கு வருடங்களாக தென்னந்தோப்புகளைக் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகின்றன.

‘‘சக்தி டிரஸ்ட் எங்களுக்கு இந்த வழியைக் காட்டிய மொதல் மூணு வருஷத்துல குத்தகைப் பணம் போக, வந்த லாபப் பணத்துல அவங்கவங்க வீட்டுக்கடனை அடைச்சுட்டோம். சுழல் முறையில வங்கிக் கடன் வாங்கி, குத்தகை பணம் தந்தது போக மீதி பணத்துல தோப்புக்கு உழவு, எரு, உரம், பராமரிப்புனு செலவாகிப் போச்சு.

மொத மூணு வருஷம் ரொம்பக் கஷ்டப்பட்டோம். அப்புறம் போகப் போக அந்தக் கஷ்டமெல் லாம் ரொம்ப இலகுவா போச்சு. பிள்ளைகள நல்லாப் படிக்கவைக்க முடியுது. புத்தகம், நோட்டு, ஸ்கூல் ஃபீசு செலவுக்குன்னு நாங்க யாரும் வெளில கடன் வாங்கறது இல்ல!’’ என்கிறார் அன்னை சந்தியா மகளிர் சுய உதவிக் குழு தலைவி எஸ். சுமதி.

சிறுமலை அடிவாரத்தில் மொத்தம் ஐந்து தென்னந்தோப்புகள்; சுமார் இரண் டாயிரம் தென்னை மரங்கள். ஏழு மகளிர்



தெம்பு தந்த

சுய உதவிக் குழுக்களின் பெண்களில் பெரும்பாலோர் வெளியே எங்கும் வேலைக்குப் போகாமல், குத்தகை தோப்புகளிலேயே வேலை பார்க்கின்றனர். அதற்கான கூலியை அவ்வப்போது பிரித்து எடுத்துக் கொள்கிறார்கள். 'வேலைக்கு வேலை. சொந்தமா தொழிலுக்கு தொழில்! எல்லாமே எங்க கையிலே' என்கின்றனர்.



* ஈஸ்வரி

''இருபது வயசுக்குள்ள உள்ளது இளமரம். அதுல வருஷத்துக்கு அஞ்சு வெட்டுதான் தேங்கா வெட்ட முடியும். இருபது வயசுக்கு மேல உள்ளது மிதி மரம். அதாவது மூத்த மரம். இதுல ரெகுலரா வெட்டினா வருஷத்துக்கு ஏழு வெட்டு தேங்கா வெட்டலாம். ஒரு வெட்டுக்கு மரத்துக்கு சராசரியா முப்பது காய்கள் விழும். சில மரங்கள்ல கம்மியாவும் விழும். சாதா நேரத்துல ஒரு காய் மூணு ரூபாய். விசேஷ காலங்கள்ல நாலு ரூபாய்னு பெரிய வியாபாரிங்க திண்டுக்கல்லேர்ந்து வந்து வாங்கிட்டுப் போவாங்க.

தென்னை மரத்துலேர்ந்து கிடைக்கிற காய்ஞ்ச மட்டைய கிடுகு பின்னி விப்போம். அடிமட்டைங்கிற செக்கு மட்டைய வீட்ல அடுப்பு எரிக்க வாங்கிட்டுப் போவாங்க. குடிசை போடவும், பந்தல் போடவும் கட்டுக் கயிறாக, தென்ளம்பாளைக் கயிற்றை வித்திடுவோம். தென்னையிலேர்ந்து விளையிற எல்லாத்துலயும் வருவாய் இருக்கு.

இந்த வருஷத்துக்கான குத்தகைப் பணத்தைக் கட்டிட்டோம். மிச்ச பணத்தை நாங்க எல்லாரும் பிரிச்சு எடுத்துக்கிட்டோம். சங்கத்துக்குன்னு கொஞ்சம் பணத்தை பேங்க்ல சேமிச்சு வைச்சிருக்கோம். எல்லோரும் கைகோர்த்தா... எதையும் சாதிக்கலாம்ங்கறதுக்கு எங்க ஊரு மகளிர் சுய உதவிக் குழுப் பெண்கள் சிறந்த அடையாளம்!'' என்கிறார் அன்னை சத்யா மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவி பா. ஈஸ்வரி.

- புதியவன்



தென்னை மரம்!

அமரர் கல்கி

ஒரு கனவு



''அடாடா! இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே!'' என்று பெரிதும் தவித்துப் போனேன். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுத கதையாக அல்லவா போயிற்று? உலகத்தையே வென்று விடுவதற்குரிய உபாயம் கையில் இருக்க, இந்தியாவிலுள்ள ஒன்றரை லட்சம் வெள்ளைக்காரர்களை வென்று சுயராஜ்யம் சம்பாதிப்பதுதானா ஒரு பெரிய காரியம்? - காங்கிரஸ்வாதிகள், மிதவாதிகள் எல்லாரும் முழித்துக்கொண்டு நிற்கட்டும்; நாம் முந்திக்கொண்டு இந்தியாவுக்குப் பூரண சுதந்திரத்தை அளித்துவிடுவோம் என்று நிச்சயம் செய்தேன்.

உடனே, படை திரட்டும் முயற்சி ஆரம்பமாயிற்று. சிலருக்குப் பணத்தாசை காட்டியும், சிலருக்குப் புகழ் ஆசை ஊட்டியும், வேறு சிலரைப் பயமுறுத்தியும், மற்றும் சிலரைப் பலாத்காரப்படுத்தியும் கொண்டு சேர்க்கவேண்டியிருந்தது. கடைசியாக, ஒரு பெரிய படை திரண்டுவிட்டது.

ஆனால், உலக சரித்திரத்திலேயே இதைப் போன்ற கட்டுக்கடங்காத போர் வீரர் படை இருந்திராது என்று சொல்வேன்.

இப்பேர்ப்பட்ட சைன்யத்தை வைத்துக்கொண்டு, கட்டுப்பாட்டிலும் ஆயுத பலத்திலும் நிகரற்ற பிரிட்டிஷாரை வெல்லுவதற்குக் கிளம்பின என்பேரில் அநுதாபப்படுகிறீர்களல்லவா? உண்மைதான், ஆயினும் நான் திரட்டிய இந்தச் சைன்யம் ஒன்றினாலேயே அவர்களை வெல்லமுடியும் என்ற திட நிச்சயத்தினால்தான் இதில் தலையிட்டேன்.

முதன் முதலில், சென்னைக் கடற்கரையோரமுள்ள ஸெய்ண்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் போனோம். நானும் படைக்குப் பின்னால் பத்திரமான இடத்தில் நின்றுகொண்டு ''தாக்குங்கள்'' என்று உத்திரவு பிறப்பித்தேன்.



கோட்டைக்குள் அப்போது ஏற்பட்ட கலக்கத்தைப் பார்க்க வேண்டுமே, நீங்கள்? எதிரிகள் தாக்கத் தொடங்கியதும் ஆங்கில ஸோல்ஜர்கள் விழுந்தடித்து ஓடிய இந்த அபூர்வக் காட்சியைப் போல் இதற்கு முன் யாரும் பார்த்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

அப்புறம், எங்களுடைய திக்விஜயம் ஆரம்பமாயிற்று. சென்ற இடமெல்லாம் வெற்றி, வெற்றி, வெற்றியே.

பல்லாவரத்திலும், பங்களூர் தண்டிலும் இருந்த ஆங்கில ஸோல்ஜர்கள் சென்னைக் கோட்டையிலிருந்தவர்களைப் போலவே எங்கள் சுதந்திரப் படை தாக்க ஆரம்பித்ததும் ஓடிவிட்டார்கள்.

கடைசியாக, டெல்லிக்குப் போய்ச் சேர்ந்தோம். அதற்குள் சகல மாகாண கவர்னர்களும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். எல்லோரும் இரவுபகலாக எங்களுடைய படையெடுப்பை எப்படித் தடுப்பது என்பது பற்றி யோசனை செய்து கொண்டிருந்ததாகத் தெரிந்தது.

டில்லிக்கு வெளியில் நாங்கள் இருந்த போதே ஆங்கிலப் படைகள் எங்களை எதிர்க்க வந்தன.

ஆனால் அதெல்லாம் எங்களிடம் பலிக்குமா? ''தாக்குங்கள்'' என்று உத்திரவு பிறந்தது. சுதந்திரப் படைவீரர்கள் தாக்கத் தொடங்கினார்களோ, இல்லையோ,

ஸோல்ஜர்களின் காதில் இருந்த பஞ்சுக் கத்தைகளெல்லாம் பொலபொலவென்று கீழே விழுந்துவிட்டன. பார்க்க வேண்டுமே அவர்களுடைய ஓட்டத்தை!

பிறகு, சமாதானத்துக்கு அறிகுறியான வெள்ளைக் கொடியுடன் ஒரு தூதுவன் வந்தான். தாங்கள் பம்பாய்க்குச் சென்று கப்பலேறிப் போய் விடுவதாகவும், போகுங் காலையில் எவ்விதத் தொந்திரவும் செய்யக்கூடாதென்றும் அதில் கேட்டிருந்தார்கள்.

பம்பாய்வாசிகள் என்றும் காணாத காட்சியைக் கண்டார்கள். இந்தியாவிலிருந்த வெள்ளைக்காரர்கள் அவ்வளவு பேரும் தங்கள் நகருக்கு வந்து அவசர அவசரமாய்க் கப்பல் ஏறுவதைப் பார்த்தார்கள். கப்பல் கிளம்பக் கொஞ்சம் தாமதமாயிற்று. எனவே, ''தாக்குங்கள்'' என்று மறுபடி உத்திரவிட்டேன். அவ்வளவுதான், வைஸ்ராய் வில்லிங்டன் கப்பல் மேல்தளத்துக்கு வந்து துயரம் ததும்பிய முகத்துடன் ''போய் வருகிறோம்!'' என்று சமிக்ஞையால் தெரிவித்தார். கப்பல்கள் கிளம்பின.



டில்லியில் இந்தியாவின் பூரண சுதந்திர அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. தேச மக்கள் நன்றியறிதலுடனே எங்களுடைய ஞாபகார்த்தமாக ஒரு பெரிய ஜயஸ்தம்பம் நாட்டினார்கள். அதிலே பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :

''இந்தியாவின் விடுதலைக்காகத் தமது செவிப்புலனைத் தத்தம் செய்து முழுச் செவிடாய்ப் போன கல்கிக்கும், அவருடைய தலைமையில் கத்தியின்றி இரத்தமின்றித் தங்கள் தொண்டையின் வலிவையும், கரங்களின் பலத்தையும் கொண்டே யுத்தம் செய்து பூரண சுதந்திரத்தை நிலைநாட்டிய வீரர்களுக்கும் ஞாபகச் சின்னம்.''

இதற்குக் கீழே யுத்த வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சென்னையில், இந்த வாரத்தில் மியூஸிக் அகாடமி, ஃபைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி இவ்விரண்டு சபைகளின் ஆதரவிலும் கச்சேரி நடத்திய தென்னாட்டுப் பாடகர்கள், வாத்தியக்காரர்கள் அனைவருடைய பெயர்களும் இருந்தன. பின்னர், டாக்கி நட்சத்திரங்கள், நாடக மேடைத் திலகங்கள், கிராமபோன் பிரசித்திபெற்ற குயில்கள், கிளிகள் எல்லாருடைய பெயர்களும் இருந்தன.

ஆமாம்; எவ்வளவோ முன் ஜாக்கிரதையுடன் படைக்கு வெகுதூரம் பின்னாலேயே நான் இருந்து வந்தும், செவிகளைப் பறிகொடுத்தேன். ஆனாலும் என்ன? இந்தியாவின் சுதந்திரத்துக்காக இந்தத் தியாகம் செய்வது ஒரு பெரிதா? மேலும் இன்னொரு அனுகூலமும் இருக்கிறதே? இனிமேல் சங்கீதம் கேட்க வேண்டாமே?

''அம்மா!'' என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன். வாசலில் பால்காரன் ஓட்டிச் சென்ற எருமை மாட்டின் குரல் அது. நல்லவேளை! காது செவிடாகவில்லை. இதை எண்ணியபோது எருமையின் குரல் கூடக் கர்ணாமிர்தமாயிருந்தது.

காலையில் கண்ட சொப்பனம் பலிக்கும் என்பார்கள். ஒருவேளை இதுவும் பலிக்குமோ, என்னமோ?

– ஆனந்த விகடன், 30.12.1934

கல்கி யின் காலேஜ் விசிட்!

இது எங்க ஏரியா...
வாக்களிக்க வாங்க ஜாலியா...



கால்ல சக்கரம் கட்டியாச்சு!
கைகுலுக்கப் புறப்பட்டாச்சு...



- காலேஜுக்கு வர்றோம்... எலக்ஷன் நடக்கும்!
- நீங்க வோட்டுப் போடறீங்க...
- அசத்தப் போகும் ஆல்ரவுண்டர் யாரு?
- ஜெயிக்கப் போகும் ஹீரோ யாரு?
- 'பட்டு'ன்னு சொல்லிப் பரிசு கொடுப்போம்..!

நீங்களும் உங்க காலேஜும்
நெசமாவே ஹீரோவா?

அடுத்த வாரம் மோர் டீடெய்ல்ஸ்...



சினி சிப்ஸ்

''தெலுங்குப் படங்களில் முன்னணி ஹீரோவாக நடித்துக்கொண்டிருக்கும் எனக்கு, தமிழில் சரியான வாய்ப்பு அமையவில்லை. என்னை வைத்து யாரும் படம் இயக்க முன் வரவில்லை. தமிழனாய்ப் பிறந்த எனக்கு இதில் சற்று வருத்தம்தான். எனவே, நானே எனக்குக் கதை தயார் செய்து இயக்க ஆரம்பித்திருக்கிறேன்'' என்கிறார் நடிகர் ஆகாஷ். படத்தின் பெயர் : மதன்!

இலக்கியப் பேச்சாளர் நெல்லை கண்ணனின் மகன் சுரேஷ் கண்ணன் - பாலுமகேந்திராவிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர். தற்போது நடிகர் ஆர்யா தயாரிப்பில் முற்றிலும் புதுமுகங்களைக் கொண்டு ஒரு படத்தை இயக்கவிருக்கிறார். கதையைக் கேட்டவுடன் இசையமைக்க ஒப்புக்கொண்டாராம் இளையராஜா.

'சுப்பிரமணியபுரம்' ஜெய் ஹீரோவாக நடிக்கும் படம் 'அவள் பெயர் தமிழரசி'. தங்கர்பச்சான், பாலுமகேந்திரா, லோகிததாஸ் போன்றோரிடம் சினிமா கற்றுக்கொண்ட மீரா கதிரவன்தான் இப்படத்தின் இயக்குநர். இதில் என்ன விசேஷமெனில் இலக்கியமும் சினிமாவும் நடிப்பில் கைகோக்கின்றன. எழுத்தாளர் தியோடர் பாஸ்கரனும், நவீன ஓவியர் வீர சந்தானமும் முக்கிய வேடங்களில் நடிக்க இருக்கின்றனராம்.

'மகாநதி' சங்கரைக் கதாநாயகனாக வைத்து வீரப்பன் சுற்றித் திரிந்த காட்டுப்பகுதியில் முதல்கட்ட படப்பிடிப்பை முடித்துத் திரும்பியிருக்கிறார் இயக்குநர் பி.ஏ. வினோபா. இவர் எடிட்டர் ஆர்.டி. அண்ணாதுரையின் உதவியாளராக இருந்தவர். ஆபாவாணனுக்குப் பிறகு ஒரு புதிய அலை கோலிவுட்டில் துவங்கிவிட்டது என்கிறார்.

■ நியூஸ் பாய்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57"Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

WORLD GOLD COUNCIL

gold

எக்ஸ்சேஞ்ச் மூலம் உங்களுடைய பழைய நகைகளுக்கு முழு மதிப்பு பெறுங்கள். ஏன் அதற்கும் மேலேயும் கூட.



உங்களுடைய பழைய நகைகளை சுத்தமான தங்க நகைகளுக்கு எக்ஸ்சேஞ்ச் செய்துகொள்ளுங்கள் மற்றும் அதற்கு முழு மதிப்புப் பெறுங்கள். நீங்கள் கொண்டு வரும் நகையின் காரட்டுக்கு ஏற்ப செய்கூலியில் தள்ளுபடியும் பெறுங்கள். உங்கள் பழைய நகைகளை லாபகரமாக மாற்றிக்கொள்ள உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு.

சலுகை – டிசம்பர் 12, வரை மட்டுமே!

கோல்டுபிளஸ்
GOLDPLUS from TATA
ஜுவல்லரி ஷோரூம்
உங்கள் வாக்குறுதிகள் நிறைவேறும்.

தமிழகத்தில் அதிக கிளைகள் கொண்ட ஒரே ஜுவெல்லரி ஸ்தாபனம்

• ஈரோடு: 0424-2250298 • விழுப்புரம்: 04146-222688 • திண்டுக்கல்: 0451-2440066 • நாகர்கோவில்: 04652-230043 • தஞ்சாவூர்: 04362-270885 • திருப்பூர்: 0421-6455330 • கரூர்: 04324-645454 • திருநெல்வேலி: 0462-6456555 • வேலூர்: 0416-2229265 • புதுக்கோட்டை: 04322-224567 • மார்த்தாண்டம்: 04651-271016 • சிவகாசி: 04562-233055 • கும்பகோணம்: 0435-2403063 • பட்டுக்கோட்டை: 04373-253924 • மயிலாடுதுறை: 04364-327666 • காரைக்குடி: 04565-233699.